லிங்கம்ஸ்
Dortmund இல் ஆடை, நகை தேவைகளுக்கும் அசல் 22 கரட் தங்க நகை அதிதேர்வுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
லிங்கம் ஆசியன் மாக்ற்
Pub

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly
முரசு: 5 | 05 – 11 ஒகஸ்ட் 1999 | முழக்கம்: 238

Linkams
உங்கள் பழைய பவுணுக்கு மாற்றீடாக புதிய பவுண் மாற்றித் தரப்படும்.
Linkams Asian Market
Adler Str-5,44137
Dortmund.
Tel: 0231 - 143811
Fax: 0231 - 143811
Pub

# மூத்த தளபதிகளின் நேரடிப் பயிற்சியில் பூநகரியில் புலிகளின் பாரிய ஒத்திகை

(02.08.99)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் நேரடி வழிகாட்டலில் பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அணிகள் பாரிய தாக்குதல் ஒத்திகை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரியவருகின்றது. இராணுவத்தினரின் காவலரண்கள், பதுங்குகுழிகள் போன்ற நூற்றுக்கணக்கான மாதிரி நிலைகள் (டமி) அமைக்கப்பட்டு போராளிகள் அவற்றின் மீதான தாக்குதல் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் இந்த பயிற்சிகுறித்து சிறீலங்கா இராணுவ புலனாய்வுத்துறைக்கு தகவல் எட்டியுள்ளதால் விடுதலைப் புலிகள் குடாநாட்டின் மீது பாரிய தாக்குதலை தொடுக்கலாம் என்ற அச்சத்தில் குடாநாட்டின் கரையோரப்பகுதிகளில் அவசரமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இளாலி கடற்பகுதியிலும் யாழ். கடல்நீரேரிப்பகுதியிலும் சிறீலங்காப் கடற்படையினர் 24 மணி நேர ரோந்தினையும் மேற்கொண்டுவருகின்றனர்.

சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரெல் சிறீலால் ஜெயசூரிய பலாலி படைத்தளத்திற்கு முக்கிய இராணுவ அதிகாரிகள் சகிதம் சென்று அவசர ஆலோசனைகளை நடாத்தி விட்டு கொழும்பு திரும்பிய பின்னர் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாங்கள் உசார்

(☞ 2ம் பக்கம்)

## வன்னியில் பெரும் போர் மூளலாம்

### புலிகளை மேற்கு நாடுகள் கட்டுப்படுத்த வேண்டும்

### கதிர்காமர்– மேஜர் பலகெல கூட்டு மாநாடு

வன்னியில் சிறீலங்கா அரசு பெருமளவிலான சமரை நடாத்துவதற்கு தயாராகி வருகின்றது. வன்னிக்கான உணவு விநியோகத்தைத் திட்டமிட்டு தடுத்து வரும் இராணுவம், புலிகளுடனான பேச்சுக்கள் தோல்வி என அறிவித்து நடவடிக்கைகளை இராணுவம் ஆரம்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செய்தியாளர்களைக் கூட்டாகச சந்தித்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் வன்னிக்கான தளபதி மேஜர் ஜெனரல் பலகெலவும் விரைவில் சண்டைகள் ஆரம்பமாகலாம் என்பதை உறுதிப்படுத்தி உள்ளனர்.

வன்னிக்கான உணவு விநியோகத்திற்கு எதிராக எழுந்துள்ள சர்வதேச விசனத்தைப் பற்றிய விடயத்தை விளக்குவதற்காக செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர், புலிகளை வெல்ல

(☞ 2ம் பக்கம்)

## நோயாளர் போக்குவரத்திற்கு மட்டும் கடல்வழி பாதைக்கு அனுமதி

(02.08.99)

வன்னிக்கான போக்குவரத்து பாதை ஒன்று திறக்கப்படும் வரை கடல் மார்க்கமாக அவசர நோயாளர்களை மன்னாருக்கு அழைத்துவருவதற்கு செஞ்சிலுவைச் சங்கம் இணங்கியுள்ளது. இத் திட்டத்தின்படி, செஞ்சிலுவை சங்க வழித்துணையுடன் அவசர நோயாளர்கள் கடல் வழி பாதையால் மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். வன்னியில் விடத்தல்தீவு பகுதியில் இருந்து புறப்பட்டு மன்

(☞ 2ம் பக்கம்)

**வன்னிக்கான சிறிலங்கா அரசின் போக்குவரத்துத் தடையால் மருத்துவ வசதியின்றி இதுவரை 16 பேர் மரணம்**

## ஐ.நாவை நோக்கி அணிதிரள புகலிடத் தமிழர்களுக்கு வேண்டுகோள்

எதிர்வரும் 9ம் திகதி திங்கள் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு ஜெனிவா தொடருந்து நிலையத்தில் இருந்து ஐ.நாவை நோக்கி செல்லும் அமைதிப் பேரணியில் புகலிடத் தமிழர்கள் கலந்துகொள்ள வேண்டும் என அனைத்துத் தரப்பினரும் வேண்டியுள்ளனர்.

சுவிஸ் நாடு அல்லாத ஏனைய ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்காக இதற்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழீழ மக்களுக்கு சிறீலங்கா இராணுவம் தொடர்ச்சியாகப் புரியும் இன அழிப்பை உடன் நிறுத்தக் கோரியும், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் இருந்து சிங்களத் துருப்புக்களை உடனடியாக வெளியேற்றக் கோரியும், தமிழர்களின் தன்னாட்சி உரிமையையும், ஆயுதப் போராட்டத்தினையும் ஐநா அங்கீகரிக்கவேண்டும் என்பவையே இப் பேரணியின் நோக்கமாகும். மேலதிக விபரங்களுக்கு 30ம் பக்கம் பார்க்க



01.08.99 அன்று பாரிசில் நடைபெற்ற பிரான்ஸ் மாவீரர் நாள்–99 மெய்வல்லுனர் போட்டியிலிருந்து.

## தமிழ் மக்களுக்காக உயிரை பணயம் வைக்க முடியாது

### – கொழும்புத் தமிழ் குழுக்கள் –

நான் களைப்படைந்து விட்டேன். விரக்தியடைந்து விட்டேன். புலிகளின் அநியாயத்திற்கு எதிராக தமிழ்மக்கள் குரல் எழுப்புவதே இல்லை. புலிகள் போன்ற அமைப்பிற்கு இன்னமும் இடம் கொடுக்கும் தமிழ் மக்களிற்காக எமது உயிரை ஆபத்திற்கு உள்ளாக்குவது பிரயோசனமானதா? என ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் பிரேமசந்திரன் இந்திய பத்திரிகையாளர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் பலத்த ஆயுதங்களுடன் வாழும் தமிழ் குழுக்களின் தலைவர்கள் பயத்துடன் வாழ்வதாகவும் தமிழ் மக்கள் எது இடம் பெற்றாலும் புலிகளின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாகவே வாழ்வதாகவும் தெரிவித்துள்ள அச் செய்தியாளர் தமிழ் பத்திரிகைகள் புலிகளின் புகழைப் பாடுவதாகவும் பிற தமிழ் குழுக்கள் மீது வசைகளைப் பொழிகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

வரதராஜப் பெருமாள் தற்போது எங்கே உள்ளார் என்பது எவருக்கும் தெரியாது. ஒழிந்து வாழும் இவர் மிகுந்த இரகசியமாகவே வெளியே வருகின்றார்.

தனது வீடும் பணிமனையும் ஒன்றாக உள்ள இராணுவ முகாம் போன்ற இடத்தில் யன்னல்கள் இல்லாத அறையில் விருந்தினரை டக்ளஸ் தேவானந்தா சந்திப்பதாக தெரிவித்துள்ள செய்தியாளர் எப்போதும் நிருபர்களை சந்திக்கும் போது சுவருக்கு முன்னால் அமர்வதை உறுதிப்படுத்துகின்றார் எனக்

(☞ 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
38, Rue Saint Quention
75010 Paris. M°: Gare du Nord
Tel: 01 48 74 48 21 / 01 44 53 96 87
Fax: 01 49 70 06 32

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவன ஆசிரியர்:
அமரர் சு. சிறீதரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகளுக்கு

பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

இலண்டன்:
Leema
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vej - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ் மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

கனடா:
ஜெயந்தன் - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தமிழ்கடை
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:eesydney@one.net.au

# மன்னார் கடற்படைத் தளத்தை விஸ்தரிப்பதற்காக 50 ஏக்கர் காணி சுவீகரிப்பு

(02.08.99)

தலை மன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா கடற்படை தளத்தினை விஸ்தரிக்கும் நோக்குடன் 50 ஏக்கர் காணியை சிறிலங்கா அரசு சுவீகரிக் நடவடிக்கை எடுத்துவருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடற்படை தளத்தில் பாதுகாப்பினை கருதியே இந்நடவடிக்கையினை மேற்கொள்ள சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுவீகரிக்கப்பட்ட 50 ஏக்கர் காணியில் பெரும்பகுதி தனியார் காணிகளாகும். இக்காணிகளில் ஏற்கனவே மக்கள் வசித்துவருகின்றனர். கடற்படையின் சுவிகரிப்பு காரணமாக இவர்கள் தமது வதிவிடங்களையும் இழக்க வேண்டி நேரிடலாம் என தெரிய வருகின்றது. பியரின் மேற்கு பகுதியில் சுவீகரிக்கப்பட்ட இடத்தில் தற்போது கடற்படையினர் வேலியினை அமைத்துவருகின்றனர். இச் சுவீகரிப்பு தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என மன்னார் செயலகம் தெரிவித்துள்ளது. கடற்படையினர் தற்பொழுது வேலி அமைத்துள்ளதால் அங்கிருந்த மக்கள் கிழக்கு பகுதியினை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னியில்...

வேண்டுமாயின் புலிகளுக்கான சர்வதேச ஆதரவை உலக நாடுகள் தடுத்து நிறுத்தினால்தான் புலிகளை வெல்ல முடியும் எனத் தெரிவித்ததுடன், நீலன் திருச்செல்வத்தின் மறைவுக்காக செய்தி அனுப்பிய அமெரிக்க அதிபருக்கு நன்றிதெரிவித்தார். இது தனது அரசுக்குக் கிடைத்த வெற்றி என விபரித்த கதிர்காமர், வன்னிக்கு உணவை அனுப்புவதற்காகவே தமது படைகள் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாகக் கூறியுள்ளார்.

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்படும் சாத்தியங்கள் உள்ளதாக கூறிய அமைச்சர் அது இன்றைக்கோ நாளைக்கோ அல்ல எனவும் மக்கள் பேச்சுக்களை நடாத்துவதற்கு ஆதரவாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மூத்த தளபதிகளின்...

படுத்தப்பட்டுள்ளன. பூநகரியில் பயிற்சி எடுக்கும் விடுதலைப் புலிகளின் அணிகளில் சிறப்புப் பயிற்சி பெற்ற 'கொமோண்டோ' அணியினரும் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அணிகளுக்கு பொறுப்பாக உள்ள தளபதிகள் தமது அணிகள் மேற்கொள்ளும் பயிற்சியினை நேரடியாக பார்வையிடுவதுடன் ஆலோசனைகளை வழங்கிவருவதாகவும் கூறப்படுகின்றது. இப் பயிற்சி பாரிய தாக்குதலுக்காக மேற்கொள்ளப்படுவதுபோல அமைந்தாலும் புலிகளின் இலக்கு எது என்பதில் சிறிலங்கா இராணுவத் தலைமை குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது.

இராணுவ தரப்பிலிருந்து ஒரு சாரார் விடுதலைப் புலிகளின் இப் பயிற்சிகள் ஆனையிறவு மீதான தாக்குதலுக்காகவே என தெரிவிக்கின்றபோதிலும் இன்னொருசாரார், குடாநாட்டின் மீதான தாக்குதலுக்காவே எனவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் மக்கள்...

கூறுகின்றார்.

புளொட் சித்தார்த்தன் தனக்கு தனிப்பட்ட வாழ்வோ பொது வாழ்வோ கிடையாது எனத் தெரிவித்துள்ளார். ஒரு முறை சித்தார்த்தனுடன் வாகனமொன்றில் பயணம் செய்த சக பத்திரிகையாளர் ஒருவர் மோட்டார் சைக்கிள் ஒன்று தூரத்தில் வருவதைக் கண்டு சித்தார்த்தனின் பாதுகாவலர்கள் வாகனத்தை திருப்பியதாகவும் இதன் மூலம் ஆபத்தைக் குறைக்கலாம் என அவர்கள் கூறியதாகவும் தெரிவித்ததை செய்தியாளர் விபரித்துள்ளார்.

பிரபாகரனை அருகே இருந்து பார்த்த இக் குழுக்கள் பிரபாகரனுக்கு நீண்ட ஞாபக சக்தி உண்டு எனக் கருதுவதாக செய்தியாளர் கூறியுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நோயாளர்...

னார் பள்ளிமுனைப்பகுதிக்கு சென்றடைவதற்கு ஏற்றவாறு கடற்போக்குவரத்துகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதுவரை காமர் எட்டு நோயாளர்கள் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். தற்பொழுது ஆரம்பமாகியுள்ள கல்விபொது உயர்தர பரீட்சை வினாத்தாள்களை வன்னியில் ஒப்படைத்துவிட்டு திரும்பும் படகுகளிலேயே இவர்கள் மன்னாருக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். செஞ்சிலுவை சங்கத்தின் பேச்சாளர் இதுபற்றி தெரிவிக்கையில் நோயாளர் போக்குவரத்திற்கு மட்டும் தான் கடல்வழியான அனுமதி கிடைத்துள்ளது எனவும், உணவு மருந்து போன்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்



தவத்தின் பிரதிபலிப்பு: 16.08.1978

காலத்தின் நியதி: 28.07.1999

## சிவானந்தன் ஜனகன்

(வவுனியா)

வவுனியாவை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Clichy Sous Bois ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சிவானந்தன் ஜனகன், கடந்த 28.07.99 அன்று அகாலமரணமானார்.

இவர், திரு. திருமதி சிவானந்தம் தர்மதிலகவதி தம்பதிகளின் மூத்த மகனும், செல்வி ஜனனி, செல்வி ஜாழினி ஆகியோரின் அன்பு அண்ணனும் காலம் சென்ற முருகேசு தம்பதிகள், வவுனியாவில் வசிக்கும் திரு.திருமதி தர்மலிங்கம் தம்பதிகளின் அன்புப் பேரனும், பிரான்சில் வசிக்கும் திரு. த. பிரபாகரனின் அன்பு மருமகனும், திரு.திருமதி அருளானந்தம் தம்பதிகளின் பெறாமகனும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் புதன் கிழமை (04.08.99) அன்று CREMATORIM DE MONTFERMEIL

55, Rue de General Leclerc, 93370 Montfermeil என்னும் முகவரியில் நடைபெறும்.

மேலதிக தகவல்களுக்குப் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

01 43 88 04 47
06 60 48 89 51

தகவல்: அன்புப் பெற்றோர்

# சூரிய கிரகணமும் ஆடி அமாவாசையும்

எதிர்வரும் 11.08.99 புதன்கிழமை ஏற்படவிருக்கும் பூரண சூரிய கிரகணம் 1961-ம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்படுவதும், இந்த நூற்றாண்டின் இறுதி பூரண சூரிய கிரகணமுமாகும். இந்த சூரிய கிரகணம் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நோர்வே, டென்மார்க், இத்தாலி ஆகிய ஐரோப்பியநாடுகளில் தோற்றும். 99.4% தோற்றமளிக்கக் கூடியதான இந்த கிரகணம், பரிஸ் நகரத்தில் காலை 11 மணி 04 நிமிடம் தொடக்கம் பிற்பகல் 1 மணி 45 நிமிடம் வரை நீடிக்கும். கிரகண நட்சத்திரம் ஆயிலியம். கிரகணதோஷ நட்சத்திரங்கள் புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம், மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம், ரேவதி ஆகியன. எனவே இந்த பூரண சூரிய கிரகணம் தொடர்பாக பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம், அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஆலயம், சித்திவிநாயகர் ஆலயம் ஆகிய கோவில்கள் பகல்நேரம் பூட்டப்பட்டு, அன்று மாலை 5 மணியளவில் விஷேட பிராயச்சித்த அபிஷேகத்துடன் கிரகண பூஜை இடம்பெறும்.

ஆடி அமாவாசை விரதம் இந்த வருடம் 10.08.99 செவ்வாய் கிழமை தான் கொள்ளப்பட வேண்டும் எனவும், அன்றையதினமே தந்தையரை இழந்தவர்கள் தமது பிதுர்க்கடன்களை நிறைவேற்றவேண்டும் எனவும், அன்றைய தினம் மேற்படி கோவில்களில் இடம்பெறும் அபிஷேக அன்னதானங்களில் கலந்து தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

**ERRANCES TRAVELS**

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
Mº: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# மக்களை கேடயமாக்கும் இராணுவ யுக்தியை முறியடித்த புலிகள்

(30.07.99)

வன்னிக்கான போக்குவரத்து தடையினால் வவுனியாவில் அகப்பட்டுக்கொண்ட 2000ற்கும் மேற்பட்ட வன்னி மக்களை கேடயமாக பயன்படுத்தி போர் முன்னரங்கப் பகுதியான கூன்று முறிப்பு ஊடாக கொண்டுசெல்ல முயன்ற இராணுவ யுக்தி விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளிடம் அனுமதி பெற்று செஞ்சோலை சங்கமூடாக இம் மக்கள் அனுப்பி வைக்கப்படுவதாக பொய்ப் பிரச்சாரத்தினை செய்த அரசு, பாதுகாப்பற்ற வகையில் 40 வாகனங்களில் மக்களை ஆடு, மாடுகள் போல் ஏற்றி பூவரசங்குளம் ஊடான கூன்றுமுறிப்பு சந்திக்கு அனுப்பிவைத்தது. கூன்று



முறிப்பு சந்தியானது தீவிரமான போர்முன்னரங்க பகுதியாகும். அத்துடன் அப்பகுதியில் ஏராளமான பொறிவெடிகளும், கண்ணி வெடிகளும் இருக்கின்றன. எனவே, மக்களுக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தினை தவிர்ப்பதற்காக விடுதலைப்புலிகள் மக்களை இப் பாதை வழியாக வர அனுமதிக்கவில்லை. நிலைமையினை தெளிவுபடுத்தி மீண்டும் அம் மக்களை வவுனியாவிற்கு திரும்பி செல்லும்படி கேட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கை 29ம் திகதி இரவு புலிகளின் குரல் வானொலியிலும் ஒலிபரப்பானது. விடுதலைப் புலிகள் பாதை திறப்பதற்கு ஒருபோதும் தடையாக இல்லை என்பதனையும், ஆனால் சர்வதேச மனித உரிமைகளை மீறுகின்ற வகையில் மக்களை கேடயமாக இராணுவத்தினர் பயன்படுத்தி மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய செயலினை ஒருபோதும் தாம் அனுமதிக்கப்போவதில்லை எனவும் தெளிவு படுத்தியுள்ளனர். சர்வதேச சமூகமும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் சிறிலங்கா இராணுவத்தினரின் இந் நிலைப்பாட்டை கண்டிப்பதுடன் அவலநிலையில் உள்ள இம் மக்களை மீண்டும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்குரிய பாதைதிறப்பிற்கு வழிவகை காணப்பட வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## யாழ். குடா உள்ளூராட்சிசபைகளுக்கு வெற்றிடங்களை நிரப்ப முயற்சி

(31.07.99)

யாழ். குடாவில் 1998ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்டதாக சிறிலங்கா அரசால் அறிவிக்கப்பட்ட உறுப்பினர்கள் சிலர் புலிகள் நடாத்துகின்ற தாக்குதல்களில் மரணமடைந்ததும், சிலர் தமது பதவிகளில் இருந்தும் விடுப்புப் பெற்றதும் தெரிந்ததே. தற்பொழுது அவர்களால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு சிறிலங்காவின் தேர்தல் திணைக்களம் யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. அவ்வறிக்கையோடு 41 உறுப்பினர்களின் பெயர் பட்டியலையும் அப்பதவிகளுக்காக தேர்தல் திணைக்களம் சிபார்சு செய்துள்ளது.

விரைவில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தொடர் ஆரம்பிக்க இருப்பதால் யாழ். குடாவில் அரச நிர்வாகம் சரிவர இயங்குவதாக காட்டுவதற்காகவே அரசு இந் நடவடிக்கையை எடுத்துவருவதாக தெரியவருகிறது. ஆயினும் தற்பொழுது யாழ் குடாவில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துவரும் நிலையிலும், உறுப்பினர்கள் பலர் பதவிவிலக விருப்பங் கொண்டிருக்கும் சூழலிலும் அரசின் இந் நடவடிக்கை வெற்றியளிக்குமா என்பது குறித்து சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

## அவுஸ்திரேலிய கடலில் மூழ்கிய 12 தமிழர்களின் விபரங்கள்

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிற்கருகே கடந்த 19ம் திகதியன்று படகொன்று கவிழ்ந்ததில் காணாமல்போன 15 பேரில் 12 பேரினது பெயர் விபரங்களை அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் வெளியிட்டுள்ளது. அவுஸ்திரேலியாவிற்குள் நுழையும் நோக்குடன் சட்டவிரோதமாக படகொன்றில் இவர்கள் சென்றவேளை நேர்ந்த இவ் விபத்துபற்றி, ஈழமுரசு ஏற்கனவே செய்திவெளியிட்டமை தெரிந்ததே. ஐவர் உயிருடன் மீட்கப்பட்ட போதிலும் அவர்களின் பெயர் விபரங்களை வெளியிட அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு மறுப்பு தெரிவித்துள்ளது.

உயிருடன் மீட்கப்பட்டோர் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே மூழ்கியோரில் 12 பேரது பெயர் விபரங்களை சேகரித்த அவுஸ்திரேலிய அதிகாரிகள், இதுபற்றி சிறிலங்கா தூதரகத்திடம் அறிவித்துள்ளனர். மேற்படி பன்னிருவரின் பெயர் விபரங்களும் வருமாறு.

பீற்றர் (23), துஷ்யந்தன் (24), நீலவாணன் (23), தேவகுமார் (25), சிவக்குமார் (38), அனந்தசங்கர் (23), நிரஞ்சன் (24), செல்வவதனன் (20), ரமேஷ் (34), சன்னி (18), ஜோசப்(26), பூவானந்தன் (29) ஆகியோராவர்.


உயிர்தப்பிய ஐவரும் பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தற்பொழுது மேற்கு அவுஸ்ரேலியாவின் கெட்லான்ட் துறைமுகத்தில் உள்ள குடிவரவு திணைக்கள நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். அங்கு இவர்கள் மீது மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன.

## வவுனியாவில் தொடரும் மின்மாற்றி தகர்ப்பு

(31.07.99)

வவுனியாவில் சிறிலங்கா மின்சார சபைக்கு சொந்தமான மின்மாற்றிகள் தொடர்ந்தும் தகர்க்கப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் இரவும், இன்று அதிகாலையும் இரு மின்மாற்றிகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளன. குருமன் காட்டிலும் வவுனியா குளசைப்பார் வீதியிலும் அமைக்கப்பட்டிருந்த மின் மாற்றிகளே இறுதியாக குண்டுவைத்து தகர்க்கப்பட்டவையாகும்.

நேரக் கணிப்புடன் வெடிக்கக்கூடிய வகையிலேயே இக் குண்டுகள் பொருத்தப்பட்டிருந்தன. மின்மாற்றிகளின் தகர்ப்பினை அடுத்து அதன் சுற்றாடல் பகுதிகளுக்கான மின்சாரம் தடைபட்டுள்ளது.



திருமலை துறைமுகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்

## கிளிநொச்சி, முல்லை அரச அதிபர்களுக்கு இடமாற்றம் வன்னி நிலைமையை எடுத்துக் கூறியதன் விளைவு

(01.08.99)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களது இடங்களுக்கு இராணுவ அதிகாரிகளை அரச நியமிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேற்படி இடமாற்றங்களுக்கான கடிதங்கள் இரு அரச அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகத்திற்கு பொது நிர்வாக அமைச்சிற்கும், முல்லைத்தீவு அரச அதிபர் தர்மகுலசிங்கத்திற்கும் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும் இடமாற்றம் கிடைத்துள்ளது. இவர்களின் பதவிகளுக்கு சிவில் அதிகாரிகளை நியமிக்காது, இராணுவ அதிகாரிகளே அரசினால் நியமிக்கப்படஇருந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வன்னிக்கான போக்குவரத்து தடையினால் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றியும் மாவட்டங்களில் நிலவும் உணவு பற்றாக்குறை பற்றியும் மேற்படி இரு அரச அதிபர்களும் உண்மை நிலையை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தியதால் எரிச்சலடைந்த சிறிலங்கா அரசு, உடனடியாக இவ்விரு அரச அதிபர்களுக்கும் இடமாற்றத்தினை அவசரமாக வழங்கியுள்ளது. இவர்களது இடங்களுக்கு இராணுவ இணைப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டால் வன்னியின் உண்மை நிலைபற்றி தனக்கு சாதகமான அறிக்கைகளை அவர்கள் ஊடாக பிரச்சாரப்படுத்தவும் அரசு முயலும்.

ஏற்கனவே வடக்கு கிழக்கு ஆளுநராக இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டதை தொடர்ந்து, தற்பொழுது அரச அதிபர்களின் கடமைகளிற்கும் இராணுவ அதிகாரிகளையே அரசு நியமிக்க விருப்பம் கொண்டுள்ளது. மேற்படி இரு மாவட்டங்களிலும் பெரும்பாலான பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இம் மாவட்டங்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களின் விநியோகத்தை அரசு சீர்குலைப்பது தெரிந்ததே.

## பாப்பாமோட்டை பகுதியில் பாரிய படைநகர்விற்கு முயற்சி

(31.07.99)

மன்னார் பாப்பாமோட்டை பகுதியில் மீண்டும் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை எடுப்பதற்கு சிறிலங்கா இராணுவ தரப்பு கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றது. மன்னார் மாவட்டத்தில் உள்ள பல இராணுவ முகாங்களில் இருந்தும் துருப்புக்கள் பாப்பாமோட்டை பகுதிக்கு நகர்த்தப்பட்டு வருகின்றன. இராணுவத்தினர் எடுக்கப்பட்ட பகுதிகளில் அதிரடிப்படையினர் நிலைகொண்டுள்ளனர். பாப்பாமோட்டை பகுதியைநோக்கி பல இராணுவ வாகனங்களும் அனுப்பப்பட்டு வருகின்றன.

பாப்பாமோட்டை பகுதியை நோக்கி அதிகளவான துருப்புக்கள் நகர்த்தப்படும் அதேவேளை தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து கடுமையான எறிகணை தாக்குதல்கள் பாப்பாமோட்டை பகுதியைநோக்கி நடாத்தப்பட்டு வருகின்றன. இதன்காரணமாக அப்பகுதியை சேர்ந்த பல மக்கள் தமது வதிவிடங்களை விட்டு ஏற்கனவே வெளியேறியுள்ளனர். இது ஒருபுறமிருக்க, பேசாலை முருகன் கோவிலடியில் சுட்டுக் கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களும் எவரும் உரிமைகோரப்படாத நிலையில் மன்னார் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

## யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடி கற்கைநெறி

யாழ். பல்கலைக் கழகத்தில் முதன்முதலாக மீன்பிடியியல் கற்கை நெறியொன்று இம் மாதம் ஆரம்பமாக உள்ளது. இக் கற்கைநெறிக்கு நாற்பது ஆண்களும், பத்து பெண்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பாடத் திட்டம் ஒருவருட காலத்தை கொண்டுள்ளது. இத்துறை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு பாதுகாப்பு வலயத்தை ஊடுருவி நீலன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்

(31.07.99)

பொதுஜன ஐக்கிய முன்னணியில் 'உத்தேச அரசியல் யாப்பின் உருவாக்க காரணகர்த்தா'வும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான நீலன் திருச்செல்வம் அவர்கள், கடந்த வியாழனன்று கொழும்பில் நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் ஒன்றில் பலியாகியுள்ளார். இச் சம்பவத்தில் இவரது கார் சாரதியும் மெய்ப்பாதுகாவலரும் பாதுகாப்பிற்கு வந்த பொலிசாருமாக எழுவர் காயமடைந்துள்ளனர். கொழும்பை பரபரப்பிற்குள்ளாக்கிய இக் குண்டுத்தாக்குதல் பற்றி தெரியவருவதாவது,

வழமைபோல நீலன் திருச்செல்வம் ரொஸ்மீட் பிளேசில் உள்ள தனது வீட்டில் இருந்து காலை 9.20 மணியளவில் கின்ஸி வீதியிலுள்ள தனது அலுவலகத்திற்கு புறப்பட்டுள்ளார். இவரது கார் புறப்பட்டு சுமார் நூறு மீற்றர் தூரத்தினை அடையும் போது வீதியில் போக்குவரத்து நெரிசல் நிலவியது. இதன்காரணமாக நீலன் திருச்செல்வத்தின் கார் தனது வேகத்தினை குறைத்துள்ளது. இவ்வேளை இவரது காரினை நோக்கி திடீரென வந்த ஒரு இளைஞன் காரின் பின் கதவினை திறக்க முற்படவும், பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்துள்ளது. அவ்வேளை, காரில் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த நீலன் திருச்செல்வம் பலியாகியுள்ளார்.

மஞ்சள் நிற ரீசேட்டும், பச்சை நிற காற்சட்டையும் அணிந்து வந்திருந்த இளைஞரே குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர் என கருதப்படுகின்றது. ஆனால், முன்னதாக வெளிவந்த செய்திகள் யாவும் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்புறத்தில் அமர்ந்துவந்த இளைஞன் ஒருவனே இக்குண்டுத்தாக்குதலை நடாத்தியவர் என சிறீலங்கா அரசு தெரிவித்த போதிலும் தற்பொழுது அச்செய்தி பிழையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. வீதியில் ஓரமாக நின்ற ஒருவரே இத்தாக்குதலை மேற்கொண்டார் என தெரியவந்துள்ளது.

இக்குண்டு வெடிப்பின் காரணமாக அப்பகுதியில் உள்ள பல வீடுகளில் ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன. நீலன் திருச்செல்வத்தின் வாகனத்திற்கு பாதுகாப்பாக பின்னால் வந்துகொண்டிருந்த சிறீலங்கா பொலிஸ் ஜீப் ஒன்றும் சேதமடைந்துள்ளது. இவ் ஜீப்பில் பயணம்செய்த இன்ஸ்பெக்டர் பாரோக் என்பவரும் படுகாயமடைந்துள்ளார். நீலனின் மரணத்தையடுத்து கூட்டணி பிரமுகர்களும் சந்திரிகாவும் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரியவருகின்றது. 'சந்திரிகாவின் ஆலோசகர்களில் நீலனும் ஒருவர்' என்பதால், சந்திரிகா நீலனின் மரணத்தையடுத்து உடனடியாக அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அவ்வறிக்கையில் சிங்கள மக்களின் அன்பினை நீலன் பெற்றிருக்கின்றார் என சுட்டிக்காட்டியுள்ளார். நீலனின் மரணச் சடங்குகள் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இன்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றுள்ளது.

## வன்னி மக்களுக்கான பயண ஒழுங்கில் எமக்கு சம்பந்தம் இல்லை

### - சர்வதேச செஞ்சிலுவை சங்கம்

வவுனியாவில் தங்கியிருந்த வன்னி மக்களை மூன்றுமுறிப்பின் ஊடாக அரசு வன்னிக்கு அனுப்பிவைக்க எடுத்த நடவடிக்கைகளுக்கும் தமது நிறுவனத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் திட்டவட்டமாக தெரிவித்ததுடன், அப்பயண ஒழுங்கில் தமக்கு சம்பந்தம் இருப்பதாக வெளியான செய்திகளையும் மறுத்துள்ளது.

கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் அலுவலகத்தில் இதுபற்றி தெரிவித்த சங்க பேச்சாளர் ஒருவர், வவுனியாவில் இருந்த மக்களை வன்னிக்கு அனுப்பி வைக்கும் பயண ஒழுங்குகளில் நாம் எத்தகைய கட்டத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை, அத்துடன் அவர்களின் பயணப்பாதுகாப்பு தொடர்பிலும் நாம் சம்பந்தப்படவில்லை என தெரிவித்ததுடன், வன்னிக்கான பாதை திறப்பு விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இதுவரை இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

முன்னதாக சிறீலங்கா அரசு வெளியிட்ட அறிவிப்பில், இப்பயண ஒழுங்குகளில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக பொய்ப் பிரச்சாரம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## குண்டுத்தாக்குதல் நடாத்தியவர் ஊனமுற்றவர் போல வேவுபார்த்தாரா?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான நீலன் திருச்செல்வத்தின் மீது தாக்குதலை நடாத்தியவர் ஊனமுற்ற ஒருவரைப் போல் வேடமிட்டு வேவுபார்த்து திரிந்ததாக கின்ஸி வீதியில் முச்சக்கரவண்டியை வாடகைக்குவிடும் சாரதி ஒருவர் தெரிவித்துள்ளதாக சிறீலங்கா அரச வட்டாரங்கள் தெரிவித்தன. தாக்குதலை நடாத்தியவர் இரண்டு மூன்று நாட்களாக காலை, மாலை வேளைகளில் ஊன்றுகோலுடன் வந்து கின்ஸி வீதியோரமாக நின்றதாகவும், அவரது முகம் தனக்கு நன்றாக நினைவிருப்பதாகவும் அச்சாரதி தெரிவித்துள்ளார். தாக்குதல்காரர், நீலன் திருச்செல்வத்தின் நடவடிக்கைகளை நோட்டமிடவே இவ்வாறு வந்திருக்கலாம் என சிறீலங்கா பயங்கரவாத ஒழிப்புப்பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் தெரிவித்துள்ளார்.

## குமரன்கடவை பொலிஸ் காவலரண் தாக்கியழிப்பு

திருமலை குமரன்கடவையில் அமைக்கப்பட்டிருந்த சிறீலங்கா பொலிஸ் காவலரண் ஒன்று கடந்த செவ்வாயன்று இரவு விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதுடன் பொலிசாரிடம் இருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த 80 அடி உயரமான தொலைத்தொடர்பு கோபுரமும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. புலிகளின் தாக்குதலை அடுத்து பலியான, காயமடைந்த தமது சகாக்களையும் தூக்கிக் கொண்டு பொலிசார் பின்வாங்கிச் சென்றனர். இதனையடுத்து காவலரணை கைப்பற்றிய விடுதலைப்புலிகள் அங்கிருந்து எட்டு T-56 ரக துப்பாக்கிகள், இரண்டு எல்.எம்.ஜி. துப்பாக்கிகள், ஒரு தொலைத்தொடர்பு சாதனம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இத் தாக்குதலை அடுத்து தொலைத் தொடர்பு கோபுரத்தினை விடுதலைப்புலிகள் தகர்த்துள்ளனர். இத் தொலைத் தொடர்பு கோபுரம்தான் பதவியா சிரிபுர, மொறவேவா ஆகிய பகுதிகளுக்கு தொலைத் தொடர்பினை வழங்கி வந்துள்ளது. தற்போது அப்பகுதிகளுக்கான தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

## குண்டுவெடிப்பை அடுத்து தீவிர தேடுதல் - 50 தமிழர்கள் கைது

கூட்டணி உபதலைவர் நீலன் திருச்செல்வம் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பில் கடுமையான தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிறீலங்கா பாதுகாப்பு படையினர், இதுவரை 50ற்கும் மேற்பட்ட தமிழர்களை கைது செய்துள்ளனர். மேலும் இரு தற்கொலை குண்டுதாரிகள் நகரில் உலாவுவதாக சிறீலங்கா உளவுத்துறை எச்சரித்துள்ளதால் நகரின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டதுடன் வாகனங்களும் பொது மக்களும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட தமிழர்கள் அனைவர் மீதும், தற்போது கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பண்டிவிரிச்சானில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலங்கள்

மன்னார் பண்டிவிரிச்சான் பகுதியில் கடந்த வெள்ளியன்று இளைஞன் ஒருவனினதும், யுவதி ஒருவரினதும் சடலங்கள் துப்பாக்கி சூடு மற்றும் வெட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெண்ணின் சடலம் தலைமுற்றாக துண்டிக்கப்பட்ட நிலையில் முண்டமாகவே காணப்பட்டுள்ளது. இச்சடலங்கள் சனிக்கிழமை அன்று மன்னாரில் உள்ள சிறீலங்கா பொலிசாரினால் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விரு சடலங்களும் சுமார் 25 வயது மதிக்கத்தக்கவை. மக்கள் நடமாற்றம் அற்ற பகுதி ஒன்றில் காணப்பட்ட இச்சடலங்களை பார்வையிட்ட மன்னார் மாவட்ட பதில் நீதிபதி, பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரியை பணித்துள்ளார்.



வவுனியா செயலகத்தின் முன்னால் வன்னி அவல நிலைக்கு நீதிகோரி வவுனியா பல்கலைக்கழக, கிழக்கு பல்கலைக்கழக, யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்களைச் சேர்ந்த மாணவர்கள் போராட்டம் நடத்துகின்றனர்

## இது குசும்புங்கோ!

- வவுனியாவில் இருந்து வன்னிக்கு சென்ற பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கி, மற்றும் மோட்டார்கள் மூலம் தாக்குதல் நடாத்தி மீண்டும் வவுனியாவிற்கு விரட்டியடிப்பு. பலர் காயம். மூவரை காணவில்லை.

  *- தினகரன் (29.07.99)*

- இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான இறுதிக் கட்டத்திற்கு நாம் வந்துவிட்டோம். ஐ.தே.கட்சியே இந்தநாட்டில் வன்முறை கலாச்சாரத்தை ஆரம்பித்தது. கறுப்பு யூலை மூலம் இனக்கலவரத்தை தூண்டி நாட்டில் பெரும் அழிவை தோற்றுவித்தவர்கள். நாட்டை யுத்தமொன்றிற்கு தள்ளியதும் ஐ.தே.க தலைவர்களே. ஐ.தே.க தலைவர்களின் இனரீதியான வன்முறைகள் காரணமாக இந்த நாட்டில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஆனால் இந்த நாட்டில் தற்போதுதான் சகல விதத்திலும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பேச்சுச்சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இப்போதுதான் தாராளமாக மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

  *- கடவத்தையில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா*

# வன்னி நிலைகுறித்த கூட்டத்தில் குமார் பொன்னம்பலம் சீற்றம்

கடந்த 27ம் திகதியன்று வன்னி நெருக்கடிபற்றி ஆராய்வதற்காக சிறிலங்கா அமைச்சர் தொண்டமான் தலைமையில் தமிழ் குழுக்கள், தமிழ் கட்சிகளினது கூட்டம் கொழும்பில் நடைபெற்ற பொழுது அதில் கலந்துகொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கடுமையான கருத்துக்களை தெரிவித்ததுடன் கூட்டத்தின் இறுதியில் தயாரிக்கப்பட்ட கடிதத்திலும் தனது பெயரைச் சேர்ப்பதற்கு அனுமதிக்கவில்லை.

கூட்டத்தின் போது அவ்வப்போது குமார் பொன்னம்பலத்திற்கும் ஏனைய தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களுக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றுள்ளன. அரசையும் ஆதரித்துக்கொண்டு வன்னி மக்களுக்கு உதவும்படி மக்களை ஏமாற்றும் கோரிக்கைகளை விட தனக்கு உடன்பாடு இல்லை என்பதை தெரிவித்த குமார் பொன்னம்பலம், இக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சிகள் அனைத்தும் அரசினை ஆதரிப்பவை எனக் குறிப்பிட, அதற்கு பதிலளித்த ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன், தமது கட்சி அரசுக்கு ஆதரவு அளிப்பதில்லை எனத் தெரிவித்தார். அவசரகால சட்டத்தை மட்டும் எதிர்த்துக்கொண்டு படையினருடன் நீங்கள் இணைந்து இயங்குவது எனக்கு நன்றாகவே தெரியும் என குமார் பொன்னம்பலம் கோபமாகவும் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த தொண்டமான் மீதும் குமார் பொன்னம்பலம் கடுமையான கருத்துக்களை தெரிவித்தார். கூட்டத்தின் முடிவில் அரசிற்கு அளிக்கும் ஆதரவினை அனைத்து தமிழ்க் கட்சிகளும் விலக்கிக்கொள்வதாக உறுதியளிக்கும்பட்சத்தில் மாத்திரமே மேற்கொண்டு எதனையும் தான் செய்வேன் என குமார் பொன்னம்பலம் தெரிவிக்க, அக் கருத்திற்கு தமிழ்க்கட்சிகள் ஆதரவு தெரிவிக்கவில்லை. மாறாக இனிமேல் வரும் காலத்தில் அவ்வாறான ஒரு நிலையை பற்றித் தீர்மானிக்கலாம் எனவும் கூறி அவர்கள் நழுவிக்கொண்டனர்.

## வன்னி அவலத்திற்கு தீர்வில்லை பரீட்சை எதற்கு ?

### - யாழ். மாணவர்கள் -

(30.07.99)

வன்னிப்பிரதேசத்திற்கு தரைப்பாதை ஒன்றினை திறக்கும் வரை கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைகளை நடாத்த நாம் அனுமதிக்கப்போவதில்லை எனவும், வன்னி மாணவர்களும் சுமூகமாக இப்பரீட்சையை எழுதும் சூழ்நிலை ஏற்படுத்தப்படாவிட்டால் யாழ்குடாவில் இப்பரீட்சையை குழப்பப்போவதாகவும் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இச் சங்கம் தனது முடிவினை சிறிலங்கா ஜனாதிபதிக்கும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும், யாழ் கல்வி அலுவலகத்திற்கும் கடிதம்மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

வன்னி மாணவர்கள் நிலைமையை நாம் வெறுமனவே கைகட்டி பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே இப் பரீட்சை நடைபெறாமல் தடுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். இவ்வாறான நெருக்கடியினால் பரீட்சை நிலையங்களுக்கு வினாத்தாள்களை எடுத்துச் செல்வதை கூட நாம் குழப்பவேண்டியும் வரலாம். இவ்வாறு அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் மாணவர் சங்கம் கடந்த காலங்களில் மாணவர் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பல செயற்பாடுகளையும் செய்துவந்தது.

இச் சங்கத்தினை விடுதலைப்புலிகளே பின்னணியில் நின்று நடாத்துவதாக தெரிவிக்கும் சிறிலங்கா இராணுவம், மாணவர் சங்கத்தினரை முடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு காடுகளை நோக்கி படையினரின் எறிகணை வீச்சு

(01.08.99)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குபுற காடுகளை நோக்கி கடந்த வெள்ளியிரவு சிறிலங்கா படையினர் தொடர்ச்சியான எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். சுமார் பத்து மைல் சுற்றாடல்களுக்கு படையினரின் எறிகணை வீச்சின் சத்தம் அதிர்ந்தது. விடுதலைப்புலிகளின் அணிகள் காட்டுப்பகுதியில் நடமாடுவதாக கிடைத்த தகவல்களை அடுத்தே படையினர் இத்தாக்குதலை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் எறிகணை வீச்சு தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இதேவேளை இரவு பத்து மணிக்கு பின்னர் பொதுமக்கள் எவரும் ஏறாவூர் பகுதியில் நடமாடவேண்டாம் என பொலிசார் திடீர் உத்தரவு ஒன்றினையும் பிறப்பித்துள்ளனர். பொலிசாரின் இவ் அறிவிப்பு பள்ளிவாசல்களில் உள்ள ஒலிபெருக்கி மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏறாவூர் பகுதியில் அண்மையில் இரவு நேரக் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அணி மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதை அடுத்தே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### விசுவமடுவில் குண்டு வீச்சு சிறுவன் பலி

(01.08.99)

வன்னி விசுவமடு பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டுவீச்சில் பாடசாலை மாணவனான சிறுவன் ஒருவன் உடல்சிதறி பலியாகியதுடன், மேலும் பலர் காயமடைந்தனர். குமாரசாமிபுரப் பகுதியிலேயே இக் குண்டுவீச்சு தாக்குதல் நிகழ்ந்துள்ளது. பலியாகிய சிறுவன் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து விசுவமடுவில் தங்கியிருந்தவராவார். இவர் விசுவமடு பாரதி வித்தியாசாலையில் மூன்றாம் ஆண்டில் கல்விகற்று வருபவராவார்.


## உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம் இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு



தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்ம பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

**இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!**




எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழுகலையும் போக்கிக்கொண்டுள்ளேன்.

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
**Dr. Lawrie / Dr. Nandakumar**
Tel: 0181 5216338
Mobil: 079 30471356

# வன்னிக்கான புதிய பாதை அரசின் நோக்கம் என்ன?

வன்னிக்கான பாதையொன்றினைத் திறப்பதற்கு விடுதலைப்புலிகள் முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறார்கள் என்ற பாணியிலான பொய்ப்பிரச்சாரத்தினை சிறிலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்ட இந்த நேரத்தில் கடந்த காலங்களில் பாதை திறப்பு விடயத்தில் சிறிலங்கா அரசுகள் ஆடிய நாடகங்கள் பற்றி கொஞ்சம் பின்னோக்கிப் பார்ப்பது அவசியமானதாகும். பாதை திறப்பு விடயத்தில் எப்போதும் சிறிலங்கா அரசு தனது இராணுவ நலன்களையே முன்நிறுத்தி இலாபம் காண்பதற்கு முயல்வதைக் கொழும்பு இராணுவ ஆய்வாளர் தாரகி தனது கட்டுரை ஒன்றில் இனங்காட்டியிருந்தார். அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்களைத் தழுவி இக் கட்டுரை வரையப்படுகிறது.

1992-ம் ஆண்டு பலாலித் தளத்தினைச் சுற்றி விடுதலைப்புலிகள் முற்றுகையிட்டிருந்தபோது அத்தியாவசியப்பொருட்களை காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்வதற்கு பாதுகாப்பான ஒரு பாதையைத் திறப்பதற்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப்புலிகளுடனும் இராணுவ தரப்பினருடனும் பேச்சுக்களை நடாத்தியது. விடுதலைப்புலிகள் யாழ்.குடாவின் பெரும்பாலான பகுதிகளில் அப்போது நிர்வாகத்தினை நடாத்திக்கொண்டிருந்தனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இப்பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மாத்தையா கலந்துகொண்டார். அப்போது இராணுவ தரப்பினால் பாதையொன்று திறக்கப்படுவதன் அவசியம் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விளக்கப்பட்டது. ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி வந்த கப்பல்கள் அவற்றை காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறக்குவதால் காங்கேசன்துறையில் இருந்து அவற்றினை எடுத்துச் செல்வதற்கும் செஞ்சிலுவை சங்கத்தின் உதவியே கோரப்பட்டது. செஞ்சிலுவைச் சங்கம் நடாத்திய பேச்சுக்களின் விளைவாக பாதை ஒன்று திறக்கப்படுவதற்கான விசேட அனுமதி மாத்தையாவினால் வழங்கப்பட்டது. இப்பாதை சேந்தான்குளப் பாதையினூடாக அமைந்தது. ஆனால் சில மாதங்கள் கழித்து பலாலி இராணுவத் தளத்திலிருந்து இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்தனர். அந்நடவடிக்கையின் பின்னர் துருப்புக்கள் தெல்லிப்பளைக்கு அண்மையாக வந்தனர். விடுதலைப் புலிகள் தெல்லிப்பளைச் சந்தியில் அப்போது நிலைகொண்டிருந்தனர். இராணுவத்தினர் எடுத்த இந்த நடவடிக்கையின்போது பலாலியில் இருந்து துருப்புக்கள் நகர்ந்ததற்கு புதிதாகத் திறக்கப்பட்ட சேந்தான்குளப் பாதையே பெருமளவும் பயன்படுத்தப்பட்டது. அதாவது அத்தியாவசியப் பொருட்களை வடபகுதி மக்களுக்கு அனுப்புவதற்காகவே எனத் திறக்கப்பட்ட பாதையூடாகவே இராணுவத் துருப்புக்கள் தமது நகர்வினை மேற்கொண்டனர்.

சேந்தான்குளம் ஊடாக பாதையொன்றினைத் திறக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஒப்புதல் அளித்ததற்காக விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் மாத்தையா மீது பலத்த கண்டனத்தைத் தெரிவித்திருந்தது. இந்த நடவடிக்கையின் பின்னர் ஒருவருடம் கழித்து அரச தரப்பினர் குடாநாட்டிற்கான பாதுகாப்பான பாதையொன்றினை ஆனையிறவு ஊடாகத் திறக்கலாம் என ஆலோசனை தெரிவித்தனர். இவ் ஆலோசனைகள் ஐ.நா.வின் மேற்பார்வையில் பூநகரியூடாக படகுச் சேவையினை ஆரம்பிக்கும் யோசனையில் எழுந்த நெருக்கடிகளை அடுத்து முன்வைக்கப்பட்டது. ஆயினும் இந்தப் பாதை திறப்பு விடயத்திலும் பல நெருக்கடிகள் எழுந்தன. 1993ம் ஆண்டின் ஆரம்பத்தில் இராணுவத்தினர் குடாநாட்டிற்கான சகல பாதைகளையும் துண்டாடியதன்பின்னர் பொதுமக்கள் தமது பயணத் தேவைகளுக்காக மிகவும் அபாயகரமானதும் ஆபத்தானதுமான கிளாலிப் பாதையினைத் தேர்வுசெய்தனர். கிளாலி ஏரியினூடான பயணம் ஒன்றுதான் அப்போது சாத்தியப்படக்கூடியதாக இருந்தது. இராணுவத்தினர் ஆனையிறவு ஊடாக குடாநாட்டிற்கான பாதைத் திறப்பு பற்றி அடிக்கடி கோரினாலும் விடுதலைப்புலிகள் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. தமது மறுப்புக் குறித்து தமது உத்தியோகபூர்வ ஏட்டிலும் அவர்கள் விளக்கமளித்திருந்தனர். இராணுவத் தரப்பு என்ன நோக்கங்களிற்காக ஆனையிறவுப் பாதையை மீளவும் திறக்கவிரும்புகிறது என்பதை அவர்கள் தெளிவாக விளக்கியிருந்தனர்.

ஆனையிறவுப் பாதை திறந்தால் அங்குள்ள கண்ணிவெடி வயல்களும் மிதிவெடிகளும் அகற்றப்படும் அதன்மூலமாக குடாநாட்டிற்கான பாதையொன்றினைப் பெற்று அதனைப் போருக்குப் பயன்படுத்தலாம் என்பதும் இராணுவத்தின் ஒரு திட்டம். அத்துடன் ஆனையிறவுப் பாதையூடாக குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் செல்லும் பட்சத்தில் தனக்குத் தேவையான வழங்கல்களையும் இங்கிருந்தே பெற்றுக்கொள்ளலாம் என்பதும் ஆனையிறவுத் தளத்தின் இன்னொரு திட்டம். ஏனெனில் ஆனையிறவுத் தளத்திற்கான வழங்கல்களில் மிக நெருக்கடியான காலகட்டம் அப்போது நிலவியது. இவை மட்டுமல்ல பாதையொன்று திறக்கப்படும் பட்சத்தில் பொது மக்களிடமிருந்து விடுதலைப்புலிகள் பற்றிய அவர்களது போர்நடவடிக்கைகள் சம்பந்தமான தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதும் ஒரு எண்ணமாக இருந்தது. ஆயினும் இராணுவத்தின் எண்ணம் சாத்தியப்படவில்லை.

கடந்தவருடம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு வன்னிப் பகுதிகளில் இருந்து அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் அம்புலன்ஸ் வண்டிகளுக்கும் ஏனைய வாகனங்களினதும் போக்குவரத்திற்கென பூவரசங்குளமூடாக வவுனியா மன்னார் வீதியில் ஒரு பாதை திறக்கப்பட்டது. வவுனியா அரச அதிபர் இப்பாதை திறப்பிற்கென பெருந்தொகையான பணத்தினை வழங்கியிருந்தார். பாரிய செலவில் இப்பாதை செப்பனிடப்பட்டது. இப்பாதையூடாக மல்லாவி மடு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெற்றுக்கொள்வார்கள் என்பது அவரது கணிப்பாக இருந்தது. ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்களின் உபயோகத்திற்கென திறக்கப்பட்ட இப்பாதைதான் ரணகோசா இராணுவ நடவடிக்கைக்குப் பெரிதும் உதவியது. செப்பனிடப்பட்ட வீதிகளால் விரைவாகவே நகர்ந்த துருப்புக்கள் இரணை இலுப்பங்குளம் சந்தியினை கைப்பற்றிக்கொண்டார்கள். இராணுவத்தின் இந்நடவடிக்கையை விடுதலைப்புலிகள் பின்னர் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கை 17/2a ஐ பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனி நொய்ஸ்-கிருவன்புறோக்கில் வசித்துவந்தவருமான யூட் றொகான் ஜெயரட்ணம் 30.07.99 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார். அன்னார் ஜெயரட்ணம் தம்பதிகளின் (நேவியர்) அன்புப் புதல்வரும், றொசான், றொசானி, வேர்ஜினி, ஆகியோரின் பாசமிகு சகோதரனும் - சுபா, ரஞ்சன் ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 06.08.99 அன்று காலை 10 மணிக்கு St. Maria Himmelfahrt, Marien Platz-2, 41517 Grevenbroich. (Gustorf)

*அன்னாரை*

ஜோர்ஜ்மாமா குடும்பத்தினர்,

அன்ரி ராஜினி றொபின்சன் குடும்பத்தினர்,

கொலன்ட் - அன்ரி லதா ரங்கன் குடும்பத்தினர்,


நோர்வே- கிறிஸ்ரி மாமா குடும்பத்தினர்,

கனடா-சித்தி, அற்புதம் துரைநாயகம் குடும்பத்தினர், மாமி, திருமதி நேசமலர் கந்தையா, மச்சான்மார்

இலங்கை அம்மம்மா நிர்மலா அன்ரி குடும்பத்தினர்,

சுதா அன்ரி குடும்பத்தினர், சாந்தி அன்ரி குடும்பத்தினர், யசி அன்ரி குடும்பத்தினர் ஆகியோர் அறாத் துயரத்துடன் நினைவு கூருகின்றனர்.

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.*



யூட் றொகான் ஜெயரட்ணம்

தகவல்: அன்புப் பெற்றோர் - சகோதர சகோதரிகள்
KirchStr 19, 41517 Grevenborich, Germany.
Tel: 02181 47 9910

# தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளும் நீலன் மீதான தாக்குதலும்

இறந்தாரைப்பற்றி இழிவு பேசுவது தமிழ் விழுமியங்களிற்கு ஒவ்வாத ஒரு செயல் என்றாலும் ஒரு சமூகத்தின் நன்மை கருதி இறந்தவர் தொடர்பான சில விளக்கங்களைக் கொடுப்பது அவசியமாகியிருக்கிறது. இந்தவகையில் கொழும்பில் கடந்த 27-ம் திகதியன்று தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்ட தமிழர்விடுதலைக் கூட்டணியின் நீலன் திருச்செல்வத்தைப் பற்றி சில விடயங்களைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். இதில் ஒரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தினைப் பற்றி சிங்களத் தரப்பே புகழாரம் சூட்டியதிலிருந்து அவர் தமிழ் மக்களுக்கு என்ன பங்களிப்பினைச் செய்திருக்கின்றார் என்பதை மிக இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். 1975-ம் ஆண்டு யூலை மாதம் 27-ம் திகதி அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்ட அதே திகதியில்தான் 24 வருடங்களின் பின்னர் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டது பிறிதான ஒரு விடயத்தையும் சொல்லிவைக்கின்றது. சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அப்போதைய தலைமைத்துவத்தில் அல்பிரட் துரையப்பா தமிழ் மக்களுக்குச் செய்த கைங்கரியங்கள் இன்றும் தமிழ் மக்களின் மனதில் கனன்றுகொண்டிருக்கின்றது. கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வமும் சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் தளத்திலிருந்துதான் உருவாகியவர். இவரது தந்தையாரான முருகேசு திருச்செல்வம் 1965-ம் ஆண்டு தொடக்கம் 68-ம் ஆண்டுவரை டட்லி சேனநாயக்காவின் மந்திரிசபையில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தவர். எனவே நீலனின் அரசியல் அடித்தளமும் அங்குதான் உருவாகியது.

தமிழ் மக்களினால் மாவட்ட அபிவிருத்தி சபைகள் முற்றாக நிராகரிக்கப்பட்டபோது அந்த நிர்வாக அமைப்பினை மீண்டும் தூக்கிப் பிடித்து நிறுத்துவதற்கு நீலன் திருச்செல்வத்தின் பங்களிப்பு கணிசமாக இருந்தது. மாவட்ட அபிவிருத்திசபை நிர்வாக முறைமையூடாக சிங்களப் பேரினவாதத்தின் அபிலாசைகளை தமிழர் தாயகத்தில் விதைப்பதற்கு நீலனின் கல்வித் தகைமை உதவியதென்பதை அதனை யாரும் வலுவான காரணங்களுடன் மறுக்க முடியாது. ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள்ளேயே மாவட்ட அபிவிருத்திச்சபை தொடர்பான சலசலப்புக்கள் எழுந்தபோது நீலன் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழ் மக்களின் நன்மைக்காகவே உருவானது என்ற வாதத்தினைப் பலமாகவே வைத்திருந்ததால் 81-ம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை பரிசோதனைக் களத்தில் விடுவதற்கு கூட்டணி முடிவுசெய்து தேர்தலில் போட்டியிட்டது. ஆயினும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நரித்தனத்தின் முன்னால் நீலனின் 'கலாநிதி' தகுதி எடுபடவில்லை. இதன் பின்னர் 1983-ம் ஆண்டு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு மரணமடைய அவரது இடத்திற்கு நீலன் தெரிவுசெய்யப்பட்டார். இதே ஆண்டில் யூலை இனப்படுகொலைகளைத் தொடர்ந்து கூட்டணியின் சில பிரமுகர்கள் தமிழகத்திற்கு நகர்ந்தபோதிலும் நீலன் கொழும்பிலேயே தொடர்ந்து தங்கினார். தனக்கு தனது நண்பர்களான சிங்கள சமூகத்தினால் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாதென்ற நம்பிக்கைதான் இதற்குக் காரணம். இதன்பின்னர் நீலனின் அரசியல் பரிமாணம் வித்தியாசமான பாதைக்கு தனது நகர்வினை மேற்கொண்டது. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் தனது ஆலோசனைகள் மிக முக்கியமானவை என்ற ஒரு தோற்றத்தினை அவர் சிங்கள அரசியல் அரங்கில் ஏற்படுத்த, தனது சர்வதேசப் பிரச்சாரத்திற்கு இது ஈடுபடும் என்ற காரணத்தினால் சிங்களப் பேரினவாதம் இதனைப்பிடித்துக் கொண்டது. இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் உத்தேச அரசியல் அமைப்பு மாற்றத்தின் சூத்திரம் கூட நீலனால்தான் வரையப்பட்டது. 1994-ல் பொதுஜன ஐக்கியமுன்னணி உருவாக்கம் பெற்ற போது கொழும்புப் பல்கலைக்கழக உபவேந்தராக பணிபுரிந்த G.L. பீரிஸ் சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்வதற்கும் நீலன் காரணமாக இருந்தவர் என்ற வாதங்களும் நிலவி வருகின்றன. அன்றிலிருந்து இன்று வரை நீலனும் பீரிசும் நல்ல நண்பர்கள்தான். சர்ச்சைக்குரியவராக கருதப்பட்ட இந்தியத் தூதர் I.N. டிக்சிற்றும் நீலனின் ஒரு நண்பர். இந்தியப் படையினர் தமிழர் தாயகத்தில் நிலைகொண்டிருந்தபோது டிக்சிற்றும் நீலனும் தமக்கிடையே கணிசமான கருத்தாடல்களைக் கொண்டிருந்தனர். இது மட்டுமல்ல சிறீலங்கா விசேட அதிரடிப்படையின் டி.ஐ.ஜி யாக இருக்கும் நிமால் குணதிலகவுடன் நீலனுக்குச் சில தொடர்புகளும் உண்டு. இந்த விசேட அதிரடிப்படையினர்தான் தமிழ் மக்களை கொடூரமாகக் கொன்று குவிப்பவர்களென்பது இவ்வேளை குறிப்பிடத்தக்க ஒரு விடயம். நீலன் சிறந்த கல்விமான் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் அவர் சேர்ந்து இயங்கியதளம்தான் தமிழ் மக்களை அழித்து வந்தது. தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகளையும், பாலியல் வன்முறைகளையும், சித்திரவதைகளையும், கைது செய்தல்களையும் கண்டித்து நீலன் ஒருபோதுமே அறிக்கைகளை விட்டதாகத் தெரியவில்லை.

மாறாகத் தனது சர்வதேச செல்வாக்கை, தமிழ் மக்களின் அபிலாசைகளை சூழ்கடிப்பதற்கே பிரயோசனப்படுத்தினார்.

இது நீலனின் அரசியல் பாதையின் சுருக்கமான விளக்கமாகும். ஆனால் நீலன் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்பற்றி வேறான கோணத்திலும் கூட நாம் பார்க்கமுடியும். தமது ஆதாரத்திற்காக சந்திரிகா தரப்புக் கூட இவர் மீதான தாக்குதலை' மேற்கொண்டிருக்கலாம். மேலெழுந்தவாரியாக இதனை நோக்கினால் இவ்வாறு நடைபெறச் சாத்தியமில்லை என கருதுபவர்கள் வலித்து அத்துலத்முதலி கொலைபற்றி ஒருகணம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். தாக்குதலை மேற்கொள்பவர்கள் நிச்சயமாக அதற்கு சாதகமான பல விடயங்களிலும் கவனத்தைச் செலுத்தியிருப்பார்கள். குண்டுவெடிப்பினைக்கூட தற்கொலைத்தாக்குதலாக இவர்கள் சித்தரிக்கலாம். ஆரம்பத்தில் அரச தரப்பு வெளியிட்ட தாக்குதல் பற்றிய செய்திகளில்கூட பல குளறுபடிகள் இடம்பெற்றிருந்தன. மோட்டார்சைக்கிள் ஒன்றின் பின்னால் அமர்ந்துவந்த இளைஞர் ஒருவரே குண்டுத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் தாக்குதலை நடாத்தியவர் மோட்டார் சைக்கிளில் வரவில்லை. வீதியோரமாகவே நின்றிருந்தார் எனத்தெரிவிக்கப்பட்டது. அத்துடன் குண்டுவெடிப்பின்போது நீலன் திருச்செல்வன் மாத்திரமே பலியாகியுள்ளார். மற்றையவர்களுக்கு காயம்தான் ஏற்பட்டுள்ளது. நீலன் பயணம்செய்த காரின் கண்ணாடிகள் உள்ளே இருப்பவர் வெளியே தெரியாதவாறு அமைக்கப்படும் கண்ணாடிரகத்தினைச் சேர்ந்தவை. ஆனால் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டவர் நீலன் திருச்செல்வன் இருந்த பக்கக் கதவினை திறக்க முயற்சித்ததாகவும் அரச தரப்பில் சொல்லப்பட்டதும் சந்தேகத்தினை வலுப்படுத்துகிறது. தாக்குதல் நடாத்தியவர்க்கு கறுத்தக் கண்ணாடிகளூ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

**- பேம்பி -**


# மரண அறிவித்தல்

தோற்றம்:
02.01.1925

சிவபதம்:
26.07.1999

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவபக்தரும் வல்வை புட்டணி சித்திவிநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தாவுமான இரத்தினசாமி சிதம்பரதேவர் அவர்கள் 26.07.99 அன்று வல்வெட்டித்துறையில் சிவபதம் அடைந்தார்.

இவர் கிருபைநாயகியின் அன்புக்கணவரும் கிருஷ்ணானந்ததேவர் (இலண்டன்), அமிர்தானந்ததேவர் (இலண்டன்), அருந்தவநாயகி (வல்வெட்டித்துறை) ஆகியோரின் தந்தையும், பாக்கியராசா, கி.யமுனா, அ.யமுனா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 27.07.99 அன்று.வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் நடந்தேறியது என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*தகவல்: தருபவர்கள் கிருஷ்ணானந்ததேவர் (இலண்டன்)*
*0181-6726447*
*0956-893017*
*அமிர்தானந்ததேவர் (இலண்டன்)*
*0181-6485926*



இரத்தினசாமி சிதம்பரதேவர்

# சர்வதேச தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

## INTERNATIONAL TAMIL BROADCASTING CORPORATION

# ITBC

(FIRST DIGITAL RADIO IN TAMIL)

## 24 மணி நேர சர்வதேச தமிழ் வானொலி

**Eutelsat Hotbird 3 இல் 12475.5 Mhz**

**Eutelsat Galaxis, Model 602 Cl Receiver ஒன்றினை வாங்கி ITBC தமிழ் நிகழ்ச்சிகளை இலசவமாகக் கேட்பதோடு, மற்றும் வேறு எந்த ஸ்தாபனமும் தரமுடியாத அளவு 200 (Radio, Television Channels) இற்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை 100 வீதம் இலவசமாகப் பார்க்கலாம், கேட்கலாம்.**

## இதன் விலை 350 Euros மட்டுமே

350 Euros கொடுத்து மேற்படி Receiver ஐ வாங்கினால் அதன் பின் எந்தவிதமான மாதக் கட்டணமும் கட்டவேண்டியதில்லை. நிகழ்ச்சிகள் அனைத்தும் இலவசம்

அல்லது

ஐரோப்பாவில் தற்சமயம் Eutelsat Sagam 3200 Receiver வைத்திருப்பவர்கள் (தற்சமயம் TRT தமிழ்த் தொலைக்காட்சியை எடுத்துவரும் அதே Receiver) எமது நிகழ்ச்சிகளை, இந்த Receiver இலும் இலவசமாகக் கேட்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.


**ஒலிபரப்பாகும் நாடுகள்:**

42 ஐரோப்பிய நாடுகள் (Eutel sat Hotbird 3 இல்]
Canada உட்பட வட அமெரிக்கா (Fm சிறப்பலை வரிசையில்]
மத்திய கிழக்கு நாடுகள் (Eutel sat hot bird 3 இல்]
வெகுவிரைவில்
இலங்கை, இந்தியா [சிற்றலை வரிசை]

**ITBC இற்கு கடமைபுரிய சகல நாடுகளிற்கும் பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.**

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**

**Tel: 1-416 412 7384**
**Fax: 1-416 412 7386**




# சோனியாகாந்திக்கு எதிராக தேர்தல் ஆணையத்திடம் மனு!

(31-07-99)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தன்னை இந்து என்றும் இந்துக் குடும்பத்தின் பாரம்பரிய மருமகள் என்றும் கூறி வருவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி தேர்தல் ஆணையத்திடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக ஆய்வு மையம் என்ற அரசு சார்பற்ற அமைப்பு, தேர்தல் ஆணையாளர் எம். எஸ். கில்லிடம் சமர்ப்பித்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் வருமாறு:

தீவிர கத்தோலிக்க கிறிஸ்தவரான சோனியா காந்தி, இந்து என்று கூறிக்கொண்டு ஆள்மாறாட்டம் செய்து வருகிறார். சோனியா காந்தி இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்று கூறி இந்து மக்களின் மனதை காங்கிரஸ் புண்படுத்தி வருகின்றது. கத்தோலிக்க கிறிஸ்தவரான சோனியா இந்து ஆலயங்களுக்கு சென்று வருகிறார். திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு சென்ற சோனியா அந்த ஆலயத்தின் வழக்கமான பதிவேட்டில் கையெழுத்திடவில்லை. இவ்வாறு இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்திவரும் காங்கிரஸ் கட்சியும் இந்து மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும். சோனியாவும் காங்கிரஸ் கட்சியும் தங்களை மதச்சார்பற்றவர்கள் என்று கூறிக்கொண்டு வருவதை தேர்தல் ஆணையம் தடுக்க வேண்டும். ஏனெனில் காலம் சென்ற தனது கணவர் இராசீவ் காந்தியை திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாக அவரை கிறிஸ்தவ மதத்திற்கு மாறுமாறு கட்டாயப்படுத்தினார். இந்த உண்மைகளை சோனியா எப்போதும் மறுக்கவில்லை. இது தொடர்பாக சோனியாவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் அனுப்பப்பட்ட பல நோட்டீஸ்களுக்குப் பதில் கிடைக்கவில்லை. இந்த விடயங்களை அவர்கள் மறுக்கவும் இல்லை. எனவே சிவசேனைத் தலைவர் பால்தாக்கரேவுக்கு வாக்களிக்கும் உரிமையைத் தடை செய்ததைப் போல, சோனியா காந்திக்கும் தேர்தல் ஆணையம் தடைவிதிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிமுக வேட்பாளர் பட்டியல் - தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது

(30-07-99)

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலையும், தேர்தல் அறிக்கையையும் அதிமுக இன்று வெளியிட்டது. அதிமுகவின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ஜெயலலிதா இவற்றை வெளியிட்டார். அதிமுக தலைமையகத்தில் நடந்த ஆட்சிமன்றக் கூட்டத்தில் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டு பின்பு செய்தியாளர் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சிமன்ற குழு பரிசீலித்து எடுத்துள்ள முடிவின்படி, 1999 செப்டம்பர் 4 மற்றும் 11-ம் திகதிகளில் தமிழ்நாட்டிலும் புதுவை யூனியன் பிரதேசத்திலும் நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலிலும், தமிழ்நாடு சட்டமன்ற இடைத்தேர்தலிலும் அதிமுக போட்டியிடும் தொகுதிகளும், கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளும், மற்றும் அதிமுக போட்டியிடும் தொகுதிகளில் அக்கட்சியின் அதிகாரபூர்வமான வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியலும் அதில் இடம்பெற்றுள்ளன. இதில் கடந்த முறை தேர்தலில் வெற்றி பெற்ற மூத்த தலைவர்கள் பன்னிருவருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. குறிப்பாக அதிமுகவின் நாடாளுமன்ற குழுத் தலைவராக இருந்த சேடப்பட்டி முத்தையாவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் முன்னாள் மத்திய அமைச்சர் கடம்பூர் ஜனார்த்தனம், நடிகர் ராமராஜன், ஆகியோருக்கும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

மேலும் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் சக்காரியா கமிஷன், இந்திய வங்கி ஊழல், ஜெயின் கமிஷன் குறித்து மீண்டும் துரித விசாரணை நடத்தப்படும் என்றும், இந்திய அமைச்சர்கள் பெர்னாண்டஸ், சின்கா ஆகியோர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்தும் உரிய விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுவையில் திமுக - தமாகா கூட்டணி தொடர்கின்றது

(28-07-99)

புதுவையில் திமுக - தமாகா கூட்டணி ஆட்சி தொடரும் என்று புதுவையின் தமாகா தலைவரும் உள்துறை அமைச்சருமான ப.கண்ணன் கூறினார். வரும் மக்களவைத் தேர்தலுக்கு அமைக்கப்பட்ட கூட்டணியில் திமுகவும் தமாகாவும் தனித்தனிக் கூட்டணி அமைத்துக் கொண்டன. இந்நிலையில் பழைய கூட்டணியின் அடிப்படையில் புதுவையில் அரசமைத்த திமுக - தமாகா கூட்டணி தொடருமா என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில் புதுவை மாநில காங்கிரஸ் தலைவர் சண்முகம், மதவாதத்தை தமாகா எதிர்ப்பது உண்மையானால் புதுவை கூட்டணி அரசில் இருந்து தமாகா உடனடியாக வெளியேற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில் கண்ணன் கூறுகையில், இந்த ஆட்சி காங்கிரஸ் கட்சியை கேட்டு அமைக்கவில்லை. பொது மக்களின் வாக்குகளைப் பெற்று எங்கள் தலைவர் மூப்பனார், திமுக தலைவர் கருணாநிதி ஆகியோர் சேர்ந்து எடுத்த முடிவின் அடிப்படையில்தான் இந்த ஆட்சி அமைந்துள்ளது. ஊழல் கட்சியான அதிமுகவுடன் ஒட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு பிறருக்கு உபதேசம் செய்ய என்ன தகுதி உள்ளது என்று தெரியவில்லை. மாநிலத்திற்கு மாநிலம் காங்கிரஸ் கட்சியும் மற்றவர்களும் மாறுபட்ட அரசியல் நிலையை எடுத்துள்ள நிலையில் ஏன் இந்த நிலை இருக்கக் கூடாது என்றார்.

# தமிழில் பிழையின்றி எழுத பாடத்திட்டம்! தமிழ்நாட்டில் கோரிக்கை

(29-07-99)

தமிழில் பிழையின்றி எழுத பள்ளிகளில் பாடத்திட்டம் வைக்க வேண்டும் என்று பேராசிரியர் நன்னன் வலியுறுத்தினார். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் உறுப்பினர்- செயலர் ச.முத்துக்குமரன் எழுதிய, 'தமிழ் தழைத்திடுக' நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் நன்னன் இக்கோரிக்கையை வலியுறுத்தினார். அவர் பேசியதாவது:

பெரும்பாலும் அழிவதற்கான அறிகுறிகள் தமிழுக்கு தோன்றிக் கொண்டிருக்கின்றன. தமிழ் மரபு வேகமாக மறைந்து வருகின்றது. பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் தமிழ் எழுத்து உரைநடை மரபு மாறிவருகின்றது. தமிழறிஞர்கள் எழுதுவதிலும் குறை இருக்கின்றது. தமிழாசிரியர்களுக்கே தமிழ் தெரியவில்லை. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு பள்ளிகளில் பாடத்திட்டம் வைக்க வேண்டும் என்றார் நன்னன். தமிழ் தழைத்திடுக நூலை சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொற்கோ வெளியிட்டார்.

# சிவசேனைத் தலைவரின் அரசியல் உரிமைகளுக்கு தேர்தல் ஆணையத்தின் தடை!

(29-07-99)

சிவசேனைக் கட்சியின் தலைவர் பால் தாக்கரேயின் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. ஆறாண்டு காலத்திற்கு இத்தண்டனை அமுலில் இருக்கும். இந்தியத் தேர்தல் ஆணையம் இத்தகவலை தெரிவித்துள்ளது.



முன்பு ஒரு சமயம் தேர்தல் பிரச்சாரத்தின் போது தாக்கரே வகுப்புவாதத்தை தூண்டும் விதத்தில் பேசியதற்காக இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தாக்கரேயின் தேர்தல் பிரச்சார பேச்சு தொடர்பாக மும்பை உயர் நீதிமன்றத்தில் தாக்கரே மீது போடப்பட்ட வழக்கில், அவர் குற்றவாளி என்று தீர்ப்பாகியது. தில்லி உச்ச நீதிமன்றத்தில் இத்தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது. உரிய தண்டனை அளிப்பது தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைத்தார். தாக்கரேயின் வாக்குரிமை ஆறாண்டுக் காலத்திற்கு பறித்து விட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தின் இரு உறுப்பினர்கள் தண்டனை வழங்கினர். தாக்கரேயின் பெயரை மும்பை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குமாறு மும்பை பிரதம தேர்தல் அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட சிவசேனைத் தலைவர், தேர்தல் ஆணையத்தை கடுமையாக சாடியுள்ளார். இந்த நடவடிக்கை மகாராஷ்டிரத்தில் சிவசேனை-பா.ஜ.க. தேர்தல் வெற்றியை பாதிக்காது. இந்த முடிவுக்கு பழிவாங்கும் விதத்தில் எங்கள் கூட்டணிக்கு மக்கள் பெருவாரியாக வாக்களிப்பர். வாழ்நாள் முழுவதும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று நான் முடிவு செய்துள்ளதால் தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவினால் எனக்கு எந்த விதப் பாதிப்பும் இல்லை. இந்திய அரசமைப்பு சட்டத்தின் மீது எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. எனவே தேர்தல் ஆணையம் மற்றும் குடியரசுத் தலைவரின் இந்த முடிவை எதிர்த்து நீதிமன்றத்திற்கு செல்வது என்ற கேள்விக்கே இடமில்லை என்றார் அவர்.


## துயர் துடைப்பு நாட்கள் - யூலை 1999



எம் தேசத்தில் சிதறுண்டு அகதிகளாக
வீதியோரங்களிலும் மர நிழல்களிலும்
தஞ்சமடைந்திருக்கும் எம் உறவுகளின் பசிபோக்கி உயிர்
காத்திட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்துச்
செல்லும் துயர் துடைப்பு நாட்கள்-யூலை 99

எங்கள் மக்களின் துயர்துடைத்திட நம் உழைப்பின் சிறு துளியை வழங்கிடுவோம். நீங்கள் வழங்கும் பங்களிப்பு நம் உறவுகளின் பசிபோக்கும், பிணி போக்கும், எதிர்காலச் சந்ததிக்கு கல்வி வழங்கும்!

### துயர்துடைப்பு நாட்கள்

| நாடுகள் | காலம் | முகவரி |
|---|---|---|
| பிரான்ஸ் | 04.07.99 - 15.08.99 | O.R.T<br>26, RUE DU DEPARTEMENT, 75018 PARIS. - TEL : 01 40 38 30 74 |
| லண்டன் | 05.07.99 - 08.08.99 | 79.Hoe Street, Walthamstow,<br>London E 17 4 SA, U.K - Tel: 0181-520 5876 / Fax: 0171-403 16 53 |

Pub Gra.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்




# இந்தியாவில் இரயில் விபத்து! 300 இற்கும் அதிகமானோர் மரணம் 1000 இற்கு மேல் காயம்

02.08.99 இங்கட்கிழமை வடகிழக்கிந்தியாவில் இரண்டு பயணிகள் இரயில்கள் மோதிக்கொண்டதில் 300 இற்கும் அதிகமானோர் இறந்தும், 1000 இற்கும் மேற்பட்டோர் காயங்களிற்கும் உள்ளாகியுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் விபத்துப்பற்றி மேலும் அறியப்படுவதாவது, புதுடெல்லி நோக்கி கௌகாத்தியில் இருந்து சென்று கொண்டிருந்த பிரம்மபுத்திரா தபால் இரயில், நின்றுகொண்டிருந்த அவாத் - அசாம் கடுகதி இரயில்மேல் மோதியது. இரண்டு இரயில்களும் மோதிய வேகத்தில், கடுகதி இரயிலின் இயந்திரம் வானில் எழும்பி வெடித்துச் சிதறியதெனச் சொல்லப்படுகிறது. இரண்டு இரயில் இயந்திரங்களும் 14 பெட்டிகளும் நாசமாகிப் போயுள்ளன. இதுவரை கிடைத்த தகவல்களின்படி 180 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாயும், மேலும் பலநூறு உடல்கள் சிதைவுகளுக்கிடையே சிக்குண்டுபோயுள்ளதாயும் அவற்றை மீட்கும் பணி தொடர்வதாயும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் விபத்தில் எப்படியும் 500 இற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரமபுத்திரா இரயிலில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தினர் என்றும் அரச உத்தியோகஸ்தர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. 1998ம் ஆண்டு இந்தியாவில் நடந்த மற்றுமோர் விபத்தில் 200 பயணிகள் கொல்லப்பட்டனர். இன்று நடந்த இரயில் விபத்தைக் கேள்வியுற்ற இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் தனது அனுதாபத்தையும் துக்கத்தை மும் தெரிவித்ததுடன், இவ்வகையான விபத்துகள் தொடர்வதை இனிமேலும் அனுமதிக்க முடியாது என்றும், உடனடியான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## பாலஸ்தீன தலைவர்கள் மேல் இஸ்ரேல் குற்றச்சாட்டு

இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக், பாலஸ்தீனத் தலைவர்கள் இஸ்ரேல் படைவிலக்கலில் ஏற்பட்டுள்ள தாமதத்தினை ஏற்றுக்கொள்ளாததையிட்டு ஆழ்ந்த கவலை தெரிவித்ததுடன், பேச்சு வார்த்தைகளில் விரக்தியையும் வெளியிட்டார். மேற்குக் கரையில் இருந்து இஸ்ரேல் படை விலக்கல் தாமதப்படுமென பிரதமர் பராக் கூறியதை பாலஸ்தீனத் தரப்பினர் ஏற்க மறுத்துள்ளனர். இஸ்ரேல் மேற்குக் கரையில் இருந்து தமது படை விலக்கலை ஒக்டோபர் மாதம் 1ம் திகதியே ஆரம்பிக்கும் எனக் கூறியுள்ளது. ஆனால் பாலஸ்தீனர்களோ படை விலக்கல் செப்டெம்பர் மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர். வை பிளான்டேசன் ஒப்பந்தம் அப்படித்தான் கூறுகிறது எனக்கூறும் பாலஸ்தீனத் தலைவர்கள், இஸ்ரேல் வேண்டுமென்றே தாமதப்படுத்துவதாகக் கூறுகின்றனர். இதற்குப் பதிலளித்த இஸ்ரேலியப் பிரதமர், தாம் வை பிளான்டேசன் நடைமுறைகளை செப்டெம்பர் மாதம் ஆரம்பிப்பதாயும் அதனை செயற்படுத்துவது ஒரு மாதத்திற்குப் பின்செல்லும் என்றும் கூறியுள்ளார்.

இதற்கிடையே திருபராக் தற்போது மொஸ்கோவில் பிரதமர் ஜெல்சினுடனும் வேறு அமைச்சர்களுடனும் பேச்சுக்களை மேற்கொண்டு வருகிறார். இப் பேச்சுக்களில் சிரியாவுடன் இஸ்ரேலுடனான நல்லுறவுகள் மீண்டும் ஏற்படுவது பற்றிய பேச்சுக்களில் முக்கியத்துவம்பெறும் எனச் சொல்லப்படுகிறது.

கடந்த மாதம் சிரிய அதிபர் ஹபீஸ் அல் அசாத் ரஷ்யாவிற்குச் சென்றுவந்தார் என்பதும், சிரியாவும் ரஷ்யாவும் எதிர்காலத்தில் ஆயுத உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவது பற்றியும் பிரஸ்தாபித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆயுத ஒப்பந்தத்தில் இஸ்ரேல் அவ்வளவாக உடன்படவில்லை என்றும் தற்போது பயணம் மேற்கொண்டுள்ள இஸ்ரேலியப் பிரதமர் இது பற்றியும் ரஷ்யத் தலைவர்களிடம் பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலிபான்கள் பல முனைகளில் வெற்றி

ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்களான தலிபான்கள், கடந்த வார இறுதியில் தாம் நீண்ட காலமாகத் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். நாட்டின் 90 வீதமான பகுதியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் தலிபான்கள், வடபகுதியில் சில பிராந்தியங்களில் மட்டும் எதிர்த்தரப்பு முன்னைநாள் ஆட்சியாளர்களுடன் மோதலைத் தொடர்ந்து வருகின்றனர்.

தமது புதிய இராணுவ நடவடிக்கையின் மூலம் ஷொமாலி பள்ளத்தாக்கில் பல பிராந்தியங்களைக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் பஞ்சேர் பகுதியில் சாரிக்கார் நகரப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். பல வருடங்களாக இப்பகுதியை வெற்றிகொள்ள முடியாத தலிபான்கள், இம்முறை இப்பகுதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததன் மூலம் இந்துகுஸ் மலைப் பகுதியைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இதற்காக சலாங் சுரங்கவழியூடாக தமது படையினரை நகர்த்திவரும் இவர்கள், தமது கூட்டான இறுதி தாக்குதலை அகமட் ஷா மசூத்தின் படைகளுக்கெதிராக மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சீனா ஏவுகணையைப் பரிசோதித்தது

சீனா புதிய நீண்டதூர தரையில் இருந்து தரைக்கு ஏவும் தனது ஏவுகணை ஒன்றை நேற்று பரிசோதித்துள்ளதாக அறிவித்துள்ளது. தமது சோதனை முழு வெற்றி அடைந்துள்ளதாகக் கூறிய சீனப் பாதுகாப்பு அமைச்சு, அந்த ஏவுகணை விபரத்தை வெளியிட மறுத்துள்ளது. இதற்கிடையே சீனா தனது மற்றுமொரு ஏவுகணையான டொங் பொங் 31 எனும் நவீன ஏவுகணையை மிக விரைவில் பரிசோதிக்கும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ் ஏவுகணை சுமார் 8000 கிலோ மீற்றர் தூரத்தை 700 கிலோ அணு முனையுடன் தாண்டக்கூடியது என்றும் சொல்லப்படுகிறது.

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே அண்மைக் காலமாக கொந்தளிப்பு நிலை காணப்படுகிறது. தாய்வானின் தலைவர், சீனாவிற்கும் தாய்வானுக்கும் இடையேயான பேச்சுக்கள் இனிமேல் அரசுகளுக்கிடையிலான பேச்சாகவே இருக்கும் என கூறினார். இதனையடுத்து சீனா தனது படைப்பிரிவுகளை தாய்வான் கரைப் பகுதியில் பயிற்சிகளில் இறக்கியது. இப்படியான நிலையில் சீனா மீண்டும் ஓர் அச்சுறுத்தல் நடவடிக்கையாக புதிய ஏவுகணையொன்றை விண்ணிற்கு ஏவி பரிசோதித்தது குறிப்பிடத்தக்கது.

## கொசோவோ படைத்தளபதிகளுக்குள் பனிப்போர் வெஸ்லி கிளார்க் - ஜக்சன் கடும் வார்த்தைப் பிரயோகம்

கொசோவோவின் படைத்தளபதி ஜெனரல் மைக்கல் ஜக்சன் நேட்டோவின் பிரதம தளபதியான வெஸ்லி கிளார்க்கின் உத்தரவை நடைமுறைப்படுத்த மறுத்துள்ளார். அதை நடைமுறைப்படுத்தினால் உலக ரீதியான மற்றுமோர் போர் ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனரல் வெஸ்லி கிளார்க் பிரிஸ்ரினா விமான நிலையத்தை ரஷ்யப் படைகள் திடீரென கைப்பற்றிய நேரத்தில், அதனை முறியடிக்கும் விதமாக உடனடியான விமானப்படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜக்சனுக்கு உத்தரவிட்டுள்ளார். இதனை ஜெனரல் ஜக்சன் முற்றாக மறுத்ததுடன், உமது விருப்பிற்காக மூன்றாவது உலகப் போர் ஒன்றினைத் தோற்றுவிக்க என்னால் இயலாது எனக் கூறியுள்ளார். ஜக்சன் மறுத்ததைத் தொடர்ந்து, பிறிஸ்ரினா விமான நிலையத்திற்கு ஓர் உலங்குவானூர்தி படைப் பிரிவு ஒன்றை அனுப்புமாறு நேட்டோவின் தென்பகுதி தளபதியான அட்மிரல் எலியாசிற்கு உத்தரவிட்டார். ஆனால் அவ் உத்தரவினை எலியாசும் ஏற்க மறுத்துவிட்டார்.

இது இப்படியிருக்க, கொசோவோ விடுதலை இராணுவத்தின் இராணுவத் தளபதி ஒருவர் ரஷ்யப்படைப்பிரிவால் கைதுசெய்யப்பட்டார். அத்துடன் பல இடங்களில் ரஷ்யப் படைப்பிரிவுக்கும் கொசோவோப் போராளிக்குமிடையே பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன.

## அமெரிக்காவை கலக்கிய மற்றொரு துப்பாக்கித் தாக்குதல் 12 பேர் பலி


கொலையாளி

அமெரிக்காவின் அத்லாண்டா பகுதியில் கடும் உளவியல் தாக்கத்திற்குள்ளான பங்குச் சந்தை வர்த்தகர் ஒருவர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் 11 பேர் பலியாகியுள்ளனர். அதன் பின்னர் அவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலைசெய்துகொண்டார். மார்க்பார்ட்டன் என்ற இவ்வர்த்தகர் தனது வீட்டிலிருந்த மனைவியையும் இரு பிள்ளைகளையும் சுட்டுக்கொன்றபின் பங்குச் சந்தைத் தரகர் அலுவலகத்திற்கு வந்து அங்கிருந்த ஐந்துபேரைச் சுட்டுக்கொன்றபின் வெளியே நின்ற நான்குபேரையும் சுட்டுக் கொன்றுள்ளார். இச் சம்பவத்தில் மேலும் 12 பேர் காயமடைந்துள்ளனர். நண்பகல் வேளையில் இத்தாக்குதல் நடைபெற்றதால் அப்பகுதியே பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. இத் தாக்குதல் நடாத்தியவர் மூன்று துப்பாக்கிகளை தன்வசம் வைத்திருந்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் தற்பொழுது இவ்வாறான தனிரக துப்பாக்கி தாக்குதல்கள் சம்பவங்கள் அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

Thomas Mann Str 21,53111 Bonn

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

# சுவிஸ் அல்ப்ஸ் அனர்த்தத்தில் 19 பேர் மரணம்

சுவிஸ் அல்ப்ஸ் மலைப்பகுதியில் நீர் வீழ்ச்சிப் பகுதியில் கடந்த புதன்கிழமையன்று ஏற்பட்ட அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது என சுவிஸ் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். கடந்த செவ்வாயன்று 45 உல்லாசப் பயணிகளைக்கொண்ட குழுவொன்று 6 வழிகாட்டிகளின் துணையுடன் அல்ப்ஸ் மலைப்பகுதி நீர்வீழ்ச்சியில் இருந்து குதித்து நீர்வழியாக சாக்ஸ்டன் ஆற்றுக்குவரும் முயற்சியில் இறங்கினர். 'Canyoning' என அழைக்கப்படும் இவ் விளையாட்டில் ஈடுபடுபவர்கள் நீர்வீழ்ச்சியின் வழியாக கீழிறங்கி வருவது வழக்கம். இம்முறையும் ஆரம்பம் வழக்கம்போல்தான் இருந்தது. இடைவழியில் கடுமையான ஒரு சத்தத்துடன் நீர் வீழ்ச்சிகளில் நீரின் அளவு அதிகமாகியதுடன், வேகமும் திடீரென அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே இவ்விளையாட்டில் ஈடுபட்டவர்கள் எதிர்பாராத விதமாக மாட்டிக்கொண்டனர். திடீரென அதிகமாகிய வெள்ளம் உல்லாசப் பயணிகளை மிகவும் வேகமாக அடித்துச்சென்றுள்ளது. இந்த அனர்த்தத்தில் இறந்தவர்களுக்குள் பிரித்தானியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, சுவிஸ் பிரஜைகளும் அடங்குகின்றனர்.

ஒவ்வொரு கோடைகாலத்திலும் 50,000 பேர்வரை 'Canyoning' நீர்சறுக்கில் ஈடுபடுவது வழக்கம். கடந்தவாரம் இடம்பெற்ற அனர்த்தத்தைத் தொடர்ந்து மறு அறிவித்தல்வரை எல்லா நீர்சறுக்கு விளையாட்டுக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சுவிஸ் நிர்வாகம் அறிவித்துள்ளது.



காணாமல் போனோரின் சடலங்களை தேடும் பணியில் ஈடுபட்டிருப்போர்...

# வடகொரியாவின் ஏவுகணைகள் பொருளாதார தடைக்கு காரணமாகலாம்!

## அமெரிக்கா எச்சரிக்கை

வடகொரியா மேலும் ஒரு நீண்டதூர ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொள்ளுமானால் அந்நாட்டின்மேல் கடுமையான பொருளாதார தடையை ஏற்படுத்த வேண்டிவருமென அமெரிக்கா எச்சரித்துள்ளது. அத்துடன் அமெரிக்காவின் ஆசிய ஆதரவு நாடுகள் கொரியாவுடன் கொண்டுள்ள உறவுகளையும் முறித்துக்கொள்ள திட்டமிட்ட ஏவுகணைப் பரிசோதனை காரணமாகலாம் என்றும் அமெரிக்க வெளியுறவு செயலர் மெடலின் அல்பிரைட் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் ஆசியன் நாடுகளின் பாதுகாப்பு மாநாடு நடந்து முடிந்தது. அதில் அமெரிக்க வெளியுறவு செயலர் மெடலின் அல்பிரைட்டும் கலந்துகொண்டார். அம்மாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலான நாடுகள், வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தலை எதிர்நோக்குவதாக கூறியுள்ளன. முக்கியமாக ஜப்பான், தென்கொரியா போன்றவை நேரடியாக இதனால் பாதிக்கப்படும் எனத் தெரிவித்தன. இதேவேளை வடகொரியா ஏவுகணையானது அமெரிக்காவிற்கும் அச்சுறுத்தலாகவே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் இறுதியில் கொரியா அடுத்தடுத்த வாரங்களில் ஒரு நீண்டதூர ஏவுகணைப் பரிசோதனையை நடாத்த தீர்மானித்துள்ளது. அது ஏவுகணையோ அல்லது செயற்கைக்கோள் பரிசோதனையோ எதுவாக இருந்தாலும் அது இராஜதந்திர ரீதியில் பெரும் நெருக்கடிகளை வடகொரியாவிற்கு ஏற்படுத்தும் என அமெரிக்கா, தென்னாபிரிக்கா, ஜப்பான் போன்றன கூட்டாக மகஜர் ஒன்றினை வெளியிட்டன.

வடகொரியா கடந்த சில மாதங்களிற்கு முன் தாய்போ-டொங் I எனும் நீண்டதூர ஏவுகணையொன்றினை பரிசோதனை செய்தது. தற்போது தாய்போ-டொங் II எனும் புதிய வடிவ ஏவுகணையை பரிசோதிக்க எண்ணியுள்ளது. இம்முறை வடகொரியா அபிவிருத்தி செய்துள்ள புதிய வடிவமானது சுமார் 6,000 கிலோமீற்றர் தூரம் வரை செல்லக்கூடியது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பகுதிநோக்கி ஏவப்பட்டால் அலஸ்கா அல்லது ஹவாய் பகுதிகளையும் அது தாக்கக்கூடும் என அமெரிக்க பாதுகாப்பு தரப்பு கவலை தெரிவித்துள்ளது.

# மனித உரிமைகள் நீதிமன்றம் பிரான்சை குற்றவாளியாக்கியது

பிரான்சில் இயங்கும் மனித உரிமைகள் நீதிமன்றம் கடந்த புதனன்று வெளியிட்ட தீர்ப்பொன்றில், பிரான்ஸ் முறையற்ற சித்திரவதைகளைப் புரிந்ததன் மூலம் மனித உரிமைகளை மீறியுள்ளது என்றும், பாதிக்கப்பட்ட குற்றவாளிக்கு பிரெஞ்சு அரசு 100,000 அமெரிக்க டொலர்களுக்குச் சமனான பணத்தை நஷ்டமாக வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் துருக்கி மாத்திரமே சித்திரவதைகளுக்காக மனித உரிமை குற்றவாளியாக இதுவரை காணப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்தைச் சேர்ந்த மொரோக்கோ வாசியான அகமத் செல்முனி எனும் 57 வயதுநபர் 1991-ம் ஆண்டு பிரெஞ்சு பொலிசாரினால் போதைவஸ்து விற்பனையாளர் எனக் கைது செய்யப்பட்டார். பின் விசாரணைகள் முடிவுற்று 13 வருட சிறைத்தண்டனை இவருக்கு வழங்கப்பட்டது. இதற்கிடையே 1992-ம் ஆண்டு இவர் தன்னைக் கைதுசெய்த பொலிசார் தன்னுடன் தகாத முறையில் நடந்துகொண்டனர் என்றும், கடுமையான சித்திரவதைகளைப் புரிந்தனர் என்றும்கூறி தான் இந்தச் சித்திரவதைகளால் கடுமையான உடல், உளவியல் பாதிப்புகளை அடைந்துள்ளதாயும் கூறி எதிர்வழக்கு தாக்கல் செய்தார். பேஸ்போல் மட்டையால் தன்னைத் தாக்கியதாயும் தனது இடது கண் பார்வையை இழந்துவிட்டதாயும் விசாரணையின்போது தெரிவித்திருந்தார்.

இவரது முறைப்பீட்டை விசாரணைக்கெடுத்த பிரெஞ்சு நீதிமன்றம், சுகாதார அறிக்கைகளின்படி சில குற்றச்சாட்டுக்களை நிராகரித்தாலும், பொலிசாரின் சில நடவடிக்கைகள் யாவரையுமே பாதிக்கக்கூடியவை எனக்கூறி இதில் சம்பந்தப்பட்டதாக கூறப்பட்ட ஐந்துபேருக்கும் மூன்றுவருட சிறைத்தண்டனை வழங்கியது. பின்னர் இத்தண்டனை குறைக்கப்பட்டு, பின் யூலை முதலாம்திகதி முறையீடு செய்யப்பட்ட நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டது.

# நேட்டோ தளபதியின் ஓய்வு

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் படைத்தளபதியாக கடமையாற்றும் ஜெனரல் வெஸ்லி கிளார்க் தனது வழக்கமான ஓய்வுக் காலத்திற்கு முன்பாகவே ஓய்வு பெற்றுள்ளார். பென்டகனின் இந்த ஆச்சரியமான அறிவிப்பானது, பெல்ஜியத்தில் உள்ள அதன் தலைமையகத்தில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.



கொசோவோவில் நேசநாடுகளின் படைக்கு வெற்றி கிடைக்க காரணமாய் இருந்த ஜெனரல் வெஸ்லி கிளார்க் ஏன் மூன்று மாதங்களிற்கு முன்பாகவே ஓய்வு பெறவேண்டும் என கோரப்பட்டுள்ளார் என்பது இதுவரை அறியப்படாத போதிலும், பதினொரு வாரகால கொசோவோ தாக்குதல்களில் தன்னை ஒரு கதாநாயகனாக காட்டிக்கொள்ள முயன்றதுவும், தன்னிச்சையான முடிவுகளை எடுத்ததுவும் காரணமாய் இருக்கலாம் என கூறப்பட்டுள்ளது. கொசோவோவில் தரைப்படைகளின் தலையீடு உடனடியாக அவசியம் என வெஸ்லி கிளார்க் வலியுறுத்திவந்தார். அவரது தனிப்பட்ட விருப்பின்படி அல்பேனியாவுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட 24 அப்பாஷ் உலங்குவானூர்திகள் கிளின்டன் நிர்வாகத்தால் யுத்த இறுதிவரை பயன்படுத்தப்படவில்லை.

நேட்டோவின் செயலாளர் நாயகம் சாவியர்சொலானா, இவ்வருட இறுதியில் ஓய்வு பெறவுள்ளார். அதேபோல் நேட்டோவின் இராணுவ செயற்குழுவின் தலைவரான ஜெனரல் கிளவுஸ் நியுமனும் பதவி விலகுகிறார். மேற்கண்ட மூவரும் நேட்டோவின் ஆரம்ப தாக்குதல்களின் காரணகர்த்தாக்களாவார்கள். தற்போது ஓய்வு பெறவுள்ள வெஸ்லி கிளார்க் அமெரிக்காவின் உயர் பதவியான ஸ்தானிகர்பதவி வழங்கி கௌரவிக்கப்படுவார் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர். அவரது இடத்திற்கு 54 வயதான ஜெனரல் ரல்ஸ்டன் நியமிக்கப்படவுள்ளார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# உலகின் 'பொலிஸ்காரன்' வேலையை அமெரிக்கா நிறுத்தவேண்டும்

## – ரஷ்ய பிரதமர் –

அமெரிக்கா சர்வதேச ரீதியில் பிரச்சினைகளில் மூக்கை நுழைத்து, உலகின் பொலிஸ்காரனாக தன்னை அடையாளம் காட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென ரஷ்யாவின் புதிய பிரதமரான சேர்கெய் ஸ்டொஷின் தேசிய பத்திரிகையாளர்கள் சங்கத்தில் பேசியபோது எச்சரித்துள்ளார். கொசோவோ தலையீட்டின்பின் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உறவுகளில் விரிசல் தோன்றின. அதன் வடு இன்னமும் ஆறவில்லை என்பதை ரஷ்ய பிரதமரின் பேச்சு எடுத்துக்காட்டியுள்ளது என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் விஜயம் மேற்கொண்டு அந்நாட்டின் தலைவர்களை சந்தித்துப் பேசவுள்ள ஸ்டொஷின், கிளின்டன் தலைமைத்துவம் என்பதை முற்றாக மறுத்தவர். சுதந்திர இறைமை கொண்ட நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் அதன் எண்ணம், மிகவும் ஆபத்தானது என்றும் கூறிய அவர், 78 நாட்களாக யூகோஸ்லாவியா மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா, தற்போது அந்நாட்டின் அதிபர் மிலோசோவிச்சை பதவியில் இருந்து அகற்ற சதி செய்கிறது. அத்துடன் கடுமையான குண்டுவீச்சுக்களால் சிதைந்துபோன சேர்பியாவுக்கு உணவு மற்றும் புனரமைப்பு உதவிகளைச்செய்ய அது மறுத்துவருகிறது என்றும் கண்டித்திருந்தார்.

எப்படியிருந்தபோதிலும் இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது எனக் கூறிய அவர், அணு ஆயுத குறைப்பு சம்பந்தமாக இரு தரப்பும் தொடர்ந்தும் பேச்சுக்களை நடாத்தும். அத்துடன் இரு நாடுகளும் பரஸ்பர நல்லெண்ண பேச்சுக்களை அடுத்த மாதம் முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் என்றும் மேலும் கூறினார்.

# பாரிஸ் லாசப்பலில்


## கைத்தொலைபேசி இணைப்பு நிலையம்

# Titanic Com


**எமது வாடிக்கையாளர்களுக்கு 1Fr உடன் அதி நவீன நீங்கள் விரும்பும் கைத்தொலைபேசியையும், இணைப்பையும் பெற்றுக்கொடுக்கிறோம்.**






- ★ அதி நவீன கைத்தொலைபேசிகள்
- ★ தொலைபேசி உதிரிப்பாகங்கள்
- ★ தொலைபேசி திருத்த வேலைகள்
- ★ Photocopy பிரதிகள்
- ★ Fax அனுப்பவும், பெற்றுக்கொள்ளவும்
- ★ Video, Audio கசற்றுகள் விற்பனைக்குண்டு
- ★ France, Telecom இன் Ticket தொலைபேசி அட்டைகள்




மேலும் மிக விரைவில் உங்கள் உறவுகளுடன் தொடர்பு கொள்ள அதிக நிமிடங்களுடன் Titanic Com இன் தொலைபேசி அட்டைகளும் வரவிருப்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.











1 Fr

**203, Rue de la Chaplle**
**75010 Paris.**
**Tel: 01 53 26 36 10**
**Fax: 01 53 26 36 12**



1 Fr



ஈழமுரசு
Eelamurasu Weekly
“உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை”

# இதுதானா நீதி?

ஒரு சமூகமே தனது வாழ்வியல் உரிமைக்காக மரணத்தின் விளிம்பில் நிற்கும் கொடுமையினைப் புறம்தள்ளி தனிமனித மரணத்திற்காக ஓலமிடும் ஜனநாயக நாடுகள் சுழன்றுகொண்டிருக்கும் இந்த உலக கோளத்தில்தான் மனித நேயம் எங்கோ ஓரிடத்தில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இங்குநாம் தனிமனித மரணமொன்றிற்காக இரங்கல் தெரிவிக்கும் சக்திகளை குத்திக்காட்ட வரவில்லை. மாறாக வன்னியிலே நாளாந்தம் பசியினாலும் நோயினாலும் உடல்கள் பிணங்களாகச் சரியும் கொடுமையினைக்கூட கண்ணிருந்தும் குருடர்களாக நோக்கிய இச் சக்திகள், தனிமனித மரணத்திற்காக ஜனநாயகமே இறந்துவிட்டதாக கண்ணீர் வடித்து நிற்பதனை எந்தவகையில் வர்ணிப்பதென்று தெரியவில்லை. ஐ.நாவில் இருந்து அமெரிக்காவரை இந்தக்குரல் எழுந்துள்ளது. இப்போது இவ்வாறு குரலெழுப்பும் இச் சக்திகள் அப்பாவிகள் உணவுக்காகவும் மருந்துக்காகவும் வழியில்லாது சிறீலங்கா சிங்களப்பேரினவாதத்தின் கொடுமையினால் மரணித்துவரும்போது வாயடைத்துப்போனதேன். கடந்த சில நாட்களுக்கு முன்னதாக மன்னார் பகுதியில் தமிழிச்சியாக பிறந்த ஒரே காரணத்திற்காக சுமலிட்டா என்ற இளம்பெண் சிதைக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டபோதுகூட ஐ.நா மௌனமாக இருந்தது. ஐரோப்பிய ஆணைக்குழு, குரலெழுப்பவில்லை, அமெரிக்கா அலட்டிக்கொள்ளவில்லை. இந்த சமச்சீரற்ற நீதி தன்மையில் இருந்து இச்சக்திகள் தமிழ் மக்கள் மீது கொண்டிருக்கும் கரிசனை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிங்களப் பேரினவாதம் நடாத்தும் போரிற்கு தனது இராணுவ வல்லுநர்களை அனுப்பி கொம்பு சீவிவிடும் இச் சக்திகளின் உண்மையான நோக்கம் சமாதானமாக இருக்குமேயானால் இவ்வாறான கொம்பு சீவல்கள் எதற்காக? என்பதும் தமிழ் மக்களுக்கு விளங்காத விடயமல்ல, இன்றும் அபிவிருத்திக்காகவென பொய்ப் பரப்புரைகளுடன் சிறீலங்கா அரசு நிதியினைக்கேட்க அதனை அள்ளிக்கொடுக்கும் வள்ளல்களாகத்தான் இச் சக்திகள் இருந்து வருகின்றன. சிங்கள தேசம் தனது முழு வளங்களையும் தமிழர் தாயகத்தின்மீதான போர்வெறிக்குத் திசை திருப்பியுள்ள இவ்வேளையில்தான் இவர்களின் நிதிப் பங்களிப்பும் இடம்பெற்று வருகின்றது. நிதியைக் கொடுத்ததுடன் தமது கைகளை இச் சக்திகள் கழுவிக்கொள்கின்றன. கொடுக்கப்பட்ட நிதியை சிறீலங்கா என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறிந்துகொள்வதுகூட இல்லை. ஆனால் அடிக்கடி மனிதாபிமானம், ஜனநாயகம் என்பவற்றை பல்லவிகளாகக்கூறிவருகின்றன. ஆயினும் தமிழ் மக்கள் தமது விடுதலை மூலம் இந்த சக்திகளுக்கு ஒரு தெளிவினை ஏற்படுத்தத்தான் போகிறார்கள்.

# நீலனின் சாவுக்காக சிங்களத்தின் கண்ணீர் கதையளப்பு

நீலனின் சாவைமையமாக வைத்து அழுது சிங்கள நாடு மற்றுமொரு மகாவலி ஆற்றை பிரசவித்துவிட்டது. சிங்கள பத்திரிகைகள் தமிழனுக்காக அழுதன. கொழும்பு ஆங்கில ஏடுகள் சமாதானத்திற்காக அழுதன. சந்திரிகா தன் நண்பனுக்காகவும் தமிழர்களுக்காகவும் அழுதார். சம்பந்தன் ஜனாதிபதி பாதுகாப்புடன் அழுதார். இதைப் பார்த்த ஒரு கிராமப்புற அப்பாவிச் சிங்களவன், ஒரு மாபெரும் தமிழ்த் தலைவன் இறந்து விட்டதாகவே கருதிவிடுவான். ஆனால் இவை அனைத்தும் நாடகம் என்பதை தமிழர்கள் அறிவர். பின்கதவால் பாராளுமன்றம் போய் சிங்கள அரசின் இராணுவ பட்ஜெட்டை எதிர்ப்பதாக தமிழர்களுக்கு நாடகமாடிவிட்டு, முழு பட்ஜெட்டிற்கும் வாக்களிக்கும் நீலனின் வித்தைகள் எமக்கு தெரிந்தவையே.

ஆனால் நீலனுக்காக பில் கிளின்டனும், ஐநா செயலாளர் நாயகமும் பிற உலக நாடுகள் சிலவும் விடுத்த அறிக்கைகள்தான் தமிழர்களை 'சிந்திக்க' வைத்துள்ளது.

வன்னி உணவுத் தடைக்கு எதிராக, அல்லது செம்மணி புதைகுழிகளுக்காக, அல்லது மட்டக்களப்பில் புலிகள் வாழ்ந்த இடத்தில் வசித்தார் என்பதற்காக 3 வருட தண்டனை விதிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலைப் பெண்ணிற்காக கண்ணீர் சிந்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இது வரை கிளின்டனோ அல்லது ஐ.நா.சபை அனானோ கண்ணீர் விடவில்லை!! இந்த வெளிவிவகார தர்மமானது தமிழர்களுக்கு, 'உலகின் இரட்டை போக்குப் பற்றி' புரிய வைக்கின்றது.

**பார்வை**

அமெரிக்க அதிபருக்கு தன் நாட்டின் தலை சிறந்த நிறுவனத்தில் கல்வி பயின்று பணியாற்றிய நீலனுக்கு கண்ணீர் விட உரிமை உண்டு. ஆனால் நீலனின் அரசியல் நிலையை தரமுயர்த்தி கருத்து வெளியிடப்படும் போது, இவ் அறிவிப்பின் உள் நோக்கம் பற்றி 'தமிழர்கள்' சந்தேகிக்கின்றனர்.

பல்வேறு ஐ.நா பணிகளில் பங்கேற்றவர் என்ற காரணத்திற்காக கோபி அனான் செய்தி அனுப்புவது நாகரீகமானது ஆயினும், தீவிரவாத அரசின் தீவிர ஆதரவாளனான தீவிரவாதியை மிதவாதத் தலைவன் என அவர் விபரிக்க முற்படும் போது மக்கள் 'குழப்ப'முறுகின்றனர்.

சர்வதேச சமூகத்தின் சில பிரதிநிதிகள் முன்வைத்த செய்திகளில் நாகரிகமாக ஒரு தகவல் முன்வைக்கப்பட்டிருந்தது. இனச் சிக்கலின் தீர்வை இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்துவதாக கிளின்டனும் அனானும் கூறினர். இனச் சிக்கலின் புற நிலவரமாக தாம் இதனைப் பார்ப்பதாக அமெரிக்கா கூறுகின்றது.

இச் செய்திகள், தமிழர்களை இராஜதந்திர ரீதியாக அமைதிப்படுத்தப்பட எடுக்கப்பட்ட நடவடிக்கையாகப் பார்க்கலாம். நீலனின் சாவு தொடர்பான செய்திகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட முறையில் சிறீலங்காவின் பரப்புரை சாதனங்களால் உலகம் முழுவதும் சொல்லப்பட்டு அனுதாபச் செய்திகள் வாங்கப் பெற்ற நிலையில் இனச்சிக்கலைத் தீர்ப்பதுதான் இவ் நிலவரத்தை தணிக்க உதவும் என கிளின்டன் கூறுவது, சிங்களத்தின் தீவிர பரப்புரை நோக்கிற்கு 'சற்று' சங்கடமானது.

நீலனின் சாவை சில இந்திய ஏடுகள் அப்பட்டமான 'பரப்புரை வணிகமாக' கருதிச் செயற்பட்டன. புலிகளை வசைபாடுவதை தொழிலாக ஏற்றுக்கொண்ட The Hindu ஏடு, கண்மூடித்தனமான பரப்புரை அறிவுரைகளை அள்ளி வீசியுள்ளது. மற்றுமொரு இந்திய ஏடு சிங்கள அரசுக்கு வழங்கிய அறிவுரைகளில், தீர்வுப்பொதியை அமுல்படுத்தி தமிழ்மக்களை பிரித்தெடுத்து புலிகளை அழிக்கலாம் எனக் கூறியுள்ளது. அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் இடம்பெற்றதன் மூலம் ஏற்கனவே செல்லுபடியற்றதாகிவிட்ட புலிகள் அமைப்பு, நீலனை அழித்து தலைமையிடத்தை பிடிக்க முயல்வதாகக் கூறியுள்ளது. இவ் ஏடுகள் தமிழ் மக்களுக்கு தலைமையை தேர்வு செய்வதற்குரிய உரிமை கூட இல்லாமல் செய்து, நீலனை தமிழர்களின் தலைமையாக தாமே காட்ட முயல்வது, 'சனநாயக விரோதம்' என்ற கோட்பாட்டைக் கூட மதிக்கவில்லை!

அமெரிக்கப் பயங்கரவாதப் பட்டியல் அமெரிக்க அரசியல் நலனுக்கானது என்பதும் இன்று மதிக்கப்படும் நெல்சன் மண்டேலா அமெரிக்காவால் பயங்கரவாதியாகக் கருதப்பட்டவர் என்பதும், 'குறித்த' இந்திய ஏட்டின் கண்மூடித்தனமான பரப்புரை வெறிக்கு(!) புரியாதவை.


நீலனின் சாவை கதிர்காமர் எதிர்வரும் சில காலத்திற்கு பரப்புரைக்காக பயன்படுத்துவார். சனநாயக தலைமையை புலிகள் அழித்து விட்டதாக கூறுவதற்காக உலக உலா வருவார். வன்னிமீது புரியப்படும் குற்றங்களை மறைக்க நீலனை, கதிர்காமரும் அவரது தலைவியும் பயன்படுத்துவர். இவர்களது பரப்புரைக்கு ஏதுவாக சிங்கள நீதித்துறையும் பொலிஸ் துறையும் விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்களை வழங்குவர்(?) ஏற்கனவே அரச ஏடான 'டெய்லி நியூஸ்', பிரபாகரன் நேரிடையாக உத்தரவிட்டு தற்கொலைப் போராளியை அனுப்பியதாகக் கூறும் கதைகளும், தற்கொலைப் போராளி இனம் காணப்பட்டார் எனக் கூறுவதும் சர்வதேச நுகர்வுக்காக கொடுக்கப்படும் பரப்புரைக் கதைகளாகும்.

அமெரிக்க அரசு தன் பயங்கரவாதப் பட்டியலை புதுப்பிக்கும் போது, மீள புலிகளை அதனினுள் நிறுத்துவதற்கு மேலும் சில மில்லியன்களை கதிர்காமர் செலவிடுவார். ஐரோப்பிய சமூகத்தின் மத்தியிலும் இத்தகைய வித்தைகளை அரசு தீவிரப்படுத்தும்.

ஆனால் நீதியான இலட்சியமும் அது சார்ந்த மக்கள் ஆதரவும், போலித்தனத்தின் இரட்டை வேடத்தை 'தகர்க்க' வல்லன.

சிங்கள அரசு வன்னிக் குற்றங்களை மறைத்து - தனது பரப்புரைத் திட்டத்தை முன்னே எடுக்க முயல்கையில், நாம் எமது தேவையான வன்னிக்கான உடனடி உணவு மற்றும் பிற விடயங்களை உலகிற்கு முன்னே கொண்டு வந்தாக வேண்டும் ஜெனிவாவில் ஐ.நா. முன்பு எதிர்வரும் திங்களன்று கூட உள்ள சனத்திரள் இத் தமிழர் திட்டத்தை பலப்படுத்தட்டும்.

—ராஜா




நன்றி: 'தினக்குரல்'

# மறுபிறவி 11

**- சுபா.சுந்தரம் -**

(தன் சிறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் தமிழ்ஆர்வலர்)

இசை என்ற தென்றல் தான் எங்கள் மனப் புழுக்கத்திற்கு கவரி வீசும். மாலை ஆறு மணிக்கு எல்லோரும் அவரவர் செல்லுக்குள் அடைக்கப்பட்டிருந்தாலும் ஒரு செல்லிலிருந்து மற்ற செல்லில் உள்ளவர்களிடம் உரக்கக் கத்திப் பேசிக் கொள்வோம். சிறிது நேரத்திற்கெல்லாம் பாட்டுக் கச்சேரி தொடங்கும். அலுமினியத் தட்டில் தாளம் போட்டபடி பேரறிவாளன் பாடுவார். மற்றவர்கள் பாடும் போது அறிவு தான், அதற்கேற்ப தாளமிடுவார். அந்த இசை இனிமையாக இருக்கும்.

விஜயனுக்குத் தெரிந்தது ஒரே ஒரு பாட்டுத் தான். 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா' என்ற பாட்டுத்தான் அவருக்கு முழுமையாகத் தெரியும். திரும்பத் திரும்ப அவர் அதையே பாடிக் கொண்டிருந்ததால், இனி அந்தப் பாட்டை பாடக் கூடாது என்றுமற்றவர்கள் 144 தடையுத்தரவு போட்டு விட்டனர். பாவம் விஜயனுக்கு, அதன் பிறகு பாடுவதற்கான சந்தர்ப்பம் குறைந்து விட்டது.

நானும் என் பங்குக்கு பாடுவதுண்டு. எல்லாம் பழைய பாடல்கள் தான். முழுப் பாடல் தெரியாவிட்டாலும் பாதிப் பாதி பாடலாகப் பாடுவேன். தாளத்திற்கு ஏற்றபடி என் குரல் ஒத்துழைத்ததால் எல்லோரும் உற்சாகமூட்டி தொடர்ந்து பாடச் சொல்லுவார்கள். நானும் ஆர்வத்துடன் பாடுவேன். சிறைச்சாலையில் பொழுதை எப்படி ஓட்டுவது என்பது தான் முக்கியம். அதனால் மற்றவர்களுடன் சேர்ந்து நானும் அதற்குத் தகுந்த படி என்னை தயார் படுத்திக் கொள்வேன். மாலை நேரத்தில் பாட்டும், தாளமும் சிறை வளாகத்தை நிறைத்திருக்கும். இரவு 9 மணி ஆனதும் ஏட்டய்யா குரல் கொடுப்பார்; 'மணி ஆச்சு தூங்குங்கப்பா!'

அந்த குரலுக்குப் பின் பாட்டுச் சத்தம் அடங்கி விடும். மனப் புழுக்கம் அதிகமாகி விடும்.

தமிழகத்தில் தடா சட்டத்தின் கீழ் கைதான முதல் 10 பேர்களில் நானும் ஒருவன். தடா சட்டத்தை விளக்கக் கூடிய புத்தகங்கள் எதுவும் அப்போது தமிழகத்தில் இல்லை. இது பற்றி புதிதாக ஒரு புத்தகம் வந்திருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. பேரறிவாளனின் தாயார் அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு சிறைச்சாலைக்கு வந்தார். தடா சட்டத்தில் சிறைப்படுத்தப் பட்டவர்கள், வழக்கறிஞர்களைப் பார்ப்பதற்கு நானும் அறிவும், வழக்கறிஞர் எஸ்.துரைசாமி மூலம் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததைப்பற்றியும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் புத்தகத்தினால் நாங்கள் மட்டுமல்ல, சிறைத்துறை அதிகாரிகளும் பல விளக்கங்களைத் தெரிந்து கொண்டனர். ஏனெனில் சிறைத்துறைக்கும் தடா கைதிகளை எப்படி நடத்துவது என்பதில் ஏக சிக்கல் இருந்தது. அதுவும் ராஜீவ் கொலைவழக்கை மத்திய அரசின் சி.பி.ஐ. நடத்தியதால், மத்திய மாநில உறவில் எந்த இடர்பாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் சிறைத்துறையினர் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

செங்கை சிறைக்கு வெளியே எப்போதும் ஒரு அம்புலன்ஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். சிறைவாசிகளுக்கு ஏதேனும் உடல் நிலைபாதித்து உயிர்க்கு ஆபத்து என்றால் உடனடியாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதற்காகத் தான் அந்த ஆம்புலன்ஸ். சி.பி.ஐ. காவலில் இருந்த போது எனக்குக் கொடுத்த 'ட்ரீட்மெண்ட்' பற்றிய ரிப்போர்ட் சிறைத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. மாலையில் டூட்டியில் உள்ள அதிகாரி, எனக்கு நெஞ்சு வலி வந்தால் நாக்குக்கு அடியில் வைத்துக் கொள்ளும்மாத்திரையைத் தன் வசம் எப்போதும் வைத்திருப்பார். இரவு 12 மணிக்கு டூட்டி மாறும் போது அப்போது பணிக்கு வரும் அதிகாரியிடம் மாத்திரையைக் கொடுத்து விட்டு செல்வார்.

தனிமை சிறையில் படுத்திருக்கும் போது, நமக்கா இந்த நிலைமை என்ற எண்ணம் தோன்றும். பிள்ளைகளின் படிப்பு, குடும்ப நிலைமை எல்லாம் நினைவுக்கு வரும். அவர்களின் எதிர்காலம் பற்றி நினைக்கத் தொடங்கியதுமே மன அழுத்தம் அதிகமாகும். நெற்றி எல்லாம் வியர்க்கும். நெஞ்சு படபடக்கும். அந்த மாதிரி சமயங்களில் சிறை அதிகாரியை அழைத்து மாத்திரை வாங்கி நாக்குக்கு அடியில் வைத்து சமாளித்துக் கொள்வேன். சிறைவாசிகள் படிப்பதற்காக தினமணி நாளிதழ் வழங்கப்படும். அதில் ராஜீவ் கொலை வழக்கில் யார் யார் கைதாகிறார்கள் என்ற தகவலும் படங்களும் வெளிவரும். கைது செய்யப் பட்டவர்களைப் போலிஸ் காவலில் கவனித்த பின், செங்கை சிறைக்கு கொண்டு வருவார்கள். அவர்களுக்கு சிறையில் சாப்பாடு கிடைத்துவிடும். சோப்புக்கும் பேஸ்ட்டுக்கும் தான் அல்லாட வேண்டியிருக்கும். இது தெரிந்தமையால் சென்னை சந்திக்க வருபவர்கள் மூலம் சோப்பும் பேஸ்ட்டும் போதுமான அளவில் வாங்கி வைத்திருப்பேன். சிறைக்கு வரும் புதியவர்களுக்கு அதைக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

செங்கை சிறையில், ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்படாத இருவர் எங்களுடன் இருந்தனர். ஒருவர் இலங்கையைச் சேர்ந்த சங்கர் என்ற கோனேஸ்வரன். மற்றவர், தமிழகத்தைச் சேர்ந்த ஜெகதீசன். சிவராசன் தமிழகத்திற்கு வந்த போது அவருடன் படகில் வந்தவர் தான் சங்கர். அவரை சென்னைக்கு அழைத்து வந்து லாட்ஜில் தங்க வைத்தவர் ஜெகதீசன். ராஜீவ்கொலைக்குப் பின் திருத்துறைப்பூண்டியில் சங்கரைக் கைது செய்த போலிசார். அவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் ஜெகதீசனையும் கைது செய்தனர்

இவர்கள் மூலம் ஏதும் தகவல் கிடைக்குமா என்பதற்காக, தினசரி இவர்களுக்கு கைவிலங்கிட்டு வானில் ஏற்றி மல்லிகை வளாகத்திற்குக் கொண்டு வருவார்களாம். அங்கே ஒரு ஓரத்தில் வானை நிறுத்தி அதிலேயே உட்கார வைத்திருப்பார்களாம். மாலையில் ஏதேனும் ஒரு போலிஸ் நிலைய லாக்கப்பில் ஜட்டியுடன் உட்கார வைப்பது, மறுநாள் மீண்டும் வெளியே எடுத்து லுங்கி, சட்டை கொடுத்து கைவிலங்கிட்டு வானில் ஏற்றி மல்லிகை வளாகத்திற்குக்கொண்டு வருவார்களாம். விசாரணைக்கென்று சில நாள் திருச்சி சிறையிலும் பின்னர் சென்னை மத்திய சிறைச்சாலையிலும் இருவரையும் வைத்துள்ளனர். இவர்களிடம் தகவல் எதுவுமில்லை என்பதை அறிந்தாலும் ராஜீவ்கொலை வழக்கில் சேர்க்கவில்லை. ஆனால் எங்களுடன் செங்கல்பட்டு சிறையில் இருவரையும் வைத்தனர்.

புதியவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்வதும், அவர்களின் கதையை நாங்கள் கேட்பதும் சிறையில் வாடிக்கையான விஷயம். அப்படித்தான் அவர்கள் இருவரும் தங்கள் சோகக் கதையைக்கூறி ஜாமீனுக்காக காத்திருப்பது பற்றி தெரிவித்தனர். காவலை நீடிப்பதற்காக நீதிபதியே சிறைக்கு வருவார். அப்போது அவரிடம் ஜாமீன் மனு கொடுக்கும்படி இருவரிடமும் தெரிவித்தோம். நீதிபதியின் வருகைக்காக இருவரும் காத்திருந்தனர்.

சிறைவாசலில் கார் வந்து நின்றது- நீதிபதி சித்திக் இறங்கினார்... எல்லோருக்கும் இதயத்துடிப்பு அதிகரித்தது.

கைது செய்யப்பட்டு ஏழு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்த நிலையில், தன்னை இவ்வழக்கிலிருந்து ஜாமீனில் விடுவிக்கும்படி நீதிபதி சித்திக்கிடம் மனு கொடுத்



தார் ஜெகதீசன். அதனை ஏற்று ஜாமீன் வழங்கினார் நீதிபதி. ஆனால் சங்கர் என்ற கோனேஸ்வரன் சிறைவாசியாகத்தான் இருந்தார். செங்கல்பட்டு சிறையின் கூடுதல் கண்கா

> **வழக்கறிஞர்களைப் பார்ப்பதற்கு நானும் அறிவும், வழக்கறிஞர் எஸ்.துரைசாமி மூலம் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததைப் பற்றியும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் புத்தகத்தினால் நாங்கள் மட்டுமல்ல, சிறைத்துறை அதிகாரிகளும் பலவிளக்கங்களைத் தெரிந்து கொண்டனர். ஏனெனில் சிறைத்துறைக்கும் தடா கைதிகளை எப்படி நடத்துவது என்பதில் ஏகசிக்கல் இருந்தது.**

ணிப்பாளர்கள் மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்பட்டனர். மற்ற சிறைச்சாலைகளிலிருந்து இங்கு வரும் கூடுதல் கண்காணிப்பாளர்கள், அவரவர் ஸ்டைலுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

மாலையில் எங்களைச் செல்லுக்கு அனுப்புவதற்கு முன்பாக தேக பரிசோதனை நடத்தப்படுவது வழக்கம். ஆனால் ஒரு அதிகாரி, காலையில் செல்திறக்கும்போதும் தேக பரிசோதனை செய்யவேண்டுமென்று உத்தரவிட்டார். அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரு நாள் அதிகாரி சோதனையிடும் போது ஒரு 'திடுக்' சம்பவம், திருமணமான வாலிபர் ஒருவருக்கு அவரை அறியாமலே விடியற்காலையில் 'ஆண் அணு' அவரது லுங்கியில் படிந்திருந்தது. சோதனை செய்த அதிகாரியின் கையில் அது பட்டுவிட அவர் போய் மேல் அதிகாரியிடம் இந்தத் தகவலை (?!) சொல்லிவிட்டார். அன்றுமுதல் காலை சோதனை நிறுத்தப்பட்டது.

செங்கல்பட்டு கொசு கடித்தால் யானைக்கால் நோய் என்று சொல்வார்கள். செங்கை சிறைக்கு நான் சென்ற இரண்டு வாரத்தில் எனது இடதுகால் பாதத்திற்குமேல் முட்டிக் காலுக்கு இடையே பெரிய வீக்கம் ஏற்பட்டிருந்தது. ஜுரமும் கடுமையாக இருந்தது. கொசுக்கடிதான் இதற்கெல்லாம் காரணம். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலிருந்து டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர். மாத்திரைகள் கொடுத்தனர். ஜுரம் தணிந்தது. கால் வீக்கம் குறையவில்லை. யானைக்கால் நோய் தாக்கப்பட்டிருக்கலாம் என்று நினைத்த டாக்டர்கள், இதுபற்றி அறுவை சிகிச்சை நிபுணர்களிடம் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கூறிச் சென்றுவிட்டனர்.

இருநாட்கள் கழித்து மீண்டும் பெரிய டாக்டர்கள் வந்தனர். என்னை அழைத்து பரிசோதனை நடத்தினார்கள். அறுவைச் சிகிச்சைக்கு அவசியமில்லையென்றும், கொசுக்கடியினால் நரம்பில் புண் ஏற்பட்டதால் காலில் வீக்கம் என்றும் கண்டுபிடித்தனர். 'அப்பாடா' என்றிருந்தது அதற்குப் பின் மாத்திரைகள், மருந்துகள் தொடர்ந்தன. புண் ஆறினாலும் வடு மறையவில்லை. இப்போது அந்த வடுவைப் பார்த்தாலும் ராட்சத கொசுக்கள் ஏற்படுத்திய பயம்தான் ஞாபகத்திற்கு வரும்.

ஒவ்வொரு விஷயத்தை கவனித்துக்கொள்ளவும் தனித்தனி அதிகாரிகள் இருந்தனர். உணவுக்கென பொறுப்பில் இருந்தவர் டெபுட்டி ஜெயிலர்.

அவர்தான் ரேஷன் அளவு யார் யாருக்கு எவ்வளவு என்று, ஜெயில் மேனுவல்படி (Manual) கொடுப்பார். அவர் கொடுக்கும் ரேஷனுக்கு ஆண்டு தோறும் தணிக்கை உண்டு. வருமானவரி கட்டுகிறவர்களுக்கு நீதிமன்றத்தில் 'சிறப்பு வகுப்பு' கொடுப்பார்கள். ஒருமுறை எனது மனைவியும் மாமாவும் என்னைப் பார்க்க வந்தபோது, அவர்களிடம் 'நீங்கள் வக்கீல் மூலம் ஏற்பாடு செய்தால் சிறப்பு வகுப்பு கிடைக்கும். மேனுவல்படி சில சௌகரியங்களைச் செய்து கொடுக்க முடியும்' என்று ஒரு அதிகாரி ஆலோசனை கூறினார். அதைத் தொடர்ந்து வழக்கறிஞர் துரைசாமியிடம் இதுபற்றி தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக இதற்காக வழிமுறைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, எனக்கு சிறையில் சிறப்பு வகுப்பு வாங்கித் தந்தார். ராஜீவ் கொலை வழக்கில் சிக்கியவர்களில் முதன் முதலாக சிறப்பு வகுப்பு வசதி பெற்றவன் நான்தான்.

சிறப்பு வகுப்பு பெற்றவர்களுக்கு உணவில் மாற்றங்கள் உண்டு. 'சைவம் உண்டு, அசைவம் உண்டு. இரண்டில் நீ எந்த சாறு?' என்று கேட்காமல் கேட்பார்கள் சிறை அதிகாரிகள். சைவம் என்றால் மதிய சாப்பாட்டின்போது 30 கிராம் நெய் ஊற்றுவார்கள். காலையும் மாலையும் ம உண்டு. மதிய சாப்பாட்டில் சாம்பார், பொறியல், ரசம், தயிர் கிடைக்கும். மாலையில் வேர்க்கடலைக்குப் பதில் சுண்டல்.

அசைவக்காரர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் மதிய வேளையில் தலா 110 கிராம் இறைச்சி சமைத்துக் கொடுப்பார்கள். காலையிலும் மாலையிலும் சப்பாத்தி கிடைக்கும். சிறைவாசிகளில் என் ஒருவனுக்கு மட்டுமே சிறப்பு வகுப்பு என்பதால் அதற்குரிய ரேஷனை மட்டும் சமைப்பதென்பது சிறை அதிகாரிகளுக்கு சிரமமாக இருந்திருக்கிறது. முதல்நாள் மாலையில் எனக்கென்று கொடுக்கப்பட்ட 100 கிராம் கோதுமையில் சமையல் செய்பவர் அதிக அளவில் தண்ணீர் ஊற்றியதால் ரொட்டி சுடுவதா, தோசை ஊற்றுவதா என்று தெரியாமல் ஒருவழியாக சமைத்து முடித்தார்.

'தலைவா- இந்த மாதிரி ரொட்டி எங்கேயும் சாப்பிட்டிருக்க மாட்டே தெரியுமா...? என்று சொன்னபடியே என்னிடம் அதை நீட்டினார். நானும் பதிலுக்கு 'எத்தனையோ நாடுகளுக்கு நானும் போய் வந்திருக்கிறேன். என் அனுபவத்தில் நீங்கள் சுட்டதுபோல் ஒரு ரொட்டியைப் பார்த்ததுமில்லை; சாப்பிட்டதுமில்லை' என்றேன். அவர் சிரித்துவிட்டுப் போனார். அவர் சுட்டிருந்த ரொட்டி என்னைப் பார்த்துச் சிரித்தது.

சிறப்பு வகுப்பு ரேஷன்படி ஒருவருக்கு 150 மில்லி ம ஒதுக்கப்பட்டிருந்தது. அதை இருவேளையும் தயாரிப்பதென்பது சிறையில் சிரமமாக இருந்தது. அதனால் காலையிலேயே ம தயாரித்து அதை பிளாஸ்க்கில் ஊற்றி செல்லுக்கு வெளியே வைத்து விடுவார்கள். மற்ற செல்லில் இருக்கும் சக சிறை வாசிகளும் அதைப் பகிர்ந்து கொண்டதால் ஒரு வேளைக்குத்தான் ம இருக்கும். ரேஷன் பொறுப்புகளைக் கவனித்துவந்த டெபுட்டி ஜெயிலர், 'உங்கள் ஒருவருக்காக ம போடும்போதும், அசைவம் சமைப்பதும் சிரமம். மற்றவர்களுக்கு சிறப்பு வகுப்பு கிடைக்கும் வரை நீங்களே ம போட்டுக்கொள்ளுங்கள். உங்கள் வீட்டிலிருந்து பார்க்க வரும்போது பாத்திரம் வாங்கிக்கொடுக்கச் சொல்லுங்கள். அது போலவே முட்டையும் வாங்கிக்கொடுத்தால் அதை சமைத்துக்கொடுக்கச் சொல்கிறேன்'என்று என்னிடம் சொல்லிவிட்டுச் சென்றார்.

பட்டதாரிகளுக்கும் சிறப்பு வசதி உண்டு என்பதை நாளடைவில் தெரிந்துகொண்ட நளினி, பாக்கியநாதன், சுசீந்திரன் ஆகியோரும் சிறப்பு வசதி பெற்றனர். அயல்நாட்டுக்காரர்களின் உணவு முறையை கருத்தில்கொண்டு சிறப்பு வகுப்பு தரப்படும் என்ற தகவலும் கிடைத்தது. அதையடுத்து இலங்கையைச் சேர்ந்த சிறைவாசிகளும் சிறப்பு வகுப்பு வசதிபெற்றனர். ரவிச்சந்திரன் என்ற சிறைவாசிக்கு மட்டுமே சிறப்பு வகுப்பு வசதியில்லை. சாப்பாட்டு நேரத்தில் செல்லைத் திறந்து நான்கு பேர்களாக அனுப்புவார்கள். கறிக்குழம்பை மொத்தமாக சாதத்தில் போட்டு பிசைந்து, ஒருவர் உருட்டி உருட்டிக்கொடுக்க, மற்றவர்கள் அந்த உருண்டையை ருசித்து சாப்பிடுவார்கள். சிறையில் இது ஒரு சுகானுபவம்.

சிறப்பு வகுப்பு, கறிக்குழம்பு, சூடான தேநீர் என்று பாலைவனத்தின் நடுவே சோலை அமைந்தது போல் இறுக்கம் தளர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்த நேரத்தில் தான்....

(தொடரும்)

# தலைவரின் செவ்விகள்

## முரசின் சிறப்பு ஆவணம்

(13)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கேள்வி: அப்படியானால் தமிழீழத் தனியரசுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளீர்களா?

பதில்: நாம் கைவிடவில்லை.

கேள்வி: ஒரு அரசியல் யுக்தியாகவே நீங்கள் பிரேமதாசாவுடன் பேசுவதாகப் பலர் சந்தேகிக்கிறார்கள்?

பதில்: நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை. துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் அதேவேளை எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம். எம்மை யாராவது நம்பினால், நாமும் நம்பிக்கையாக நடப்போம்.

★ ★ ★

தலைவர் பிரபாகரன் 31.08.1991 அன்று, யாழ்ப்பாணத்தில் உள்ளூர் பத்திரிகையாளரைச் சந்தித்து அன்றைய அரசியல், இராணுவ நிலைமைபற்றி எடுத்து விளக்கினார். 01.09.1991-ல் ஈழநாதத்தில் வெளியாகிய தலைவரின் பேட்டியை இங்கு பிரசுரிக்கிறோம்.

# ஆயுதங்களால் மாத்திரம் வெற்றியைத் தீர்மானித்துவிட முடியாது

கேள்வி: ஆனையிறவுப் போர் பற்றி....?

பதில்: மரபு ரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படி இது எனலாம். பெரிய அளவில் இறங்கிய இராணுவத்தை நீண்ட நாட்கள் தடுத்துள்ளோம். இராணுவ ரீதியில் பெருமளவு முன்னேறி இருக்கிறோம் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

கேள்வி: ஆனையிறவுப்போரில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

பதில்: இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது. இழப்புகளை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருதவேண்டும். இத்தகைய இழப்புகள் பொதுமக்களினதும் போராளிகளினதும் மனவுறுதியை வளர்க்கக்கூடியவை. ஆனையிறவுப் போர் தொடங்குமுன்பே 300 பேர் உயிர் இழக்கவேண்டிவரலாம் என்பதும் 900 பேர்வரையில் காயமேற்படலாம் என்பதும் எதிர்பார்க்கப்பட்டதே. ஆனையிறவுப் போர் ஆரம்பத்திலிருந்து 23.08.91 திகதிவரையிலான 43 நாட்களில் 564 போராளிகளை இழந்திருக்கிறோம். எதிர்பார்த்ததைவிடவும் பெரியளவில் படையினர் இறக்கப்பட்டு நீண்டநாட்கள் இடம்பெற்ற யுத்தத்தைப் பார்த்தால் எமது தரப்பிலான இழப்பு பெரிதெனச் சொல்ல முடியாது.

கேள்வி: ஆனையிறவுப்போரின் நோக்கம் நிறைவேறாதது குறித்து....

பதில்: தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரை, எதிரியின் எறிகணைத் தாக்குதல், வான்வழித் தாக்குதல்கள் என்பனவற்றிற்கு மத்தியில், எமது வீரர்கள் நீண்ட நாட்கள் எதிர்ப்படைகளைத் தடுத்துத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர் என்பதை அவதானிக்கவேண்டும்.

கேள்வி: ஆனையிறவுப் போரின் போது மக்கள் மத்தியில் காணப்பட்ட விழிப்புணர்ச்சி பற்றி....

பதில்: மக்கள் காட்டிய விழிப்புணர்ச்சி, போராட்டத்திற்கும் புலிகளுக்கும் ஆதரவான விழிப்புணர்ச்சி என்பதை மறுக்க முடியாது. மக்கள் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதால் ஏக்கம் இருப்பது இயல்பு. எனினும் பொருளாதார நெருக்கடி, கஷ்டம் என்பவற்றிற்கு மத்தியிலும் ஆனையிறவுப் போரின்

**புதிய ஆயுத தளவாடங்களைப் புகுத்தும் பொழுதெல்லாம் வெற்றிகளை அடைந்துவிடலாம் என அரசாங்கம் எண்ணிக் கொள்ளுகிறது.**

போது மக்கள் உணவுப் பொருள்கள் வழங்குவதில் காட்டிய ஆர்வம் மற்றும் ஈடுபாடு என்பவற்றை நாம் மறந்துவிட முடியாது. மக்கள் மத்தியில் கஷ்டம் இருப்பதை நாம் நன்கு உணர்கின்றோம். இவற்றிற்கு ஊடாக போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டியது அவசியம் என்பதையும் மக்கள் புரிந்துகொண்டுள்ளார்கள் என்றே நம்புகிறேன்.

கேள்வி: இந்திய அரசின் தூண்டுதலினால்தான் திரு.கிட்டு நாட்டைவிட்டு வெளியேற பிரிட்டன் நிர்ப்பந்தித்ததாக கூறப்படுவது பற்றி...

பதில்: விடுதலைப்புலிகள் இலங்கையில், இலங்கை அரசுக்கு எதிராகத்தான் போராடுகிறார்கள். இந்திய அரசு விடுதலைப் புலிகள் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

கேள்வி: சிறீலங்கா அரசாங்கம் புதியரக ஆயுதங்கள் கொள்வனவு செய்வதாக கூறப்படுவது பற்றி...

பதில்: எல்லா விதமான ஆயுதங்களும் ஒரே மாதிரியே செயற்படும். எமது மக்களின் உடைமைகளை, சொத்துக்களை அழிக்கலாம். பெருமளவில் அவை அழிக்கப்படலாம் என்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்! எந்த ஆயுதத்தாலும், எத்தகைய குண்டு வீச்சுக்களாலும் போராட்டத்தை அழித்துவிட முடியாது.

★ ★ ★

தலைவர் பிரபாகரன், பி.பி.சி. செய்தியாளர் ஆனந்தி சிவப்பிரகாசத்திற்கு அளித்த பேட்டி. இது 02.03.1993 அன்று பி.பி.சி. தமிழோசையிலும் உலக சேவையிலும் ஒலிபரப்பாகியது.

கேள்வி: அரச தரப்பு படைகளின் எண்ணிக்கை 80,000. உங்களின் பலம், 10,000 எனக் கணிப்பிடப்படுகிறது. இந்தச் சமபலமற்ற நிலையில் போரில் வெற்றியீட்டமுடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?



பதில்: ஒருபோரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ ஆயுத பலமோ அல்ல, உலக விடுதலைப் போராட்ட வரலாறுகள் இதற்கு சான்று பகரும்.

பாரிய ஆட்பலமும், ஆயுத பலமும்கொண்ட உலக வல்லரசுகள், வியட்னாமிலும் ஆப்கானிஸ்தானிலும் தோல்வியைச் சந்திக்கவில்லையா? அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள். இந்த குணாம்சங்கள் எமது போராளிகளிடமும், பொதுமக்களிடமும் நிறையவுண்டு.

கேள்வி: இலங்கைப் படையினர் பல நவீன ஆயுதங்களை வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு ஈடுகொடுக்க உங்களால் முடியுமா?

பதில்: சிங்கள ஆயுதப் படைகள் காலத்திற்குக் காலம் நவீன ஆயுதங்களை அறிமுகம் செய்துவருகின்றன. புதிய ஆயுத தளவாடங்களைப் புகுத்தும் பொழுதெல்லாம் வெற்றிகளை அடைந்துவிடலாம் என அரசாங்கம் எண்ணிக்கொள்ளுகிறது. சியாமாசெட்டி விமானங்களை வாங்கியபொழுதும், பின்னர் டாங்கிகளை வாங்கியபொழுதும், இப்படியாகத்தான் எண்ணினார்கள். இப்பொழுதும் புதிதாக ஆயுத தளவாடங்களை வாங்கிக் குவிக்கிறார்கள். ஆனால் ஆயுதங்கள் வெற்றியைத் தீர்மானிப்பவை அல்ல. எழுச்சிகொண்ட மக்களை ஆயுத சக்தியால் அழித்துவிட முடியாது.

கேள்வி: ஆயுதங்கள் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கின்றன?

பதில்: ஆயுதங்களை நாம் எதிரிப்படையிடமிருந்தே பறித்தெடுக்கிறோம். எதிரியிடம் பறித்தெடுத்த ஆயுதங்களைக் கொண்டே நாம் எதிரியுடன் போராடி வருகிறோம்.

உதாரணமாக, சென்ற ஆண்டு யுத்தத்தில் ஏராளமான ஆயுதங்களை நாம் எதிரியிடமிருந்து கைப்பற்றினோம்.

சென்ற ஆண்டில்; 172 தானியங்கித் துப்பாக்கிகள், 106 இலகு இயந்திரத் துப்பாக்கிகள், 4, 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள், 23 டாங்கி எதிர்ப்பு எறிகணைச் செலுத்திகள், 30 எறிகுண்டு செலுத்தும் துப்பாக்கிகள், 25 எறிகணைச் செலுத்திகள், 1 பின்னுதைப்பற்ற பீரங்கி, 1622 எறிகணைகள், 30 தொலைத்தொடர்பு சாதனங்கள், 7 இலட்சம் ரவைகள் இப்படியாகப் பெருந்தொகையான ஆயுதங்களை சிறீலங்கா இராணுவத்திடமிருந்து நாம் கைப்பற்றியிருக்கிறோம்.

(தொடரும்)

# கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்

**1994 சித்திரை–வைகாசி மாத வெளியீடான 'வெளிச்சம்' வெள்ளி இதழில் 'கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்' என்ற தலைப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட சிறப்புப் பேட்டி.**

கேள்வி: எமது இயக்கத்தைச் சேர்ந்த இளம் போராளிகள் இன்று படைப்பாளிகளாக மாறிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவர்கள் இன்றைய போராட்டம் பற்றியும், போர்க்கள வாழ்வு பற்றியும் எழுதிவருகின்றனர். போர்க்கால இலக்கியத்திற்கு வளம் சேர்த்து வரும் இந்தப் புதிய கலை, இலக்கியம் பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்: தமிழீழத்தில் போர்க்கால இலக்கியம் வளர்ந்து வருகின்றது. எமது இளம் போராளிகள் பலர், படைப்பு இலக்கியத்தில் ஆர்வம்காட்டி வருகிறார்கள். சிலரிடம் தரம்வாய்ந்த எழுத்துக்களையும், கலைப் படைப்புக்களையும் காணமுடிகின்றது. இது நல்லதொரு அறிகுறி. காலப்போக்கில் அனுபவ முதிர்ச்சியில் எமது போராளிகளிடமிருந்து சிறந்த கலை, இலக்கியப் படைப்புக்களை எதிர்பார்க்கலாம். எமது போராளிகளே வரலாற்றின் கதாநாயகர்களாக இருந்து காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களே அந்தக் காலத்தைப் பதிவு செய்யும்போது அது உண்மையானதாகவும், உன்னதமானதாகவும் அமைந்துவிடுகிறது.

தமிழரின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம். இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றைக் கலை, இலக்கியமாக உருவகப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்கும் அறியச்செய்வது இன்றைய சிருஷ்டிகர்த்தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகின்றேன்.

போராட்டம் பற்றியும் போர்க்கள வாழ்வு பற்றியும் ஆழமான அனுபவத்தையும், துல்லியமான பார்வையையும்கொண்டு வளர்வதால் எமது போராளிகள் சிறந்த படைப்பாளிகளாக மாறி ஒரு காலம் உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. அதனால்தான் எமது இயக்கத்தில் முளைத்துவரும் இளம் எழுத்தாளர்களையும் கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகிறேன்.

(தொடரும்)

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி ஆருகா செல்வரட்ணம், செல்வி ராகவி அமலதாசன், செல்வன் மனோகரன் சங்கர், செல்வி நிரோஜா கருணாநிதி** ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்




**செல்வி அபிரா சண்முகலிங்கம்**

**வயது: 06**

**முகவரி:**
**95380 Louvres,**
**France.**

### பூக்கள்.



1. பூக்கள் பல நிறங்களில் உண்டு.
2. பூக்களில் வாசனை வீசும்.
3. பூக்களில் மாலை கட்டலாம்.
4. பூக்களில் தேன் இருக்கும்.
5. பூக்களில் இருந்து வாசனைத் திரவியங்கள் செய்யலாம்.
6. பூக்களை கோவிலில் பூசை செய்வார்கள்.
7. பூக்களில் சில பூக்கள் மிகவும் மென்மையானவை.
8. பூக்களில் தேனீ தேன் குடிக்கும்.
9. பூக்கள் காலையிலும் மாலையிலும் பூக்கும்.
10. பூக்கள் பல வடிவங்களில் இருக்கும்.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 41**

பிள்ளைகளே!
சொற்களைக் கண்டுபிடிக்க முயன்றுபாருங்கள்.
முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 (X) | 4 | 5 |
| 6 | 7 | 8 (X) | 9 | 10 (X) |
| 11 (X) | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 (X) | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**


1. 1-2 இதை அதிகம் அருந்தினால் போதை வரும். இதை அருந்துவது உடல் நலத்திற்கு நல்லதல்ல.
2. 4-5 ஒரு காட்டு மிருகம். இதன் இறைச்சியை பலரும் விரும்பிச் சாப்பிடுவர்.
3. 6-7 வரி என்றும் சொல்லலாம்.
4. 12-15 கடிதம் அனுப்புவதற்கு இது தேவை.
5. 16-18 கறுப்பு நிறப்பறவை. ஒற்றுமைக்கு இதனை உதாரணமாகக் கூறுவர்.
6. 21-24 இது எமக்கு அடிக்கடி வந்தால் ஏதாவது நோயின் அறிகுறி என கூறுவர்.

**மேலிருந்து கீழ்**

7. 1-6 புத்தி என்றும் கூறலாம். நிலாவையும் இப்படி அழைப்பர்.
8. 16-21 கேட்டலுக்கு உதவும் உறுப்பு.
9. 2-22 கப்பல்கள் தரித்துச்செல்லும் இடம். கடலோர நகரங்களில் இது இருக்கும்.
10. 4-14 ஞாபகத்திற்கு எதிரானது.
11. 15-25 தமிழகத்தில் உள்ள ஒரு பழமை வாய்ந்த நகரம். இங்கு எழுத்துக்கள் தலைகீழாக உள்ளன.

**சொற்சிதறல் எண் நாற்பதின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| வா | ழை | ■ | பு | றா |
| கை | ம | ல் | லி | ■ |
| ■ | ■ | பா | ப் | பா |
| ந் | ய | தீ | ப | ம் |
| ■ | ன் | ய | டை | பு |





## குட்டிக்கதை படிப்போம்

### காகம் தந்த பாடம்

(இருவாரக் கதை)

திறந்தவெளி, பரந்த மைதானம், தூரத்தில் பெரிய பெரிய மரங்கள். அந்த மரங்களில் பலவித பட்சிகள் ஒருமரம் விட்டு இன்னொரு மரம்தாவி உட்கார்ந்தபடி விளையாடிக் கொண்டிருந்தன. அவைகள் அப்படிப் பறக்கும்பொழுது இறக்கைகளை விரித்து அடித்து 'கீக்கீ'- 'கூக்கூ' -'கா... கா' என்று பலவிதமாக கத்திக்கொண்டு பறப்பதை வீட்டுவாசலில் உட்கார்ந்துகொண்டிருந்த மீனாவும் அம்பிகாவும் இரசித்துக்கொண்டிருந்தனர்.

'மீனா! இந்தப் பறவைகள் இப்படிப் பறப்பதைப் பார்த்தால் 'நாற்காலி பிடிக்கும் விளையாட்டுத்தான் நினைவிற்கு வருகிறது' என்றாள் அம்பிகா.

'அதென்ன நாற்காலி பிடிக்கும் விளையாட்டு?...' ஓ! 'மியூசிகல் சேர்' விளையாட்டைச் சொல்கிறாயா? கவலைப்படாதீர்கள்! உங்களுக்காகவே அடுத்த வாரமே இந்த மைதானத்தில் நாற்காலி பிடிக்கும் விளையாட்டு நடக்கப்போகிறது. சுதந்திர தின விழாவிற்காக நடத்தப்போகிறார்கள். உங்கள் பெயர்களையும் கொடுத்திருக்கிறேன்' என்றார், அவர்களுக்குப் பின்னால் வந்து நின்ற அவர்கள் தந்தை.

'பரிசு உண்டாப்பா!' - அம்பிகா கேட்டாள்.

'ம்! கடைசிவரை 'அவுட்' ஆகிவிடாமல், ஏமாறாமல் நாற்காலியைப் பிடித்து உட்காரும் சிறுவன் அல்லது சிறுமிக்கு ஒரு பொட்டலம் நிறைய விலையுயர்ந்த மிட்டாய்கள் உண்டு!'

'அதில் எத்தனை மிட்டாய்கள் இருக்கும்?'
இது மீனாவின் கேள்வி.

'சுமார் முந்நூறு மிட்டாய்கள் இருக்கும்!'
என்றார் அப்பா.

'அப்படியா?... அப்படியானால் நிச்சயம் போட்டியில் கலந்துகொண்டு வென்றுவிட வேண்டும்!' என்று மீனாவும், அம்பிகாவும் ஒரே குரலில் கூவினார்கள்.

அடுத்தவாரம்!

சுதந்திரதினம் வந்தது.

நாற்காலி பிடிக்கும் போட்டியில் கலந்துகொள்ள சிறுவர் சிறுமிகள் பலர் வந்திருந்தனர். அம்பிகாவும் மீனாவும் துடிப்புடன் தயாராக வந்திருந்தனர்.

போட்டி தொடங்கியது.

'தம்பி தங்கைகளே! நன்றாகக் கவனியுங்கள். முதலில் ஒலி பெருக்கியில் ஒலிப்பதிவான ஒரு பாட்டு போடப்படும். அப்பொழுது நீங்கள் வட்டத்திற்கு வெளியே ஓடத்தொடங்க வேண்டும். பாட்டு இடைவெளி இல்லாமல் இசையுடன் கேட்டுக்கொண்டே இருக்கும். திடீரென்று இந்தப்பாட்டை நிறுத்திவிடுவோம்! அப்பொழுது நீங்கள் வட்டத்திற்குள் பாய்ந்து நாற்காலியைப் பிடிக்கவேண்டும். ஒவ்வொரு சுற்றிலும் ஒரு தம்பிக்கு அல்லது தங்கைக்கு உட்கார நாற்காலி கிடையாது. அந்தத் தம்பி அல்லது தங்கை வெளியே வந்துவிடவேண்டும், மறுபடியும் பாட்டு தொடரும்! இப்படியே கடைசிவரை 'அவுட்' ஆகாமல் இருக்கும் தம்பி அல்லது தங்கைக்குப் பரிசு தரப்படும்' என்றார் போட்டி நடத்துபவர். பாட்டு ஒலிக்கத் தொடங்கியது.

'சின்னத்தம்பி சின்னத் தங்கை,
சிரித்து ஓடுங்கள்!
சிங்கார நாற்காலிகள்
பிடிக்க ஓடுங்கள்!
காலை மட்டும் வட்டம் வெளியே
வைத்து ஓடுங்கள்!
கண்ணை மட்டும் நாற்காலி மேலே
வையுங்கள்!
உடலில் வலிமை புத்தி கூர்மை
உண்டு என்றாலே
தடங்கலின்றி நாற்காலிகளும்
உமது கையிலே!'

இந்தப்பாட்டு, கருத்தைக் கவரும் மெட்டுடன் தாளத்துடன் கேட்டுக்கொண்டே இருந்தது. நடு நடுவே பாட்டு நிறுத்தப்பட்டபொழுது தம்பி தங்கைகள் வட்டத்தினுள் பாய்ந்து நாற்காலிகளைப் பிடித்துக் கொண்டனர். ஒரு தம்பி அல்லது தங்கை நாற்காலி கிடைக்காமல் வெளியேற, பாட்டு தொடர்ந்தது. இப்படியே விளையாட்டு தொடர, கடைசியாகப் போட்டியில் வென்றது மீனாதான்! இரண்டாவதாக வென்றது அம்பிகா. இருவருக்கும் விலையுயர்ந்த மிட்டாய்ப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

பரிசு கிடைக்காத மற்றைய தம்பி, தங்கைகள் மீனாவையும் அம்பிகாவையும் சூழ்ந்து கொண்டு 'எனக்கு அக்கா மிட்டாய்! எனக்கு அக்கா மிட்டாய்!' என்று கேட்டனர்.

'உஹூம்... நான் மாட்டேன்! இந்த மிட்டாய்கள் அத்தனையும் எனக்குத்தான். தினமும் இரண்டு இரண்டாகச் சாப்பிடப்போகிறேன்!' என்றாள் மீனா. அம்பிகாவும் அப்படியே சொல்லிவிட்டாள்.

*(மிகுதி அடுத்தவாரம்)*

## அறிந்து கொள்ளுங்கள்



**நஜீம் நிரோசன்**

வயது – 12

பாடசாலை:
தமிழ்ச்சோலை, துலூஸ்

### பூமி

- ★ பூமி உருண்டை வடிவமானது.
- ★ பூமியில் ஐந்து கண்டங்களும், ஐந்து சமுத்திரங்களும் உண்டு.
- ★ பூமிக்கு ஈர்ப்பு சக்தி உண்டு.
- ★ ஈர்ப்பு சக்தி இல்லாவிடில் நாம் எங்குமே நிலைத்து நிற்க முடியாது.
- ★ பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்றி வர இருபத்திநான்கு மணித்தியாலங்கள் எடுக்கிறது.
- ★ அதை நாம் ஒருநாள் என்று அழைப்போம்.
- ★ அது சூரியனை நீள் வட்டப் பாதையில் சுற்றிவர, முன்னூற்று அறுபத்து ஐந்தே கால் நாள் எடுக்கிறது.
- ★ இது ஒரு வருடம் என அழைக்கப்படும்.
- ★ சகல ஜீவராசிகளும் வாழ பூமி அத்தியாவசியமாகும்.
- ★ பூமி இவ்வளவு மாந்தரையும் சுமப்பதால் பொறுமைக்கும் உதாரணமாகிறது.
- ★ இதனை திருவள்ளுவர்,

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல – தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை'

என்று தமக்குத் துன்பம் செய்பவர்களையும் மன்னிக்கும் பண்பு கொண்டவர்களுக்கு பூமியை உதாரணமாகக் கூறுகின்றார். பூமியை மறுபெயராக பூமாதேவி என்றும் அழைப்பார்கள்.

## நூலக முற்றம்

### 'பரிசு'





சிறுவர் முற்ற மருமக்களே!

உங்களுக்கு ஒரு இனிப்பான செய்தி!

பிரான்ஸ் - துலூஸ் என்னும் இடத்திலிருந்து முழுக்க முழுக்க சிறுவர்களுக்கான பல்வேறு ஆக்கங்களை உள்ளடக்கி 'பரிசு' என்னும் சிறுவர் மஞ்சரி ஒன்று வெளிவந்துள்ளது. புலம்பெயர்ந்த மண்ணிலே தமிழ்ச் சிறார்களின் அக்கறை மீதில் மலர்ந்த பரிசினையும், அவர்தம் முயற்சியையும் சிறுவர் முற்றம் சார்பாக நாங்களும் பாராட்டுவோம். பரிசு தொடர்ந்துவர வாழ்த்துவோம். 'பரிசு' மஞ்சரியைப் பெற விரும்புவோர், கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**C.D.C EUROPE ORIENT,**
5, Rue Denfert Rochereau,
31000 Tolouse,
France.

# ஒப்பரேசன் வலம்புரியும் மின்னல் இரண்டும்




சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட புதியரக யுத்த டாங்கிகளை 'வன்னி விக்ரம-2' என்ற இராணுவ நடவடிக்கையின் மூலம் பரீட்சித்துப் பார்த்திருந்த சிறீலங்கா இராணுவம், தமது அடுத்த தாக்குதல் இலக்கு யாழ். குடா என்பதுபோல் புலிகளின் கவனத்தை குடாநாட்டின் மீது திசைதிருப்பியிருந்தனர். படையினரின் நடவடிக்கைகளும் குடா. நாட்டின் மீது இறுதித் தாக்குத

'உண்மையான இலக்கு' எது என்பதை புலிகள் தெளிவாகவே புரிந்திருந்தனர். அதனால் மின்னல்-2 சிங்களப்படை நினைத்தது போல் காட்டினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து புலிகளை அழித்துவிடும் எண்ணம் ஈடேறவில்லை. புலிகளை எவ்வாறு திசைதிருப்பினாலும் காட்டினுள் புலிகளின் பலத்தை உடைத்து எந்தப்பகுதியின் ஊடாகவும் நுழைய முடியாது என்பதை உணர்ந்துகொண்ட சிங்க

**விடுதலையை நேசித்த குற்றத்திற்காக இம்ரானின் தந்தை, தமக்கை உட்பட இம்ரானையும் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்று சித்திரவதைகளுக்கு உட்படுத்திய பின்னர் பூசா முகாமிற்கு அனுப்பிவைத்தனர்.**

லுக்கு தயார் என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இருந்ததுடன், நடாத்தப்போகும் தாக்குதலுக்கும் 'ஒபரேஷன் வலம்புரி' என்ற குறியீட்டுப் பெயரும் இடப்பட்டது. புலிகளின் கவனத்தை யாழ்குடாவின் மீது முற்றாக திருப்பிவிட்டால் புலிகளின் அணிகள் யாழ். குடாவிற்கு சென்றுவிடும். அதன் பின்னர் மணலாற்றின் மீது மேற்கொள்ளும் தாக்குதல் மிகவும் இலகுவாக இருக்கும் என்பதே இராணுவத் தளபதிகளின் திட்

ளப்படை, விமானத் தாக்குதல் மூலமும் எறிகணைத் தாக்குதல் மூலமும் காட்டினை குண்டு வீசியே அழித்துவிடுவது போல் பெரும் தாக்குதலை தொடர்ச்சியாக நடாத்தினார்கள்.

19.09.91, சிங்களப் படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாக கப்டன் இம்ரானின் (தில்லையம்பலம்பிள்ளை ஜெகதீசன்- துறைநீலாவணை, மட்டக்களப்பு) அணியொன்று மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டிருந்தது. உடன

வில் அருகில் வீழ்ந்து வெடிக்க இம்ரான் வீரச்சாவினை தழுவிக்கொண்டான்.

1986, மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளையும், புலிகளுக்கு உதவி செய்பவர்களையும் சிங்களப்படை வலைவீசி தேடித்திரிந்தது. அவ்வேளை மக்களே அரணாக நின்று போராளிகளை காத்துநின்றனர். அவ்வாறுதான் இம்ரானின் குடும்பமும் போராளிகளை அரவணைத்துக்காத்தது. ஆனால் சிங்களப்படையின் கழுகுக்கண் பார்வையில், துறைநீலாவணையில் அமைந்திருந்த தில்லையம்பலம்பிள்ளையின் வீடும் இலக்கானது. வீட்டினுள் நுழைந்த சிங்களப்படை விடுதலையை நேசித்த குற்றத்திற்காக இம்ரானின் தந்தை, தமக்கை உட்பட இம்ரானையும் கைது செய்து முகாமிற்கு கொண்டுசென்று சித்திரவதைகளுக்கு உட்படுத்திய பின்னர் பூசா முகாமிற்கு அனுப்பிவைத்தனர். நான்கு ஆண்டுகளாக பூசா முகாமிலேயே குடும்பமாக அடைபட்டுக்கிடந்தனர். இந்தியப்படையினர் தமிழீழத்தை விட்டு வெளியேறியதன் பின்னர், பிரேமதாச அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இடைக்கால ஒப்பந்தம் ஒன்றின்போது, பூசாமுகாமில் இருந்த சிலரும் விடுவிக்கப்பட்டனர். அதன்போது இம்ரானின் குடும்பமும் விடுதலையாகி வெளியே வந்தனர். நான்காண்டுகளாக சிறைவாசத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்த இம்ரான் சிறையில் இருந்த

டான். பயிற்சியின்போது அவனிடம் இருந்த திறமையைப் பார்த்த தளபதி, பயிற்சி முடிந்த கையுடனே மோட்டார் தாக்குதல் அணியில் இணைத்துவிட்டார். மோட்டார் தாக்குதல் பற்றிய அறிவை விருப்பத்துடன் கற்றுக்கொண்ட இம்ரான், மோட்

இல்லை. படைத்தலைமைகளும் இதுபற்றி கூடி ஆராயத்தொடங்கின.

விடுதலைப் புலிகள் மின்னலில் ஈடுபட்டுள்ள படையினர் மீது அவ்வாறான ஒரு தாக்குதலை தொடுத்தால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது

## மின்னலில் விதையான மாவீரர்கள்


கப்டன் இம்ரான்


லெப். டொமினிக்


கவாஸ்கர்


குமுளன்


நடேசதேவன்


2ம் லெப். பிரேம்குமார்


சஞ்சிதகுமார்


கப்டன் சங்கிலி

டமாக இருந்தது. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் புலிகளின் கவனத்தை திசை திருப்பிவிட்டு, மின்னல் நடவடிக்கை சிறிது ஓய்வுக்குப்பின் திடீரென மின்னல்-2 என்ற பெயருடன் மீண்டும் ஆரம்பித்தது. மணலாற்றின் கடற்கரையோர கிராமமான கொக்குத்தொடுவாய் பகுதியினுள் ஊடுருவிய இராணுவத்தினர், அங்கே முகாமொன்றினை அமைத்துக்கொண்டனர். கொக்குத்தொடுவாயில் இருந்து நாயாறு, அளம்பில் வரை முன்னேறி புலிகளின் கடல்வழியான போக்குவரத்து, மற்றும் தொடர்புகளை துண்டித்து மணலாற்றின் மீது பெருமெடுப்பிலான இன்னொரு தாக்குதலுக்கு போடப்பட்ட அடிக்கல்லே மின்னல்-2 நடவடிக்கையாகும்.

யாழ். குடா மீது தாக்குதல் போன்று போக்குகாட்டிவிட்டு கொக்குத்தொடுவாயில் நிலைகொண்ட சிங்களப்படையின்

டியாகவே எதனையும் கிரகித்துக்கொள்ளும் திறமையும், அறிவும் கப்டன் இம்ரானிடம் அதிகமாக காணப்பட்டதால் மோட்டார் தாக்குதல் பற்றிய சிறப்பு பயிற்சிகளை பெற்றுக்கொள்ளுமாறு தளபதியினால் யாழ். குடாவிற்கு அனுப்பப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டான். பயிற்சி முற்றாக முடியும் முன்னர் மின்னல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதால் மணலாற்றுக்குத் திரும்பி வந்திருந்தான். மின்னலென்று கூறிக்கொண்டு காட்டினுள் நுழையமுனைந்த படையினரின் பீரங்கிப் படைகள் இலக்கின்றி குண்டுகளை மழையாகப் பொழிந்துகொண்டிருக்க, தனது குறி தவறாத தாக்குதல்களினால் எதிரியின் நிலைகளை அறிந்து, மிகவும் அருகில் சென்று கடும் அழிவுகளை ஏற்படுத்தினான். 19ம் திகதியன்றும் படையினர் எறிகணை தாக்குதலைத் தொடுக்க இம்ரானும், அவனது அணியும் பதில் தாக்குதலை படையினரின் இலக்குகளை நோக்கி மேற்கொண்டனர். ஆனால் படையினர் ஏவிய குண்டொன்று இம்ரா

போது கற்ற கல்வியைத் தொடர, பாடசாலை ஒன்றில் இணைந்திருந்தான். ஆனால் சிறீலங்கா படையுடன் மீண்டும் தொடங்கிய போர் (ஈழப்போர்-2), கல்வி

**யாழ். குடா மீது தாக்குதல் போன்று போக்குகாட்டிவிட்டு கொக்குத்தொடுவாயில் நிலைகொண்ட சிங்களப்படையின் 'உண்மையான இலக்கு' எது என்பதை புலிகள் தெளிவாகவே புரிந்திருந்தனர்.**

யைவிட விடுதலையே முதலில் அவசியம் என்பதை அவனுக்கு உணர்த்தியது. பாடசாலை செல்வதை நிறுத்திவிட்டு புலிகளின் பாசறைக்குள் புகுந்துகொண்

டார் தாக்குதல் பற்றியும் அதன் நுணுக்கங்கள் பற்றியும் தான் எழுதிய புத்தகமொன்று முற்றுப் பெறும் முன்னரே தமிழீழத்தின் இதயபூமியை காத்துநின்ற போரில் விழிகளை மூடிக்கொண்டான்.

* * *

மின்னல் நடவடிக்கை 1, 2 என 26வது நாளாக தொடர்ந்து கொண்டிருக்க, திலீபனின் நான்காவது வருட நினைவுநாளுக்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. திலீபனின் நினைவு தினத்தன்று படையினர் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தி, காட்டினுள் நுழையும் அவர்களின் எண்ணத்தையே அழிக்கும் அளவிற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு, தாக்குதல் வியூகங்களும் அமைக்கப்பட்டன. கடந்த ஆண்டு (1990) திலீபனின் நினைவுநாளில் யாழ். கோட்டையை சிங்களம் பறி கொடுத்திருந்தது. அதே திலீபனின் நினைவுநாளில் புலிகள் எப்படியும் பாரிய ஒரு தாக்குதலை நடாத்துவார்கள் என்பதை சிங்களப்படைகளும் உணராமல்

பற்றியும் ஆராயத் தொடங்கினர். அவர்கள் ஆராய்ந்துகொண்டிருக்க, மணலாற்றில் படையினர் நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டே இருந்தன. 23.09.91 அன்று படையினர் மீது தாக்குதலை மேற்கொண்டிருந்த போராளிகளின் அணியில் கப்டன் மைக்கலும் (வேலையா சுரேஸ்குமார்-ம், சிவன்கோவில் திருமலை) ஈடுபட்டிருந்தான். படையினரை காட்டைவிட்டு அடித்து விரட்ட வேண்டும் என கூறிக்கொண்டே இருந்த போராளி, சிங்களப்படை மேற்கொண்ட எறிகணை வீச்சில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.

கப்டன் மைக்கல் ஆயுதப் பயிற்சி பெற்று ஒரு விடுதலைப் போராளியாக மாறுவதற்கு வழி வகுத்தவர்கள் இந்தியப்படையினரும், தேசத் துரோகிகளுமே! இவர்களினால் கொடுக்கப்பட்ட ஒரு தண்டனைதான் இவன் மனதில் மாறாத வடுவாகப்பதிந்தது. விடுதலையை நோக்கிய தமிழீழ மீட்புப்போரில் இவனை ஆயுதமேந்தி போரிடவைத்தது.

(தொடரும்)

எஸ்.தீரன்




# விடியலை நோக்கி...

வழக்கத்திற்கு மாறாகச் சேவல்கள் விடியலுக்கு முன்னதாகவே கூவத் தொடங்கிவிட்டன. பிரட்டுக்களத்தில் கூட்டம் கங்காணிகளின் 'திருப்பள்ளியெழுச்சி' இல்லாமலேயே தயாராகிவிட்டது. இன்று அவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதற்கான உரிமைப்போர்.

'எங்கள் லட்சியம்', 'பொறுத்தது போதும்! பெறுவோம் மாதச் சம்பளம்' எனும் வாசக அட்டைகள் நரம்பு புடைத்த கைகளில் உரம்பெற்றுநின்றன.

கடந்த சில நாட்களாகவே தோட்டம் களைகட்டத் துவங்கி இருந்தது. நேற்றைய 'தாயகம்' நாளிதழில் வெளியான 'உரிமைப்போர்' என்ற தலையங்கம் பலரை வியப்புக்குள்ளாக்கி இருந்தது. தோட்டத் தொழிற்சங்க செயலாளர் திருமாலன் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு, தோட்டத்தில் வேலை நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பல தடைகளையும் அதிகார மிரட்டல்களையும் மீறி நடைபெற்றுக்கொண்டிருந்தது. சற்று உயர்ந்த சிமெந்து மேடையில் ஏறிநின்று பேசினார். அந்த அமைதியில் கருத்து மணிகள் தெறித்துச் சிதறின.

'நாட்டின் செல்வங்களாக வெறும் ரப்பர் மரங்களையும் கனிவளங்களையும் தேயிலைத் தென்னைத் தோட்டங்களையும் காப்பாற்றத் தெரிந்த நமது முதலாளிமார்களுக்கு உதிரத்தை உரமாக்கி உழைக்கும் தொழிலாளிகளின் அடிப்படை உரிமைகளை உணர்ந்து வாழத் தெரியவில்லை. நமது கோரிக்கைகளை உணர வைக்க இன்று புறப்பட்டிருக்கும் நாம் யாரையும் அழிக்க நினைக்கவில்லை. நாடு முழுவதும் இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. மலேசிய மண்ணின் தொழிலாளர் சகோதரர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி இது'.

திருமாலன் கூறிமுடித்ததுதான் தாமதம், இடி இடிப்பதைப் போன்ற கைதட்டல்கள் வானைப் பிளந்தன. 'வாழ்க தொழிலாளர்கள்'! 'வாழ்க நமது லட்சியம்' என்ற குரல் ஒலிக்க அனைவரும் சேர்ந்து ஒலித்தனர்.

'அன்புச் சகோதரர்களே, முதலாளித்துவம் ஒழிய வேண்டும். என்று நாம் போராடவில்லை. உங்களிடம் உள்ள வெறுப்பை விலக்கி வையுங்கள். உழைப்புக்கேற்ற உண்மையான ஊதியத்தைத்தான் கேட்கிறோம். அனைவரும் அமைதியாக இருந்து வேலைநிறுத்தத்தை மேற்கொள்வோம்' என்று கூறி முடித்தார்.

பொழுது புலரத் துவங்கியது. தோட்டத்து நுழைவாயிலின் செம்மண்சாலை இருமருங்கிலும் தோட்டப்பாட்டாளிகள் வரிசை பிடித்து நின்றனர். போவோர் வருவோர் பாட்டாளிகளின் உரிமைக்குரலைக் கேட்டும் பார்த்தும் கொண்டிருந்தனர். மணி எட்டைத் தொட்டது. தாய்மார்கள் சிலர் கூட்டமாகத் தேநீர் கலக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

டவுனுக்குச் சென்று மாரப்பனும் டேவிட்டும் நாளிதழ்களை வாங்கி வந்தனர். எல்லா நாளேடுகளிலுமே தோட்டவேலை நிறுத்தத்தைத் தலைப்புச் செய்திகளாகப் போட்டிருந்தன. பாட்டாளிகளின் குறைகளை அடிக்கடி வெளியிட்டுவரும் பத்திரிகைகள் 'தோட்டம் நிலைகுத்தியது' 'போராட்டம் துவங்கியது' என்ற தலைப்புச் செய்திகளுடன் தலையங்கம் தீட்டியிருந்தன. அரசாங்கம் தலையிட்டுத் தீர்வுகாண வேண்டும் என்றும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

தேநீருக்குப் பின் பாட்டாளிகளிடையே உற்சாகம் கரைபுரண்டது. அனைவரும் ஒன்று சேர்ந்து வாசக அட்டைகளையும் கைகளைக் கோர்த்தபடி வருவோர்களிடம் காட்டிக்கொண்டிருந்தனர். செம்மண் சாலையின் எல்லையில் புழுதி மண்டலம் எழுந்தது. 'ஜீப்' ஒன்று வேகமாக வந்துநின்றது. அரைக்கால் சிலுவாருடன் கையில் துப்பாக்கி சகிதமாக மைக்கல் இறங்கினார். தோட்ட முதலாளி அவர்களுடன் கூடவே மானேஜர் மாதவன், கிராணிகள் சங்கரன், நாயர் ஆகியோர் இறங்கினர். கூட்டத்தை ஒரு வகையான அலட்சியப் பார்வையுடன் பார்த்தார். அவர்கள் தனக்கே உரித்தான கட்டைக் குரலில் மிடுக்காக அங்கிருந்தவர்களிடம் சொன்னார்.

'நீங்கள் எல்லாம் வேலைக்குப் போகலேன்னா வயிறு காயும். எங்களைப் பகைச்சுக்கிட்டு உங்களால் எதுவும் பண்ணமுடியாது. வீடு, ரோடு, கள்ளுக்கடை எல்லாம் இருக்குது. இதைவிட என்னவேணும்? நீங்கள் செய்யிற வேலைக்கு சம்பளம் தர்றோம். ஒழுங்கா வேலைக்குப் போறீங்களா? இந்த ஸ்டுப்பிட்டுங்க கூடச் சேர்ந்து நீங்களும் கெட்டுப்போகப் போறீங்களா?

திருமாலன் அமைதியாக எழுந்தார்.

'மிஸ்டர் மைக்கல், சில சமயங்களில் அறிவாளிகளைக்கூட பல முட்டாளுங்களால அடையாளம் காணமுடியாம போறது உண்டு. ஒரு நேர சோத்துக்காக இந்தப் போராட்டம் இல்லை. காலம் காலமா இந்த மண்ணில் ரத்தம் சிந்தின இந்தப் பாட்டாளி இனம், தோட்டத்தையே ஈடாக கேட்டிருக்க வேண்டும். இது வெறும் ஆரம்பம்தான். எங்கள் இளம் தலைமுறையினரின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடக்கூடாது என்கிறது தான் எங்கள் நோக்கம் அதில் நாங்கள் வெற்றி அடைந்தே தீருவோம்' உள் எழுந்த உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அமைதியாகவே பேசினார்.

'இங்க பாருமேன்! லட்சியம், லட்சியம்னா சோறு கிடைக்காது. மரம்வெட்டுனாதான் சோறு கிடைக்கும். இது எங்க தோட்டம். எவ்வளவு தூரம் நீங்க போகமுடியுமுனு நானும் பார்க்கிறேன். என்றபடி ஜீப்பின் கதவை இழுத்து மூடினார், அது உறுமியபடியே நகர்ந்தது. எறும்புத் துண்டின் பின் ஓடும் ஜீவன்களாக கூடவந்தவர்களும் அதில் அடைக்கலம் புகுந்தனர். செம்மண்சாலையில் அவர்கள் மனம் போலவே புழுதியும் படர்ந்தது.

சூரியன் மேல் எழும்பத்துவங்கி விட்டான். ஒரு நூற்றாண்டின் முன் இருந்த சுவர்ண பூமியில் சஞ்சிக்கூலிகளாய்க் கப்பலேறி வந்தபோது இந்தச் சூரியன்தான் சாட்சி. அடர்ந்த பூமத்திய ரேகைக்காட்டுக்குள் நுழைந்து அதனை அழித்து ரப்பர்க் குழந்தைகளை இந்தமண்ணுக்கும் சொந்தமாக்கி தனது ரத்தத்தை உரமாக்கிய வீரத் தமிழினத்தை எத்தனை முறை கண்டிருப்பான். அந்தக்கூட்டத்தின் வரலாற்றில் இன்று ஒரு திருப்புமுனை. இந்த நாட்டின் மூலை முடுக்குகளில் மறைந்து கிடக்கும் அவலங்களை வெளிக்கொண்டுவரும் உரிமைக் கூட்டம் இது. அதற்கும் இந்த சூரியன்தான் சாட்சி. 'தாயகம்' நாளேட்டின் தலையங்கத்தை ஆசிரியர் இப்படித் தொடங்கி இருந்தார். தொழிற்சங்க உறுப்பினர்கள் அனைவரது உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரியும் வாசகம் இது.

எல்லார் முகங்களிலும் புத்தொளி கிளம்பியது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தத் தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்து தனது இளமையின் துடிப்பையும் இந்த மண்ணுக்கே தாரைவார்த்த பலர் அங்கிருந்தனர்.

மீண்டும் தோட்டத்துச் செம்மண் சாலைகளின் எல்லையில் புழுதி எழுந்தது. வாகனங்கள் தொடர்ந்தாற்போல வந்தன. தோட்டத்தின் முதலாளி தடையுத்தரவு ஏதும் பெற்று வேலைநிறுத்தத்தை இல்லாமல் தடுப்பதற்கு முனைந்து விட்டார்களோ! என எல்லா முகங்களிலும் கலவரம் படர்ந்தது. முன்பக்கம் நின்றிருந்த ஒருவர் வந்தவர்களை விசாரித்துவந்து திருமாலனிடம் சொன்னபோதுதான் அனைவரது முகங்களிலும் மகிழ்ச்சி தென்பட்டது. நாடெங்கும் நடைபெறும் வேலை நிறுத்தத்தை நேரிடையாகக் கண்டறிய பத்திரிகையாளர்கள்குழு ஒன்று அந்தோட்டத்திற்கும் வருகை தந்திருந்தது.

பத்திரிகையாளர்கள் சிலர், வாசக அட்டைகளை ஏந்தியிருந்த பாட்டாளிகளைப் படம்பிடித்தனர். பின்னர் தோட்டத்து வீடுகளையும் அடிப்படை வசதிகளையும் கண்காணித்து, மேலும் விபரங்கள்பெற தொழிற்சங்க செயலாளராகிய திருமாலனை நோக்கி வந்தனர். பல மொழிப் பத்திரிகையாளர்கள் அந்தக் குழுவில் இருந்தனர்.

'இந்த வேலை நிறுத்தத்தின் வழி நீங்கள் சாதிக்க நினைப்பது என்ன?' என்று நிருபர் ஒருவர் முதல் கேள்வியையும் துவக்கினார்.

'தொழிலாளர் நலன் ஒற்றுமை எத்தனை பலம்வாய்ந்தது என்பதைக் காட்டவும் அதன் மூலமாக எங்களது அடிப்படை உரிமையான மாதச் சம்பளக் கோரிக்கையை நிறைவேற்றவே இந்த வேலைநிறுத்தம்.'

அழுத்தம் திருத்தமாக திருமாலன் பதிலளித்தார்.

'சண்டே நியூஸ்' என்ற இதழின் நிருபர் சற்று வினயமாகக் கேள்விகளைக் கேட்டிருந்தார்.

'உங்களது இந்த நடவடிக்கை அமைதியைக் குலைப்பதாகவும், கலவரங்களை உண்டுபண்ணுவதாகவும், மக்களிடையே ஒற்றுமை உணர்வைக் குறைப்பதாகவும் நாம் கொள்ளலாம் அல்லவா?

கூடியிருந்த பாட்டாளிகளின் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. இளைஞர் ஒருவர் ஆவேசமாகக் கூக்குரலிட்டவாறு நிருபரை நெருங்கினார். திருமாலன் தக்க நேரத்தில் தடுத்து நிறுத்தினார்.

'முதலில் உங்களின் இதுபோன்ற குதர்க்கமான கேள்விகளினாலேயே அமைதி குலைகின்றது என்பதை ஏன் உணர மறுக்கிறீர்கள்?' என்றார் அவரை நோக்கி.

'மக்கள் வருமானம் என்பது நாட்டின் வளர்ச்சியோடு சேர்ந்து வளரவேண்டிய ஒன்று. சில அடிப்படை வசதிகளைக்காட்டி ஒரு நூற்றாண்டு தோட்டப் பாட்டாளிகளின் உழைப்பிற்கு விலைபோ முடியாது. அது கூடவும் கூடாது. பொருளாதார வேறுபாடுகளினாலேயே மக்கள் கூட்டம் பிளவுபடுகின்றது. வகுப்புப் போராட்டம் எழுகின்றது. அது வேண்டாம் என்று நாங்கள் அமைதிப்போராட்டம் நடத்துகிறோம். உரிமைப் போராட்டத்திற்கும் உணர்வுப் போராட்டத்திற்கும் வேறுபாடு தெரியாத நீங்கள் எப்படி நிருபராக வந்தீர்கள்' என்று கேட்டார்.

பலகாலம் தோட்டத்தில் வாழ்ந்து ஓய்வுபெற்ற கப்பையா தண்டல் தனது கருத்தைமட்டும் சொல்ல முன்வந்தார்.

'நீங்க எல்லாம் படிச்சவங்க, உங்களுக்குத் தெரியாதது இல்லைங்க சாமி, பத்துவயசுல ஊர்லேயிருந்து எங்க அப்பரோட.... கப்பலேறினேனுங்க. அப்போ இந்தத் தோட்டம் ஒரு மலைக்காடு. இங்கதானுங்க கண்ணாலம் பண்ணினேன். எங்கப்பன் ஆத்தாவுக்கு கொள்ளி வச்சேன். எம் புள்ளைக்கு இங்கதாங்க காட்டுக் கனியைத்தின்னு வளர்ந்தாங்க. இது எங்க தாய்பூமிங்க...' என்றவர் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் கசிந்தது.

'காலங்காலமா உழைச்ச இந்த இனம், என்னைக்கும் அரைவயித்துக் கஞ்சியோட வாழணுமா? ஏதோ எங்க காலத்திலே கட்டின துணியோட ஜப்பான்காரன் குண்டுக்கும் கம்யூனிஸ்டுகாரனுங்க மிரட்டலுக்குப் பயந்து பணிஞ்சுவாழ்ந்து வந்தேனுங்க... இந்த உசிரு போறதுக்குள்ள... சாமி... தோட்டத்து மக்களுக்கு நிரந்தரமாய் வருவாய்... கிடைச்சா என் வாய்க்கரிசி வேருங்க... உங்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கிறேன். எங்க குறையை நாட்டுக்கு எடுத்துச் சொல்லுக்க சாமி' என்றபடி மீண்டும் தழுதழுத்தார்.

தமிழ் நாளேட்டின் நிருபர் ஒருவர் தெளிவாகக் கூறினார். 'நானும் தோட்டத்து மண்ணில் பிறந்து வளர்ந்தவன்தான். எங்க அப்பா அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டாங்கன்னு என்னாலேயும் உணர முடியும். கவலைப்படாதீங்க. இந்தப் போராட்டம் ஓயும்வரை எங்கள் நாளேடு நடுநிலையான செய்திகளைக்கொண்டு உங்கள் கோரிக்கைகளுக்குத் தூணாக நிற்கும்' என்றார். எல்லார் முகங்களிலும் மகிழ்ச்சி பரவியது. அனைவரிடமும் நிருபர்கள் விடை பெற்றனர்.

மாலை மணி மூன்று இருக்கும். பாட்டாளிகள் மதிய உணவை முடித்து ஓய்வாக மரத்தடியில் அமர்ந்திருந்தனர். ஓட்டமும் நடையுமாகச் சிலர் வந்தனர். அவர்களில் சிலர் தொழிற்சங்கத்தில் முக்கிய பொறுப்புகளில் இருந்தனர். வந்தவர்களில் ஓர் இளைஞன் மட்டும் பரபரப்பாக விசயத்தைச் சொன்னான்.

'நம்ப மானேஜரும் மத்த கிராணிகளும் பக்கத்துக் கம்பத்துக்குப்போய் சில ஆளுங்களைச் சேர்த்துக்கிட்டு இருக்காங்க... நாளைக்குக் காலையில் எப்படியும் பெக்டரியை ஓட்டிக்காட்டுறோம் அப்படீன்னு சொல்லிக் கிட்டு இருக்காங்கண்ணே!'

விசயம் காட்டுத்தீ போல் பரவியது. மறியலில் ஈடுபட்டிருந்த பலர் அந்த ஆலையில் வேலைசெய்பவர்கள். செம்பனைப்பழங்கள் சுத்திகரிப்புச் செய்யப்படாமல் போனால் பெருத்த இழப்பு என்று தெரிந்தே முதலாளியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை அறிந்து சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் கொதித்தெழுந்தனர்.

'எவன் பெக்டரி மிசின்லே கைய வைச்சானோ! அங்கே கொலதான் விழும்' என்று உறுமினான் ஒருவன். அவனுக்குப் பக்கபலமாக பலர் சேரத் துவங்கிவிட்டனர். அக் கூட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குள் திருமாலனுக்குப் பெரும்பாடாயிற்று.

'அன்புத் தம்பிகளே! நான் உறுதியாக சொல்றேன்... நம்மை மீறி அவுங்க ஆலையை நடத்திவிட முடியாது. என்னை நம்புங்க' கூட்டம் கொஞ்சம் அமைதியடைந்தது.

உடனடியாகச் சில உறுப்பினர்களை மாவட்டத் தொழிலாளர் இலாகாவுக்கு

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

பொன். முத்து

# மூன்றாவது சினிமா

# தலித் சினிமா மாற்றுச் சினிமா

(சென்ற வாரத் தொடர்ச்சி)

5. தேவர் மகன், ஜென்டில்மேன், சின்னக்கவுண்டர் போன்ற படங்களை முன்வைத்தும், மகாநதி படத்தை முன்வைத்தும் கமல்ஹாஸன், மிடில் சினிமா, பொதுப்புத்தி போன்றவை குறித்துப்பேசுகிறார்:

I. ஒருவரிச் சொல்லாடல்-கதையாகும் பொழுது தத்துவத்தை பொது புத்தி சார்ந்த தத்துவத்தைப் பிரதானப்படுத்துகிறது. திரைக்கதையாகும் பொழுது, பொதுப்புத்திக்கு-பொதுப்புத்திசார்ந்த உணர்வுகளும் முக்கியத்துவம் கொடுக்கிறது. தத்துவத்தைவரையவிரும்புகிறவர்களும், நம்புகிறவர்களும், கேள்விக்குள்ளாக்குபவர்களும், அடையாளமற்ற கதா பாத்திரங்களையோ, விளிம்புக்குள்ளாகும் பாத்திரங்களையோ படைக்காமல் எல்லாக் கதாபாத்திரங்களையும் அதனதன் சூழலில் வைத்துப் படைப்பர். அதன் வாழ்க்கைக்கான தத்துவமும் தாக்கமும் தவறாமல் தரப்படும். ஆனால் நபர்களால் வழிநடாத்தப்பட வேண்டிய அல்லது அடிமைப்படுத்தப்பட வேண்டிய சமூகத்தை உருவாக்க விரும்புபவர்களும் நம்புகிறவர்களும் கேள்விக்குள்ளாக்கப்படுவதை விரும்பாதவர்களும் தனிநபர்களை மட்டும் தத்துவார்த்தம் கொண்டவர்களாகப் படைக்கிறார்கள்.

II. வலியத் திணிக்கப்படும் சண்டை, கவர்ச்சி நடனம், கற்பழிப்புக்காட்சி, வாகனத்துரத்தல் போன்ற தாக்கத்திற்குட்படாத அம்சங்களைத் தவிர்த்துக் கதையின் போக்கிலேயே அவற்றின் அம்சங்களைத் தாங்கிவந்துள்ள இந்தப் படங்களை நடுவாந்திரப் படங்கள் (Middle Cinema) என்றும் கெடுதல் விளைவிக்காதவை (Harmless) என்றும் பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

III. சாதியாலும் கடைப்பிடிக்கும் விழுமியங்களாலும் (Values) இவ்விருவகைப் படங்களின் காரணகர்த்தாக்கள் வேறுபட்டாலும், வர்க்கத்தால் அவர்கள் செல்வந்தர்கள். கனவான்கள். தனிநபர் தலைமையில் உள்ள அமைவில்தான் பாதுகாப்பானது.

IV. இந்தப் படங்களில் பல மௌனங்கள் உண்டு. சட்டமும் அவை சார்ந்த நடைமுறைகளிலும் சாதாரண மனிதர்களுக்கெதிராக இருப்பதையோ, அதிகாரம் கைவரப்பெற்ற கனவான்கள், அதனை சாதுர்யமாக வளைத்துக்கொண்டு முதலாளிகளாவதையோ இந்தப் படங்கள் பேசுவதில்லை. காட்டுவதில்லை. ஜனநாயக நடைமுறைகளுக்கு வக்காலத்துவாங்கும் இதன் பின்னணியில் முதலாளிய நடைமுறைகளுக்கு மாறிவிட்ட நகர்ப்புற உயர்வகுப்பு, உயர்சாதி, பிராமணிய அறிவாளிகள் இருப்பதுதான் காரணம்.

V. மகாநதி பிராமணன் நல்லவன். தேவர்மகன் பிராமணன் கெட்டவன். இரண்டும் இருக்க வேண்டிய பின்னணிகளைச் சரியாகச்செய்துள்ளார்.

கமல்ஹாஸன் இதைத் தேர்ந்துகொண்டகாரணம்: சுஜாதா தொடங்கி பிராமண எழுத்தாளர்கள், பிராமணனை நல்லவர்களாகக் காட்ட முயல்கிறார்கள். ஆகவே அதேபோல கமல்ஹாஸனின் மகாநதி பிராமணன் நல்லவனாகிறான். திமுக. அரசியல் பிராமணர்கள் பற்றி உதிர்மறையாக உருவாக்கியிருக்கும் நோக்குக்கு ஒப்ப, தேவர் மகன் பிராமணன் இருக்கிறார். ஏனெனில் அது பிரபலம் பெற்றுவிட்ட கருத்துநிலை.

இதில் கமல்ஹாஸனின் 'கோணத்தைத்' வெளிப்படுத்தும் பாத்திரம் என்ன?

இந்தத் திரனம் ஒரு கலைஞனில் சமூகப் புரிதலின் வெளிப்பாடா அல்லது வியாபாரியின் சந்தர்ப்பவாதமா?

★ ★ ★

6. எடிட்டர் லெனினுடைய 'நாக் அவுட்' பற்றிய விமர்சனத்தை முன்வைக்கிறார் ரவிக்குமார்.

I. இந்தச் சமூகத்துக்கு அவசியமான செயல்களைச் செய்கிறார்கள் இந்த நபர்கள். மீன் விற்பது, பிணத்தை எடுத்துச் செல்வது, வண்டி ஓட்டுவது, பிணத்தைப் புதைப்பது இப்படியான காரியங்களை இந்தச் சமூகத்துக்குச் செய்யும் உதவிகளும் கூட இதனைச் செய்யும் மனிதர்களோ, வறுமையிலும் முதுமையிலும் வேலைசெய்து பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

II. தெம்புடன் இருந்தபோது சஞ்சீவியின் உடல் பதக்கம் வென்று வந்தபோது, 150 மாட்டு வண்டிகள் வைத்து ஊர்வலம் விட்ட இந்தச்சமூகம், அது வலுவிழந்து போனவுடன் நிராகரித்துவிட்டது எனவும், இந்தச் சமூகத்தை இதனால்தான் ஆசிரியர் சாடுகிறார் எனவும் நாம் பார்க்க முடியாதா? எனக் கேட்கலாம். ஏழ்மையும் முதுமையும் இம்சிக்கிற நிலையில் வருகிற பிரபாத்திரங்களை ஆசிரியர் முன்வைக்கும் முறை மேற்சொன்னபடி படத்தை அணுகுவதைத்தடுத்து விடுகிறது.

III. 'முரட்டுத்தனமானது, கொடூரமானது எனப் பலரும் கூறினாலும் கூட சிறப்புக் கவனம் தந்து ஒரு விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும், அது 'பாக்ஸிங்' அதைப்போல தைரியமான மனோபாவத்தையும் விரைந்து முடிவெடுக்கும் குணத்தையும் உடலுக்கு எஃகு போன்ற உறுதியையும் தருகிற விளையாட்டு வேறு எதுவுமில்லை' என்கிறான் எடிட்டர்.

இவர்களது அபிப்பிராயங்களின்றி 'ஆப்பிரிக்க சினிமா' பற்றிய தமது விமர்சனங்களில் எஸ்.வி.ராஜதுரை(*7)யும் வ.கீதாவும் (*8) தமிழில் தலித் சினிமா பற்றியும் தமது அக்கறைகளை வெளியிடுகிறார்கள். இதுவன்றி கமல்ஹாஸனின் குருதிப்புனல் பற்றிய காட்டமான விமர்சனமொன்றையும் எழுதியிருக்கிறார் சாருநிவேதிதா. (*9)

அவர் சொல்கிறார்: I. சாதியையும் மதத்தையும் நான் துறந்துவிட்டேன் என்று சொல்லித் தன் பூணூலைக்கூட அறுத்து எறிந்துவிட்ட சில பிராமணர்களையும் இந்தப் பின்னணியில்தான் நாம் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. நெஞ்சில் கிடந்த பூணூலை அறுத்து எறிந்துவிட்டு இவர்கள் நாத்திகம் பேசினாலும் நெஞ்சுக்குள் கிடக்கும் பூணூலை இவர்களால் அறுத்து எறிய முடியவில்லை. அதனால்தான் இவர்கள் எந்த உயர்சாதி வெறியர்களைவிடவும் ஆபத்தானவர்களாகி விடுகிறார்கள்.

★ அரசியல் ரீதியிலும் கட்சி அடிப்படையிலும் சினிமாவில் வரலாற்று ரீதியாகவும் தலித் பிரச்சினை எவ்வாறு அவதானிக்கப்பட்டு வந்திருக்கிறது எனும் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கிறது.

★ சினிமா கட்டமைவு, ரசிகர் மனோபாவம், பெண் ரசனை மனோபாவம், தலித் ரசனை மனோபாவம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது எனும் கேள்வியும் சினிமா ஆதிக்கம் பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

★ தமிழ் சினிமாவில் கவனிக்கத் தகுந்தவர்கள் எனும் அளவில் மிகவும் குறிப்பிடப்படும் இயக்குநர்கள் மீதான காட்டமான விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளன. படங்கள் பேசப்பட்டுள்ளன.

★ பெரும்பாலான இயக்குநர்கள் பிராமணர்கள்-பிராமணிய மதிப்பீடுள்ளவர்கள் எனும் வகைக்குள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

★ கமல்ஹாஸன் மீதுதான் அதிகமான தாக்குதல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

★ தலித் சித்தரிப்பு, காமெரா இசை போன்றவற்றின் செயல்பாடு, மிடில் சினிமா, பொதுப் புத்தி போன்ற சினிமா கோட்பாடு பற்றிய அவதானங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**விமர்சனக் கட்டமைப்புக்களை வாழ்நாள் பூராவும் செய்து கொண்டிருக்கலாம். அத்துணை ஆதிக்கமும் பிரதிகளும் மதிப்பீடுகளும் கெட்டிதட்டிக்கிடக்கிறது. நம்சொந்த சந்தோசத்துக்கு நிறைய விமர்சனம் எழுதிக்குவிக்கலாம். அதனால் நாம் திருப்திப்பட்டுக்கொள்ளலாம். செயல்களை மேற்கொள்ளாமல் ஒரு இம்மி மாற்றம் கூட நிகழாது.**

யமுனா ராஜேந்திரன்

★ தலித் சினிமா விமர்சனக் கண்ணோட்டத்தை நிர்த்தாட்சண்யமாக மறுக்கும் போக்கும் நிலவுகிறது.

நிலவும் தமிழ்ச்சினிமாவின் மிக மோசமான இயக்குநர்கள் பிரச்சினைகள் அவர்களது படங்களின் வெற்றிகள் தமிழ் சினிமாவின் நகைச்சுவையில் பொதிந்திருக்கும் ஆதிக்கக் கூறுகள் முற்றிலும் பார்க்கப்படாது விடப்பட்டிருக்கிறது.

பக்திப்படங்கள் உள்பட திராவிட சினிமாக்கள் கட்டமைக்கப்பட்டிருக்கும் களமாக தனிநபர் சினிமா, கதாநாயகன் x வில்லன், கதாநாயகி x வில்லி சினிமா அமைப்புமுறை பார்க்கப்படவில்லை.


கமல்ஹாஸன், சங்கர், மணிரத்தினம், பாலச்சந்தர் என எல்லோரையும் புறந்தள்ளிவிட்டு தொடர் வெற்றி பெற்று பெரும் அழுத்தமான நிலப்பிரபுத்துவ ஆதிக்க வகையினமான கே.எஸ். ரவிக்குமாரின் படங்கள் பார்க்கப்படவில்லை.

மிக மோசமான ஜாதீக ஆதிக்கச் சக்தியின் ஒருங்கமைக்கப்பட்ட வடிவமான சமகால நகைச்சுவைக்கூத்துக்கள் விவாதத்திற்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சரி. தலித் சினிமா கோட்பாட்டை நாம் எட்ட வேண்டும். நடைமுறையிலும் செயல்பட வேண்டும். அதற்கு முன்பாக தலித் கோட்பாட்டாளர்களால் காட்டமான விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கும் பாலச்சந்தர், கமல்ஹாஸன் போன்றோரும் சுஹாஸினி போன்ற பெண் இயக்குநர்களும் தமது சினிமா முயற்சி குறித்து என்ன சொல்லியிருக்கிறார்கள் எனப் பார்ப்பதும் நமது புரிதலை ஆழப்படுத்தக்கூடும். இதுவன்றி மகேந்திரன், பாலுமகேந்திரா பாரதிராஜா போன்றோரும் தமிழ் சினிமா பற்றி என்னமாதிரி அனுபவங்களை முன்வைக்கிறார்கள் என்பதுவும் நம் புரிதலை ஆழப்படுத்தும். அப்புறம் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர், நடிகர், இயக்குநர், தியேட்டர் முதலாளிகள், மாற்று ஏற்பாடு, எப்படிச் செயல்படுவது? படத் தயாரிப்புகளை மேற்கொள்வது என்றெல்லாம் நடைமுறையில் சாத்தியமாகக் கூறியவற்றையெல்லாம் நாம் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

விமர்சனக் கட்டமைப்புக்களை வாழ்நாள் பூராவும் செய்து கொண்டிருக்கலாம். அத்துணை ஆதிக்கமும் பிரதிகளும் மதிப்பீடுகளும் கெட்டிதட்டிக்கிடக்கிறது. விமர்சிப்பது வேறு செயல்பாட்டுக்கான தளத்தை உருவாக்குவது வேறு. நம்சொந்த சந்தோசத்துக்கு நிறைய விமர்சனம் எழுதிக்குவிக்கலாம். அதனால் நாம் திருப்திப்பட்டுக்கொள்ளலாம். செயல்களை மேற்கொள்ளாமல் ஒரு இம்மி மாற்றம் கூட நிகழாது. மக்கள் மனங்களும் மாறப்போவதில்லை. வாழ்க்கையிலும் மேன்மையுறப்போவதில்லை.

(முற்றும்)

மாவீரர் நாள் 99
ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி

கலைஞர்களே!
உங்கள் கமராக்கண்களை திறவுங்கள். எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சனைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்துடிப்புள்ள உங்கள் கலைப்பார்வை உங்களுக்கு வெற்றியை தேடித்தரும்.

குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்

- ★ இவ் வருட ஒகஸ்ட் மாத நடுப்பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி ஊடாகவோ, கடிதங்கள் மூலமாகவோ பதிவுசெய்து கொள்ளுங்கள்.
- ★ குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதி நாள்: ஒக்டோபர் 15.
- ★ ஆக்கத்தனம் புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
- ★ கதை, திரைக்கதை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
- ★ இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோதனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.
- ★ சிறந்த முதல் மூன்று படங்களும் பரிசுக்கு தெரிவுசெய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

C.C.T
341 rue des pyrénées,
75020 Pairs, France.

மேலதிக விபரங்களுக்கு 01.43.50.11.42
தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் பிரான்ஸ்




## விண்வெளியில் ஒரு வீராங்கனை



இன்றும் உலகின் ஓர் மூலையில் பெண்ணை அணு அணுவாக அடிமைப்படுத்தி துன்புறுத்துகிறார்கள். ஆனால் மறுபுறமோ ஆணுக்குப் பெண் சளைக்கமாட்டாள் என சவாலாக மண்ணிலிருந்து விண்வரை சென்று சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் தற்போது இங்கே பெருமையுடன் குறிப்பிடும் பெண், தற்போது விண் வெளிக்குச் சென்றுள்ள எய்லீனைத் தான்.

ஆம்! மனிதன் சந்திரனில் கால்பதித்து, 30 வருடங்கள் பூர்த்தியாகின்றதல்லவா. அதை நினைவுகொள்ளும் பொருட்டு அமெரிக்கா 'கொலம்பியா' என்னும் விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. இவ்வாறு அங்கு அனுப்பியுள்ள இந்தப்புதிய விண்கலம் அங்கு சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த ஆராய்ச்சிக்காக குறிப்பிட்ட விண்வெளிக்கலத்துடன் ஒரு ஆராய்ச்சியாளர் குழுவே பயணித்துள்ளனர். ஆராய்ச்சிக் குழுவினருக்கு தலைமை தாங்கிப்போனவர்தான் எய்லீன் காலின்ஸ் என்னும் பெண். ஆக எய்லீன் வெற்றிகரமாக நடாத்தப்போகும் ஆராய்ச்சியில் பெருமை கொள்ளப்போவது அமெரிக்கப் பெண்கள் மட்டுமல்ல, உலகத்துப் பெண்ணினமும்தான்.

# மருத்துவர்களின் 'வறுமை'

இந்தியாவில் அதிகரிக்கும் சனத்தொகை நெரிசலிற்காக அங்கு சந்துபொந்து என்ற அனைத்திலுமே குடும்பக்கட்டுப்பாட்டு பிரச்சாரம் செய்யப்படுவது பொதுவாக எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்குள்ள கிராமப்புறப் பெண்கள் இந்த குடும்பக்கட்டுப்பாடு எனும் பெயரால் சில வேளைகளில் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள் என்கின்றன அங்கிருந்து வெளிவரும் மக்களுடன் நெருங்கிய பத்திரிகைகள். அண்மையில் இக்குடும்பக்கட்டுப்பாட்டு சத்திரசிகிச்சைக்காக அரச மருத்துவ மனைக்குச் சென்ற சில பெண்கள் தொடர்ந்து இறந்துவிட்டதைக்கண்டு, தற்போது ஏனைய பல பெண்கள் பிரசவத்திற்கே மருத்துவமனை செல்லதற்கும் தயங்கி நிற்கிறார்கள். அதாவது இந்தப் பிரச்சினை பொதுவாக நகர்ப்புறங்களில் இல்லையெனவும், மிகவும் பின்தங்கிய கிராமங்களிலேயே தொடர்கிறது என்கின்றனர், தம் மனைவிமாரைப் பறிகொடுத்த கணவன்மார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட வைத்தியர்களோ இதை மறுக்கிறார்கள். பலபெண்கள் வீட்டிலேயே சிலவேளை குழந்தையைப் பிரசவித்துவிட்டு பின் சத்திரசிகிச்சை செய்கிறார்கள். அதனால் பாதுகாப்பற்ற முறையில் நடாத்தப்படும் வீட்டுப் பிரசவங்கள்தான் இவ் விபரீத மரணங்களிற்குக் காரணம் என்கிறார்கள் வைத்தியர்கள். ஆனால் சம்பந்தப்பட்ட குடும்பங்களோ இதை மறுத்து, நாம் ஏழைகள் என்பதால் தம்மீதுதான் இவர்கள் தப்பிதமாக மருத்துவத்தைப் பழகிக்கொள்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகின்றனர். ஏனெனில் வைத்தியசாலையில் தம்பிடம் அங்குள்ளவர்கள் ஏன் எழுத்து மூலமாக வைத்தியர்கள் மேல் பொலிசில் புகார் கொடுக்கமாட்டோம்; நீதிமன்றத்திற்கு இது சம்பந்தமான வழக்குகள் தொடரமாட்டோம்; அரச உதவிப்பணம் கேட்கமாட்டோம் என்று ஏன் எழுதித் தரும்படி கேட்கவேண்டுமெனக் கேள்வி எழுப்புகின்றனர். ஆக, யார் தற்போது யாரின்மேல் பழிசொன்னாலும் இனிமேல் இவ்வகையான இறப்புக்களைத்தவிர்க்க அரசு முயல வேண்டும். அதிக நவீன சாதனங்களை மற்றும் போதிய பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவர்களை கிராமப் புறங்களிற்கு அனுப்பி சிறந்த முறையில் அங்கு வைத்திய சேவையை நடைமுறைப்படுத்தவேண்டும், இல்லையேல் கட்டாயம் இந்தப் பிரச்சினைகள் தொடர்வது தவிர்க்க முடியாது.



(தாயை இழந்த நிலையில் தந்தையையும் பாட்டியையும் நம்பி நிற்கும் அப்பாவிக்குழந்தை)

# முகப்பரு தொல்லைகளிற்காக...

சாதாரணமாக பெண்களில் முக்கால் பகுதியினருக்கு முகத்தில் பரு வருதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. இது குறிப்பாக பெண்கள் பருவமடைந்து ஓர் சில வருடங்களிலேயே தோன்றத் தொடங்கிறது. இந்தப் பருவின் தொல்லையால் ஏராளமான பெண்கள் சிகிச்சை எனும் பெயரில் செய்யும் தவறான சில செய்கைகளால் இன்றும் இன்றும் தம் முகத்தோற்றத்தை விகாரமாக்கிக் கூட விடுகிறார்கள். எனவே இதற்கு உதவியாக சில செய்திகள் இங்கே.

1. உங்கள் முகங்களில் பரு இருந்தால் நீங்கள் முகம் துடைக்கப் பாவிக்கும் துவாலையை யாருக்கும் கொடுக்காமல் தனித்து நீங்களே மிக மிக துப்பரவாக வைத்திருங்கள்.
2. அதிக கொழுப்பு மிக்க உணவுகள், மற்றும் எண்ணெய்ப்பற்று மிக்க அழகு சாதனப்பொருட்களை பெரும்பாலும் தவிர்த்துவிடுங்கள்.
3. முகத்தில் உள்ள பருவின் மேல் எரிச்சலை ஊட்டக்கூடிய (உ+ம்: தேசிக்காய் போன்ற) மருந்து வகைகளை கண்டபடி உபயோகிக்காதீர்கள். அவை பருவை காயவைத்தாலும் அந்த வடுக்களைப்பெரிதாக கருப்பாகத்தெரிய வைக்கும்.
4. அடிக்கடி முகத்தை மிக மென்மிய வெந்நீரில் கழுவினால் தோலின்மேல் உள்ள எண்ணெய்த் தன்மை குறையும். முகத்தின் மேல் அளவிற்கதிகமான முகப் பவுடரைப் பூசினாலும் முகத்தின் மேலுள்ள தோலின் துவாரங்கள் அடைபட்டும், இப்பரு வரச்சாத்தியமுண்டு. எனவே கூடியளவு முகத்தை ஏதுவும் பூசாது வெறுமையாகவிடுங்கள்.
5. வேறொருவர் வைத்தியரிடம் தனக்கு வாங்கிய மருந்தை நீங்கள் வாங்கிப் பாவிக்காதீர்கள். உங்களிற்கு வேண்டியதை நீங்களே வைத்தியரிடம் சென்று உங்களின் முகத்திலுள்ள பருக்களின் தன்மையைக்காட்டி, வாங்கிக்கொள்ளுங்கள்.
6. முகத்தில் தோன்றும் பருக்கள் மேல் கைகளால் நெரித்து உடைத்து சீழ் இரத்தம் போன்றவற்றை வெளியேற்றாதீர்கள். அவை இச் சிறு பருக்களை பெரிய புண்களாக மாற்றிவிடும்.

# விபரீத உறவுகளும் விவாகரத்துக்களும்

இங்கு வெளிநாடு என்று நாம் வந்துசேர்ந்ததும் ஏனோ எம்மில் பலர் தாம் சொர்க்கத்திலேயே நுழைந்துவிட்டோம் என எண்ணிவிடுகிறார்கள். அதனால் எப்படி எப்படி எல்லாம் நாம் இங்குள்ள வெளிநாட்டவர்களையும் அவர்களின் பழக்க வழக்கங்களையும் தொட்டுவிடலாம். அதனுள் எப்படி எம்மை இணைத்துவிடலாம் என எண்ணி தவறாக தம்மை ஏன் தம்மைச் சூழ்ந்தோரையும் கூட அழித்து விடுகிறார்கள்.

அண்மையில் எம்நாட்டு சில பெண்கள் தம்மிடையே கொண்டிருக்கும் சில தவறான உறவுகளை நாம் காணவும் கேட்கவும் நேரிட்டதாலேயே இக்கட்டுரை பிறக்கிறது. எம்மவர்களில் பலர் இங்குள்ள வீட்டுப் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடி என்பவற்றால் கூட்டு குடும்பங்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இதனால் ஒரு கணவன் மனைவி என்பவரோடு அவரைச் சேர்ந்த யாராவது ஒருவர் அல்லது பலரும் இவர்களுடன் இணைந்து வாழவேண்டிய சந்தர்ப்பங்கள் இங்கு நிறையவே காணப்படுகின்றது. இவ்வாறு சேர்ந்து வாழ்வதென்பது ஆரோக்கியமான நிலையில் இருக்குமிடத்து மிகுந்த மகிழ்ச்சியையே கொடுக்கும். ஆனால் இது துரதிர்ஷ்டவசமாக குடும்பத்தையே குலைக்கும் ஒரு கருவியாக அமையுமேயானால், அது மிகுந்த பிரச்சினைகளையே உருவாக்கிவிடும். உதாரணமாக ஒரு குடும்பத்தில் உள்ள கணவர் தம் மனைவியின் சகோதரிகளை சகோதரத்துவமான முறையைக் கடந்து தவறான கண்ணோட்டத்துடன் நோக்குவாரேனின், அப்பிரச்சினை அவரை மட்டுமல்ல; அவரைச் சூழ்ந்துள்ள அனைவரையுமே பாதிப்புக்குள்ளாக்கிவிடும். இதே போலவே இவரின் மனைவியும் தம்மிடையே உள்ள பிற ஆண்களுடன் தகாத உறவுகளை வளர்க்க எண்ணுவாராயின் மேலே சொன்ன பாதிப்பே இவருக்கும் ஏற்படும்.

இங்கே பெரும்பாலான குடும்பங்களில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவது இல்லையென்றே நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் மிகக்குறைந்த அளவில்கூட இடம்பெறும் இந்த அழுக்குத்தனமான உறவுமுறைப் பிரச்சினைகள்' எம் சந்ததியினரை மட்டுமின்றி, சமுதாயமளவுக்குக் கூட பாதிப்புக்குள்ளாக்கிவிடும். இதற்காக வீட்டில் எம்மோடு யாருமே வசிக்கக்கூடாது என்ற நிபந்தனையை எம்முள் வளர்க்கக்கூடாது. ஆனால் நாம் எம்மைச் சூழ இருக்கும்போதும், நாம் நாமாகவே எப்போதும் தூய்மையானவர்களாக இருப்போம் என எமக்குள்ளேயே உறுதியுடன் இருத்தல் என்பதே இங்கு அவசியமாகும். ஏனெனில் ஓரிருவர் விடும் இப் பிழையால் அவரிடையே காணப்படும் குழந்தைகளும் பிற சகோதரர்களும் ஏனைய உறவுகளுமே சமுதாயத்தில் அவமானத்தைச் சந்திக்கின்றனர்.

சிலவேளைகளில் தாயோ, தந்தையோ இவ்வாறான தவறான தொடர்புகளைக்கொண்டிருப்பதும் இதன்பொருட்டு குடும்பங்களிடையே பிரச்சினைகள் தோன்றி விவாகரத்துவரை செல்வதும் பல இடங்களில் நடந்துள்ளது. இதனால் சம்பந்தப்பட்டவர்களின் குழந்தைகள் சொல்ல முடியாத அளவிற்கு உளவியல் ரீதியில் பாதிப்படைந்து நாளைய சமுதாயத்தை சீரழிக்கக்கூடிய அளவிற்கு மனநிலை பாதிப்புற்றவர்களாக தான்தோன்றித்தனமாக வளர்ந்துவிடுகிறார்கள். இவர்களில் ஒருசிலர் தமக்குள்ளேயே தாழ்வு மனப்பான்மையால் நொந்து, பாரதூரமான உளவியல் சார்ந்த நோய்களுக்கு ஆளாகிவிடுகிறார்கள்.


ஆகவே இங்கு நாம் குறிப்பிட்டுச் சொல்லவிரும்புவது, குடும்பங்களில் உள்ள ஒவ்வொருவருமே தம் சிந்தனைகளை ஆரோக்கியமாகவும் அடுத்தவரை நோகடிக்காதவகையில் பண்படுத்தக்கூடியதாகவும் இருக்கும் வண்ணமே வளர்த்துக்கொள்ள வேண்டும். தம்மைச் சூழவுள்ள உறவுகளை பூரணமாகப் புரிந்துகொண்டு அவர்களுடன் சகோதரத்துவமாக நல்ல மனிதர்களாக மதித்துப் வாழப் பழகிக்கொள்ளுதல் வேண்டும் என்பதேயாகும்.

## அரசியல் துறையில் ஆர்வமுடன் பெண்கள்

இன்று உலகின் பல முக்கிய துறைகளிலும் பெண்களின் தலையீடு தாராளமாக இருக்கிறது. எனினும் அரசியல் துறைகளில் இவர்கள் ஆண்களின் தொகைக்கு சமமாக ஈடுபாடு கொண்டுள்ளார்களா எனப் பார்த்தால் இல்லையென்றே கூறவேண்டும். ஏனெனில் இன்றும் அதிக நாடுகளின் தலைவர்களாகவும் பிரதமர்களாகவும் அதிகளவில் இருப்பது ஆண்கள்தான். இந்நிலைமை மெல்ல மெல்ல அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கின்றன, மேற்குலக அரசியல் பத்திரிகைகள். சமீபத்தில் இவர்கள் ஆய்வின்படி உலகநாடுகளை முழுமையாக தற்போது 156 நாடாளுமன்றங்கள் இயங்கி வருகின்றனவென்றும், அவற்றில் மொத்தமாக கடமைபுரிவோர் 35,618 பேர் என்றும், அத்தொகையில் 12.7 வீதமானவர்களே பெண்கள் என்றும் குறிப்பிட்ட அவர்கள், இவ்வாறு நாடாளுமன்றத்தில் கடமைபுரிபவர்களில் 8 பேருக்கு ஒருவர் பெண்ணாகவே இருப்பது பெண்சமூகத்திற்கு மகிழ்ச்சியே என்றும் தெரிவித்துள்ளார்கள். இருப்பினும் இத்தொகை ஆண்களிற்கு நிகராக இன்னும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எம் விருப்பம்.

**நித்தி வாகன சேவை**

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr 23032

**ஈழமுரசு ஐரோப்பிய வணிக சேவை**

உங்கள் அன்புக்குரியவர்களின்
★ பிறந்த நாள் வாழ்த்துக்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
★ அறிவித்தல்கள் - நினைவஞ்சலிகள்
என்பவற்றை வரலாற்றுப் பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்

நீங்கள் ஈழமுரசிற்கு சந்தா, செலுத்துவதன் மூலம் 20% இலாபம் அடைகின்றீர்கள் என்பதனை அறிவீர்களா?

**ரவி வாகன சேவை**

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது



தொலைபேசி:
0148765190
0607622689

Pub Fr 23034

உத்தியோகபூர்வ
**மொழிபெயர்ப்பு சேவை**

கிருஷ்ணபிள்ளை மாயவன்
15 ஆண்டுகளாக அரச அங்கிகாரம் பெற்ற சட்ட ஆலோசனைகள் மொழிபெயர்ப்புகள் சேவையாற்றிவருகிறோம்

39, bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE OU GARE DU NORD
TEL/FAX: 0140345341

Pub Fr 23035

**P.S வாகன சேவை**

உங்கள் தேவைகளுக்கு 24 மணி நேர சேவை
தொடர்புகட்கு:
ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியூஸ் (Cornelius) குமார்



Pub Fr 23037

**தென்றல் இல்லம்**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கோப்பித்தூளும் பெற்றுக்கொள்ள

60, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09

**LUNE**
ELECTRONIQUE INFORMATIQUE





Processeur CYRIX 300
Carte Mère TX PRO II
Disque Dur 3,2 Go Ultra DMA
SDRAM 32 Mo Pc 100
Carte Video 4 Mo AGP
Carte Son 16 Bits PCI
Lecteur CD ROM 40X
Lecteur Disquette 3,5"
Ecran 15" MPR II
HP PMPO 160 W
Clavier 105 Touches PS/2
Souris PS/2
Boîtier Alim Moyan Tour ATX
GARANTIE 2 ANS

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.

**'VICTOR SARL'**

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

**VICTOR SARL**
43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30


**சிவாசினி வாகன சேவை**
*Chivashini Transport*

வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ



06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04

Pub Fr 23036





*Réseau*
**WWA**
உலகம் உங்கள் கைகளில்





**மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!**

**Maghrab 80Mn**
**Afrique 50Mn**
**Asie 50Mn**

Surcharge : 3F à chaque connexion.

**KING Telecom**
92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

**WWA**
86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

**KING Telecom**
33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

Pub.

# கலைந்த சொற்கள் எண்: 36

கீழ் உள்ளவற்றில் 137 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். இச்சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| து | ல் | ம் | இ | பி | ம் | ன் | ப | ம் | க | க் | ப | கு | த் | த | ல் |
| ல் | க | ங் | ண | வ | ப | த | மீ | ன | த | ட | ங் | க | ல் | லூ | ரி |
| ல | க் | க் | ங் | ப | க | ர | த் | ன் | வ | ல | க | ப | ல | ல | மை |
| ம் | கு | பு | க | வ | ப் | ப | மா | சி | வி | ள | ம் | பி | ல் | டு | ரி |
| மெ | ல் | ல | ல் | ம் | த | ரி | ச | ன | ம் | தோ | ழ | ன் | கொ | க் | கு |
| கி | க | ம் | ச | கா | வ | ச | வ | ரு | ந் | த | ல் | ல | ம் | ட | மா |
| ம் | ல | ல | வை | க | ச | ம் | வ | ரு | து | த | ம | வி | சி | றி | வி |
| மை | ங் | ல் | ம் | ற | ம் | ப | வி | ரு | த் | த | ம் | ப | ட் | ட | ம் |
| கை | ம் | வெ | ச | வை | ப | வ | டு | ர | ப | டா | க | ப | ர | ட | ப |
| ல் | ரு | பொ | ம் | ர | ப | ம் | ப | ட் | த | க | ர | ம் | தி | ட | ம் |
| ம் | ன | த | வ | ந | க | ண | டு | பி | நீ | ம் | ந | ந | வ | க | ம் |
| ய | க | ச | ரு | மை | ட் | த் | க் | பா | ர் | ப | மி | ல் | டி | க | ள் |
| ரி | ம் | ட | ப | பி | து | ட | கை | கா | வோ | ள | ரி | ன | ல | கை | தே |
| பு | ப | ம் | ய | ணி | ண் | பு | ல் | பா | ர | ம் | ம் | த | ம் | ற | மை |
| க் | ம் | த | த் | ரு | வி | ப் | த | பு | உ | ன் | ந | இ | ல் | ல | ம் |
| க | ம | ச | ம் | ல் | த | ரி | பி | ம் | ம | அ | ர | மு | க | க | து |
| ல் | ண் | ம் | வ | ச | சா | ம | ம் | ர | கா | ரி | ப | வ | க் | ம் | ப |
| ட | தி | ம் | ச | ச் | ம | மி | ப | பி | கா | து | து | து | ரு | க | பி |
| ம | வா | த் | ம | ர | ம் | ம் | த | இ | வெ | சி | த | ம் | ப | ர | ம் |
| ர | தி | ம் | ள | க | ச | த | ய | ப் | ம் | த | த் | சி | ரு | ன | ப |
| பு | ர | ப் | பு | க | தி | ப | ப | ம | பு | ப் | டி | த | க | க | ம் |
| பி | பி | வ | பு | ர | ச | ம் | ம் | ச | இ | பு | பி | த | ல் | டி | கு |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பரத்தல் | பரமானந்தம் | விருத்தம் | தம்பட்டம் | பணக்காரன் | விளம்பி | பருத்தல் | தடங்கல் | வசம்பு | தகரம் | சின்னம் |
| தம்மினம் | பதநீர் | பிரிதல் | பிரம்மச்சாரி | பருகல் | பிடித்தது | தடிப்பு | சகளம்* | மிதப்பு | பரிகாரம் | விரதம் |
| தம்பதிகள் | தட்டம் | விடுபடு | பட்டுத்துணி | பரம்பொருள் | வனவிலங்கு | பங்கம் | கம்மல் | வம்சம் | கம்பளம் | சவகாசம் |
| மரிப்பு | பிரகாசித்தல் | சிதம்பரம் | தகனம் | சரசம் | கரச்சல் | கும்பம் | சிம்மம் | இமயம் | கடினம் | வெப்பம் |
| திரட்சி | சித்தம் | கம்பன் | தகவல் | சம்பவம் | நவகம்* | நழுக்கம் | புரசம்* | புரப்பு* | வில்லம்* | திண்மம் |
| புரியம்* | நவதனம்* | உரவோர்* | புக்கல்* | தலகம்* | இணங்கல்* | தவசம்* | துல்லம்* | குல்லரி* | தல்லம்* | கமம் |
| துருவம் | நரகம் | பரமன் | தடாகம் | பம்பரம் | படுக்கை | பரவசம் | விசிறி | பருவம் | வருந்தல் | பகலவன் |
| கவரிமான் | பரதன் | தரிசனம் | பிரதிவாதி | பரிசம் | களரகம் | சபதம் | மதிப்பு | பாரம் | துக்கம் | இல்லம் |
| மச்சம் | கொடுமை | களத்தில் | கம்பம் | விருந்தும் | பிரம்பு | நட்டல் | பரிதல்* | நல்லறம் | கரசல் | வெல்லம் |
| பக்கம் | பிணக்கு | வணங்கல் | கக்கம் | மெல்லல் | குக்கல் | கலகம் | சலங்கை | விட்டம் | விம்பம் | கல்லூரி |
| மாடம் | தோழன் | கொக்கு | தோல்வி | புதுமை | கரவை | குடல் | தப்பு | கம்பி | பகல் | இதம் |
| பதும் | மடல் | மரபு | தசம் | அரிது | வெம்பு | படம் | நடிகை | திடம் | பொம்மை | வரன் |
| வரிப்பணம் | பாடும்பறவை | | விருந்தோம்பல் | | புண்ணியம் | கொல்லல்* | | | | |

பெயர்: ..........

முகவரி: ..........

..........

பிறந்த நாள்: ..........

சந்தாதாரராயின் சந்தா எண்: ..........

கலைந்த சொற்கள் எண் 36 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 13.08.1999

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)


<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>

கலைந்த சொற்கள்

**Eelamurasu**

**22, Rue Perdonnet, 75010 Paris, France**

## கலைந்த சொற்கள் எண்—35 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 255 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) ரேணுகா விவேகானந்தன்
49832 Freren,
Germany.

2) பேரம்பலம் குகதாசன்
4900 Langenthal,
Switzerland.

3) S.M.நளாயினி
5500 Middelfart,
Danmark.

4) மிஷேல் மரியதாஸ்
69003 Lyon,
France.

5) M.ஜெயோத்திமாஸ்
94170 Le Perreux Sur Marne,
France.

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-36 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 37ம், 19 - 25 ஒகஸ்ட் 99 ஈழமுரசில் வெளிவரும்.

* இவ்வடையாளம் இடப்பட்ட சொற்களுக்கான விளக்கம். இச்சொற்கள் தமிழ் மொழியகராதியிலிருந்து எடுக்கப்பட்டவை

| | | | |
|---|---|---|---|
| சகளம் | வடிவம் | புக்கல் | புகுதல் |
| நவதனம் | தாமரைத்தளிர் | தலகம் | நடாகம் |
| நவகம் | ஒன்பது | இணங்கல் | உடன்படல் |
| நழுக்கம் | ஆழமின்மை | தவசம் | தானியம், |
| புரசம் | தக்கிரேவன் | | பலபண்டம் |
| புரப்பு | காப்பு | சல்லகி | ஆத்திமரம் |
| வில்லம் | கூவிளை | துல்லம் | பேரொளி |
| புரியம் | கந்து | குல்லரி | இலந்தை |
| உரவோர் | அறிஞர் | கொல்லல் | கொல்லுதல் |
| பரிதல் | அறுத்தல் | தல்லம் | நீர்க்குண்டு |

தயாரிப்பு: சவேபூ சவுந்தரராஜா

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

திங்கள் முதல் - சனி வரை 09.00 — 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

24 மணி நேரத்தில் ... Print செய்து கொடுக்கப்படும்

**PERLYN TOURS**



35 Kgs பொருட்களை வரியின்றி இலவசமாக கொண்டு செல்ல நீங்கள் நாடவேண்டிய இடம்! விமான பயணச்சீட்டு பெறுவோருக்கு இன்னுமோர் அரிய சந்தர்ப்பம்!! CD ஒன்று இலவசமாக வழங்கப்படும்

| | | | |
|---|---|---|---|
| Colombo | 790sfr | Toronto | 840sfr |
| Chennai | 1390sfr | Newyork | 499sfr |
| Singapore | 1290sfr | London | 195sfr |
| Bangkok | 1390sfr | | |

Perlyn Tours
Limmatstrasse -213, 8005 zürich
Tel - 01/440 71 15 or 01/ 433 18 93
Fax - 01/440 71 17 or 01 / 433 17 93
E-Mail: Perlyn@datacomm.ch
Internet: web.site/httpl/www.keggscribe.com/perlyn

# பலதும் பத்தும்

## வேலைக்கு உத்தரவிட்ட நண்பருக்கு கத்திக்குத்து இலங்கையர் 6 மாதங்கள் உள்ளே!

அண்மையில் நண்பர் ஒருவரை கத்தியால் குத்தி காயமேற்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு இலங்கையர் ஒருவர் ஆறுமாதங்கள் சிறைத் தண்டனையைப் பெற்றுள்ளார்.

பாரிசின் புறநகர் பகுதியில் உணவகம் ஒன்றில் இரண்டு இலங்கையர்கள் வேலை செய்துவந்தனர். இவர்களில் ஒருவர் அனுபவம் அதிகம் கொண்டவர் போலும்! தனது சக தொழிலாளியான இலங்கையரிடம் மரக்கறிகளை கழுவும்படி கோரியுள்ளார்.

ஆனால் மற்றொரு இலங்கையரின் உத்தரவுப்படி வேலை செய்யக்கூடாது என இவர் எண்ணினாரோ என்னவோ, முகம் சிவப்பாகி ஆத்திரமடைந்த நிலையில் அருகே வேலைசெய்து கொண்டிருந்த அடுத்தவரின் முதுகில், கையில் வைத்திருந்த கத்தியால் ஏத்திவிட்டார். மூன்றாவது முறையாகவும் கத்தியை எடுத்து மலவாயில் பகுதியில் ஒருகுத்து. குத்துவாங்கியவர் மயங்கிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். குத்தியவர் தற்போது ஆறுமாத தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

## தானெடுத்த புகைப்படமே தனக்கு எதிரியாகியதே!

பாரிசின் பிரபல்யம் மிக்க ஒரு காட்சியகத்தில் இருந்து கடந்த மே மாதம் 150.000 பிராங்குகள் பெறுமதியான நான்கு படங்கள் காணாமல் போயின. அன்றைய தினம் அங்கிருந்த கணினி பாதுகாப்பு முறையும் குழப்பப்பட்டிருந்தன. இதனையடுத்து பிரான்சின் விசேட பொலிஸ் பிரிவினர் துப்புத்துலக்குவதில் இறங்கினர்.

பொலிசாரின் விஞ்ஞான ஆய்வுப்பிரிவினர் தங்களது விசாரணையின் இறுதியில் படங்களை யார் திருடினார்கள் என்ற முடிவிற்கு வந்து ஒருவரைக் கைதுசெய்தார்கள்.

பாரிசின் புறநகர் பகுதியில் வசிக்கும் 25 வயது இளைஞரே இத்திருட்டிற்கு காரணமானவர் எனச் சந்தேகித்து அவரைக் கைதுசெய்வதற்காக அவரது வீட்டிற்குச் சென்ற பொலிசாருக்கு, அங்கு மேலும் பல அதிசயங்கள் காணப்பட்டன. பாரிசின் மருத்துவமனை ஒன்றில் இருந்து திருடப்பட்ட கதிரியக்கம் வாசித்தறியும் கருவி யொன்று அங்கே காணப்பட்டது. இவைகள்தானென்றால் பாவம் அந்த இளைஞனுக்கு தண்டனையை அதிகப்படுத்த மேலும் ஒரு சாட்சி அவனாலேயே அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாரிசின் நிலக்கீழ் ரயில் நிலையங்களில் (Graffiti) வர்ணம் தீட்டுவது [இதை அலங்கோலம் செய்வது என்று கூடச் சொல்லலாம்] தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த இளைஞர் தான் பெயின் டின் கொண்டு ரயில் நிலைய சுவர்களில் விளையாடிக் கொண்டிருந்ததை அவரே புகைப்படக்கருவி மூலம் படமும் எடுத்திருந்தார். சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசாரிடம் இதுவும் அகப்பட்டுள்ளது.

ஆக அவரது புகைப்படமே அவருடைய தண்டனையை அதிகப்படுத்தியுள்ளது.

## தந்தை சொல்....?

அப்துல்அலி 45 வயதான இவர் எகிப்தின் மலைப்பகுதி சோகாக் பகுதியில் வாழும் ஒருவர். இப்பகுதி பாரம்பரிய பழக்க வழக்கங்களைக்கொண்ட சமூக மக்களைக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அப்துல் அலிக்குத் திடீரென ஒரு பிரச்சினை. அவரது 23 வயதான மகள் மதிகா, தனது 80 வயதான கணவரிடமிருந்து விவாகரத்துக்கேட்டதுதான் அது. மகளின் இக் கோரிக்கை அவருக்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது மதிகாவின் விருப்பிற்கு மாறாக அவரை இருப்பமுயன்ற போதும், அது நடக்கவில்லை. இறுதியில் ஒரு மீற்றர் அகலமே கொண்ட ஓர் சிறு அறைக்குள் அவரைப் பூட்டி இறப்பை வைத்துக்கொண்டார்.

அவரது எண்ணப்படி, ஒன்றில் மதிகா தனது சொல்லிற்குக் கட்டுப்பட வேண்டும் அல்லது அவர் இறந்துபோனாலும் பரவாயில்லை என்பதாகும். ஆனால் நான்கு நாட்களாகியும் மதிகா அப்துல் அலியின் விருப்பிற்கு இணங்குவதுபோல் தெரியவில்லை. உணவோ, நீரோ இல்லாத நிலையிலும் அவர் உயிர் வாழ்ந்துகொண்டுதான் இருந்தார். சில தினங்களின்பின் அவரது ஒன்றுவிட்ட சகோதரன் இரவில் இரகசியமாக அவரது அறையின் கதவைத்திறந்து மதிகாவிற்கு உணவு வழங்கத் தொடங்கினார். இது நான்கு மாதங்களுக்குத் தொடர்ந்தது.

இதற்கிடையே அப்பகுதியில் ஓர் வீடொன்றில் சட்டவிரோதமாக ஆயுதங்கள் காணப்படுவதாக தகவல் கிடைத்ததையடுத்து அங்கு சோதனையிடத் தொடங்கினார். ஆயுதம் கிடைத்ததோ இல்லையோ, அருகில் இருந்த ஒரு வீட்டிற்குள் இருந்து மெல்லிய ஓல ஒலி கேட்கத் தொடங்கியது. உடனடியாக பொலிசார் அந்த வீட்டிற்குள் நுழைந்து மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருந்த மதிகாவைக் காப்பாற்றினார்கள்.

தகப்பனாரான அப்துல் அலியை பொலிசார் தேடத் தொடங்கியபோது, அவர் தலைமறைவாகியிருந்தார். அவர் எங்கிருக்கிறார் என்ற தகவலை அவரது 'மூன்றாவது மனைவி' அம்பலப்படுத்தினார். அவருக்கு எத்தனை வயது தெரியுமா? வெறும் 25 தான்!!

## அதிக பலமும் ஆபத்தா?

கெய்றோவின் அந்த சிறையில் சையது முகமட் அகமத் அப்துல்லாவை வைத்திருக்க முடியாதாம். எப்படியாவது அவரை வெளியேற்றிவிடவே சிறைச்சாலை அதிகாரிகள் முழு முயற்சியையும் மேற்கொண்டனர். காரணம் அவரது உடல் தோற்றமும் பலமும்தான்.

42 வயதான சையது, நான்கு மனைவிகளையும் 22 குழந்தைகளையும் கொண்டவர். இராணுவ சேவையில் இருந்த இவர் இராணுவத்திற்குத் தேவையான பலத்தைவிட மிக அதிகமாகக் கொண்டிருக்கிறார் என்றும், இவரது சேவை இராணுவத்திற்கு உதவாது என்றும் காரணம்காட்டி இவரை சேவையில் இருந்து துரத்திவிட்டார்கள். செல்லாத காசோலையைப் பாவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 8 மாதங்கள் இவரை உள்ளே தள்ளிவிட்டது எகிப்திய நீதித்துறை. ஆனால் டோறாப் பகுதியின் சிறைச்சாலையோ, இவர் சிறைச்சாலைக் கம்பிகளையும் ஏன் சுவர்களைக்கூட இடித்துத்தள்ளிவிடுவார் எனப் பயந்து இவரை வைத்துக்கொள்ள மறுத்து எப்படியாவது அவரை அங்கிருந்தும் அனுப்பிவிட முயன்றுள்ளது. தற்போது சையதுவை எந்தத்துறையில் தள்ளுவது என எகிப்திய சிறைச்சாலை அதிகாரிகள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

## வீர விளையாட்டு

பிரேசில் நாட்டில் இபானோமா கடற்கரை தலைநகர் றியோ டி ஜெனிரோவிற்கு அருகில் உள்ளது. ஜோசே நில்சோ கொன்கால்வேஸ் 32 வயதான ஓர் அரச உத்தியோகஸ்தர். இவரும் இவரது நண்பரும் அந்த வெய்யில் பொழுதில் கடற்கரைக்குச் சென்றனர். தனிமையாக நீராட முடிவுசெய்து கடலுக்குள் குதித்தும் விட்டனர். சிறிது நேரம் நீந்திக் கொண்டிருந்துவிட்டு சற்று ஆழ் கடலிற்குச் செல்வோமேயென நினைத்து திரும்பிப் பார்த்தபோது ஓர் பெரிய சுறாவொன்று அப்பகுதியில் சுழன்றுகொண்டிருந்ததை ஜோசே கண்டார்.

அப்பகுதியில் ஏராளமான பொது மக்களும் காணப்பட்டனர். அட்டா மக்களையல்லவா இந்த சுறா பயமுறுத்தப்போகிறது என எண்ணியவர், உடனடியாக தனது வீரவிளையாட்டைக் காட்ட சுறாவை நோக்கி நீந்தத் தொடங்கினார்.

அந்தப் பெரும் சுறாவைத் தனது வெறும் கைகளினால் மடக்கிப் பிடித்து கரைக்குக் கொண்டுவந்தார். கரையில் இருந்த மக்களெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்தனர். சுமார் 1.70 மீற்றர் நீளமும், 45 கிலோ நிறையையும் கொண்டிருந்தது அந்தச் சுறா. மறுநாள் பத்திரிகைகள்கூட ஜோசேயின் வீரத்தைக் கூறின.

ஆனால் ஜோசே அன்று பெரும் சண்டையிட்டு பிடித்ததாகக்கூறிய சுறாவோ மனிதனுக்குத் தீங்கே செய்யாத வகையைச் சேர்ந்தது. அது ஓர் அப்பாவி வகையைச் சேர்ந்த சுறா என்றும், மனிதனின் கொடுமையால் தேவையற்ற வகையில் அந்த மீன் கொல்லப்பட்டது என்றும் மீன்வகை ஆய்வாளர் ஒருவர் கூறினார்.

## நிரபராதி என்பதனை பகிரங்கமாகத்தான் நிரூபித்தார் ஆனால் பாவம்! தண்டனையும் அவருக்குத்தான்

பிரான்சின் பிரதான நகரம் ஒன்றில் அது ஒரு மிகப் பெரிய பல்பொருள் அங்காடி (Hyper Market). அங்குவேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள். ஒரு பகுதியில் ஒரு இளைஞன் திருட்டுத்தனத்தில் ஈடுபடுவதைக் கண்டனர். உடனடியாக அந்த அங்காடியின் பாதுகாப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். சில நிமிட நேரத்தில் அங்காடியில் இருந்து வெளியேற முயன்ற அந்த இளைஞன் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பாதுகாப்பாளர்களால் பிடிக்கப்பட்டான். அங்காடியின் கதவை நொருக்கிய நிலையில் அட்டகாசமாக அந்த இளைஞன் தனது உடைகளை களையத் தொடங்கினான். இறுதியாக முழு நிர்வாணமாக காசாளரின் மேசையின்மேல் ஏறி நின்று தான் திருடவில்லை என்பதையும் தான் நிரபராதி என்பதினையும் அங்கு கூடியிருந்த வாடிக்கையாளரிடம் மிக அழகாக கூறினார். இந்த சந்தர்ப்பத்தில் அங்கு விரைந்த பொலிசார் இளைஞரை கைதுசெய்துகொண்டு சென்றனர்.

நீதிமன்றத்தில் அந்த இளைஞன் தான் தனது வேலைத்தலத்தில் பிரச்சினைப்பட்டு குழம்பிப்போய் இருந்ததாயும், ஆனால் அதனையும் தான் திருடவில்லை என்பதையும் விளக்கினார். ஆனால் கண்ணாடி உடைத்ததற்காகவும் பொது இடத்தில் நிர்வாணமாக நின்றதற்காகவும் 5000 பிராங்குகள் அபராதமும் மற்றும் இரண்டுமாத சிறைத்தண்டனையும் நீதிமன்றத்தால் அவருக்கு வழங்கப்பட்டது.


ஈழத் தமிழர் உதைபந்தாட்ட சங்கத்தின் ஆதரவில் வவுனியா எவர்கிறீன் ஐக்கிய சங்கம் நடாத்தும்

**மாவீரன் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி**

காலம்: 08.08.1999 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: காலை 9.00 மணி
இடம்: STADE JULES Ladoumeque Métro: Porte de Pantin

மேலதிக தொடர்புகளுக்கு:
சி. விஜயகுமார்
0614514188
0144690678

# ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு – 3

புகலிட நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ் தேசியப் பத்திரிகை என்ற வகையில் ஈழமுரசு தன்னுடைய பயணப் பாதையில் தனது பணியை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்காக வாசகர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்துவதற்கு முன்வந்திருக்கிறது. ஈழமுரசினுடைய வளர்ச்சியிலும் அதனுடைய வருகையிலும், தரத்திலும் அக்கறை கொண்ட அனைத்து வாசகர்களும் இந்தக் கருத்துக்கணிப்பில் இயன்றவரை பங்கெடுத்து ஈழமுரசு முகவரிக்கு இந்தப் படிவத்தை அனுப்பி வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (ஆர்)

1. நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா? ஆம் ☐ இல்லை ☐ (ஆம் எனில் சந்தா இல. ---------)
2. சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?
   வாரந்தோறும் ☐ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ☐ ஒரு வாரம் மட்டும் ☐ எப்போதாவது ☐
3. ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?
   1/2 மணி நேரம் ☐ 1 மணி நேரம் ☐ 2 மணி நேரமும் ☐ அதற்கு மேலும் ☐
4. கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப் படித்து வருகின்றீர்கள்?

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதே இல்லை |
|---|---|---|---|
| சினிமா ........ | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை ........ | ☐ | ☐ | ☐ |
| பெண்கள் ........ | ☐ | ☐ | ☐ |
| சிறுவர் ........ | ☐ | ☐ | ☐ |
| தொடர்கதை........ | ☐ | ☐ | ☐ |
| உலகக் கவி ........ | ☐ | ☐ | ☐ |
| வாசேகர் பகுதி ........ | ☐ | ☐ | ☐ |
| வல்லுநரது முகவரிகள் ........ | ☐ | ☐ | ☐ |
| மனமொன்று ஒரு வீர வரலாறு ... | ☐ | ☐ | ☐ |
| பேசுமே?........ | ☐ | ☐ | ☐ |
| கலைந்த சொற்கள் ........ | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு ........ | ☐ | ☐ | ☐ |
| புகலிடம்........ | ☐ | ☐ | ☐ |
| அரசியல் பார்வை ........ | ☐ | ☐ | ☐ |
| பன்முனையார் ........ | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம் ........ | ☐ | ☐ | ☐ |
| அரசியல் ஆய்வுகள் ........ | ☐ | ☐ | ☐ |

5. ஈழமுரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன? அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?

| | விருப்பம் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம் ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| இந்தியா........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| தமிழீழச் செய்தி ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| குகம்புச் செய்திகள்........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| உட்பக்கச் செய்தி [பொது] ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| முன் – பின் பக்கங்கள் ........ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

6. நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?
   செய்திகளுக்காக........ ☐
   இராணுவ அரசியல் ஆய்வுகளுக்காக ....... ☐
   இலக்கிய விடயங்களுக்காக ........ ☐
   வேறு விடயங்களுக்காக ........ ☐ (விபரம் குறிப்பிடவும்)........
7. நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?
   ★ தலைப்பு செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ☐
   ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப்படுத்தியில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ☐
   ★ ஈழமுரசில் நல்ல விடயங்கள் வருவதாக நண்பர்கள் சிபாரிசு செய்ததனால் ☐
8. ஈழமுரசில் இடம்பெறும் கலைந்த சொற்கள் உங்களுக்கு திருப்தியளிக்கிறதா? ஆம் ☐ இல்லை ☐
   இல்லையென்றால் காரணம் ........
9. ஈழமுரசின் கீழ்காணும் அம்சங்களில் உங்கள் கருத்தைக் குறிப்பிடுங்கள்

| | மிகச் சிறந்தது | நன்று | மோசம் |
|---|---|---|---|
| ஒட்டுமொத்த உள்ளடக்கம் ........ | ☐ | ☐ | ☐ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும்........ | ☐ | ☐ | ☐ |
| கட்டுரைகளின் மொழி நடையும் உள்ளடக்கமும்.... | ☐ | ☐ | ☐ |
| இதழின் வடிவமைப்பு........ | ☐ | ☐ | ☐ |
| முன்பின்பக்க வடிவமைப்பு ........ | ☐ | ☐ | ☐ |
| இதழின் ஆவணப்பயன்பாடு ........ | ☐ | ☐ | ☐ |

10. உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளைக் கேட்கும் வாய்ப்புண்டா?
    ஆம் ☐ இல்லை ☐
11. ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா?
    ஆம் ☐ இல்லை ☐
    விரும்பினால் – எந்த மாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடவும்........
    ........
12. ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள் ........
    ........
    ........

பெயர்: ........
வயது: 25க்கு கீழ் ☐ 25 – 35 வரை ☐ 35க்கு மேல் ☐
ஆண் ☐ பெண் ☐
முகவரி: ........
........
........ நாடு ........
தொலைபேசி இலக்கம்: ........
தொலைநகல் இலக்கம்: ........

ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்

# நாற்று

## துணிந்து வாவென் தோழா!

வயிற்றினில் தீயெரியும் – எந்த
வார்த்தையில் அது தெரியும்
வன்னி மகன் நானழுதால்
வான் மழையும் தோற்று விடும்
வாழ்வான வாழ்வு தனை
வந்த பேய்கள் அழித்தார்
வயிற்றுணவை தடுத்தெமது
வாழ்வுரிமை பறித்தார்

போரெழுச்சி கொண்ட தெங்கள்
போர்க் குணத்தை அறியார்
போர்க் களத்தில் வீழும்நேரம்
புலியின் வீரம் உணர்வார்
வல்லை மகன் தந்த – புது
வல்லமையை உணரார்
வந்து தினம் மோதி மோதி
பாடையேறிப் போவார்

எமையெரிக்க தீயை மூட்டும் – கொடும்
எதிரி வாழத் தகுமோ?
அவன் ஏவல் செய்யும் தமிழனே! – உன்
அன்னை என்ன குறையோ?
துன்பம் என்று ஏதுமில்லை – நீ
துணிந்து வாவென் தோழா!
துணிந்து நீயும் வந்துசேர்ந்தால் – தமிழ்
குனிந்து போகுமோடா?

நாக. தயாகரன்
சுவிஸ்

(தொடர்ச்சி 14–ம் பக்கம்)

# விடியலை நோக்கி...

அனுப்பி வைத்தார் திருமாலன். விபரக்குறிப்புகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் ஏற்பாடு செய்துவிட்டு திரும்புவதற்குள் பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. பாட்டாளிகள் அனைவரும் வீடு திரும்பியிருந்தனர். தோட்ட நிர்வாகம் தந்த கொந்தளிப்புடன், மேலும் ஓர் அதிர்ச்சி மாலையில் அவர்களுக்குக் காத்திருந்தது.

தோட்ட முதலாளிகள் சங்கமும் தொழிற்சங்கமும் கோரிக்கைக்கு இணங்கவில்லை என்றதும் தோட்டப் பாட்டாளிகள் வேலைக்குத் திரும்பவேண்டும் என்றும் வானொலி தொலைக்காட்சிகளில் செய்திவெளியானது. தோட்டம் முழுமையும் பரபரப்பாக இருந்தது. நாளைக்கு வேலைக்குப்போவதா? நமது போராட்டம் செத்து விட்டதா? என்ற கேள்வியே அனைவரது மனதிலும் எழுந்து அலை மோதியது.

குழப்பமான சூழலில் திருமாலன் மட்டிலும் உடனடியாக சில நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இரவு ஏழுமணிக்கு வீட்டிற்கு ஒருவராகக் கோயில் மண்டபத்தில் கூட ஏற்பாடுகள் ஆகியிருந்தன. அனைவரது முகங்களிலும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் எல்லை கடந்து காணப்பட்டன.

'நம் கைகள் ஒன்றிணைந்தால் அது மிகப்பெரிய சக்தியாகும் என்பதை நீங்கள் உணரவேண்டும். நான் இப்பொழுதுதான் தலைமையகத்துடன் தொலைபேசி தொடர்புகொண்டு வந்தேன். இன்றல்ல; நாளையல்ல. இந்தப் போராட்டம் வெற்றிபெறும்வரை இந்தப் போராட்டத்தை நிறுத்த வேண்டியதில்லை. இது உண்மை'. கைத்தட்டலும் கூக்குரலும் காதுகளை அடைத்தன. அனைவரின் முகங்கள் மட்டும் தெளிவாகவும் துடிப்புடனும் இருந்தன. திருமாலனின் குரல் கோயில் மண்டபத்தில்பட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

இன்று சூரியன் மறைந்து இருக்கலாம். நாளை மீண்டும் எழத்தான் போகின்றது. ஆயிரம் கைகளாலும் அதனைத் தடுத்து மறைத்துவிட முடியாது. அந்த விடியலை நோக்கிப் புறப்படுவோம். இன்று நாம் தோற்றாலும் வென்றாலும் எதிர்கால சந்ததியினர் நம்மைப் போற்றுவார்கள். நாம் ஏற்றிவைக்கின்ற இந்த உரிமைக்குரல், விடியலின் ஒளிவெள்ளம் நாடு முழுவதும் பரவவேண்டும்.

ஆயிரமாயிரம் நெஞ்சங்களில் நிறைந்து எழும்பிய இந்த உரிமைக்குரல் ஒரு விடியலைநோக்கி எழுந்தது.

நன்றி: செம்பருத்தி


# வல்லூறு முகவர்கள்

**1**

1981-ம் ஆண்டின் இளவேனில் மாலையின் ஒரு பொழுது. தென் தமிழீழத்தின் அக்கரைப்பற்றுக் கிராமம் அமைதியில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இந்து சமுத்திரத்தாய் அக்கரைமீது கொண்ட பற்றுதலால் தனது மேனியைத் தழுவும் இளஞ்சிதனக் காற்றினை ஊர்ப் பக்கமாக லேசாக அனுப்பிக் கொண்டிருக்கின்றாள். ஆனால் இந்த அமைதிக்கு வேட்டுவைக்கும், வேட்டை நாய்களென சீறிப் பாய்ந்து ஊருக்குள் வருகின்றன சிறீலங்கா பொலிசாரின் வாகனங்கள். புழுதியை வாரியிறைத்தபடி வந்த அவ்வாகனங்கள் மகேஷ் வீட்டின் முன்னால் கிரீச்சிட்டு நிற்கவும் கோழிக் குஞ்சினை வேட்டையாடும் பருந்தின் வெறியோடு கனத்த சப்பாத்துக்கால்கள் தடதடக்க மகேஷின் வீட்டினுள் பாய்கின்றன சீருடைகள்.

மகேஷ், 83 இன் ஜூலை படுகொலைகளையடுத்து ஈரோஸ் அமைப்பில் தன்னை முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொண்டவன். மகேஷ் மணமானவன். மூன்று அன்புச் செல்வங்கள்கூட அவனுக்கு உண்டு. ஆயினும் விடுதலை உத்வேகத்தால் 'அமைப்பில் இணைந்து கொண்டவன். ஆரம்பத்தில் மகேஷின் நடவடிக்கைகள் பற்றி ஊருக்கு அவ்வளவாகத் தெரியாவிடினும் அவனது பேச்சுக்களின் தீவிரம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே தெரியவர ஊரின் 'கருங்காலி' ஒருவன் இதுபற்றி பொலிசாருக்கு அறிவித்துவிட்டான். வெறியோடு அவன் வீட்டின்மேல் பாய்கிறது பொலிஸ் கும்பல்.

கருங்காலி கொடுத்த துப்புத் தவறவில்லை. பொலிஸ் முற்றுகைக்குள் மகேஷ் சிக்கிவிட்டான். வெற்றி எக்காளத்தோடு வெறித்தனம் கண்களில் பளிச்சிட மகேஷினை தரதரவென இழுத்துக் கொண்டு வருகின்றது பொலிஸ் கும்பல். மகேஷின் அன்பு மனைவியும் அவன் செல்வங்களும் கதறியழ எக்காளத்தோடு அவர்களை எட்டி உதைத்த பின்னர், மகேஷிற்கு விலங்குகளைமாட்டி வல்லூர்தி (ஜீப்) ஒன்றினுள் அவனை வெறிகொண்டு தள்ளுகிறான் பொலிஸ் அதிகாரி ஒருவன். சீறிப்பாய்ந்து கடற்கரைப்பக்கமாக செல்கிறது அந்த வாகனம்.



வெறிச்சோடிக் கிடக்கும் ஒதுக்குப்புறமான கடற்கரைப் பகுதிக்குள் பொலிஸ் வாகனம் நுழைந்து நிற்கின்றது. தான் சின்ன வயதில் ஓடி விளையாடிய அதே கடற்கரை மணலில் முகங்குப்புற உருண்டு விழுகின்றான் மகேஷ். அதன் பின்னர் பொலிஸ் அராஜகம் விரிகின்றது. கடலலைகளின் ஓசையினையும் மீறி மகேஷின் ஓலம் எழுகிறது. காக்கி ஓநாய்கள் அவனது வலது காலினை நிரந்தரமாகவே ஊனமாக்கிவிடுகின்றன. அதன் பின்னர் மட்டக்களப்பு சிறையில் மூன்று மாதங்கள் அடைக்கப்பட்ட பின்னர், பூசா முகாமிற்கு மாற்றப்படுகின்றான். கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் அவனுக்கு பூசாவில் கிடைத்த அனுபவங்கள் கொடுமையிலும் கொடுமை! ஊனமானவன் என்ற ஒரு அனுதாபம் கூட சிங்கள சிறை அதிகாரிகளிடம் கிடைக்கவில்லை.

இந்திய-சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும், பூசாவிலிருந்து நடைப்பிணமாக விடுதலைபெற்று வருகிறான் மகேஷ். தனது அன்பு மனைவியையும் செல்வங்களையும் பார்க்க அக்கரைப்பற்றுக்கு சென்றவனுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் மாகாண ஆட்சி அராஜகம் துரத்துகிறது.

யாழ்ப்பாணம் போனால் இந்த அராஜகத்திலிருந்து தப்பலாம் என நினைத்து தனது பழைய நண்பர்களிடம் வருகின்றான். ஆனாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ். காரர்கள் விடவில்லை. எனவே மீண்டும் அக்கரைப்பற்றுக்குச் செல்கிறான். மகேஷிற்கு வைக்கப்பட்ட குறியும் தொடர்கிறது. அவனைக் கொலை செய்து வீசிவிட கூலிப்படைகள் துடிக்கின்றன.

தனது கணவன் படும் அவலத்தினை பிரான்சிலிருக்கும் தனது தம்பிக்குத் தெரியப்படுத்தும் மகேஷின் மனைவி, தனது கணவனை எப்பாடு பட்டும் பிரான்சிற்குக் கூப்பிடுமாறும் கேட்டுக்கொள்கிறாள். பிரான்சின் உணவு விடுதியொன்றில் ராஜா பணிபுரிந்தாலும் அவனது அன்பு அக்காவின் தாரம் அவனை நிம்மதியாக வேலையைச் செய்ய விடவில்லை.

சுமார் 5 இலட்சங்கள் மோபி என்ற முகவரிடம் கைமாறுகின்றன. கொழும்பிலிருந்து உக்ரேனுக்கு வந்து சேர்கின்றான் மகேஷ். அதன் பின்னர்தான் அவனுக்கு மேற்றுலகப் பயணத்தின் அவலநிலை புரிகிறது. நேசித்த மண்ணை விட்டு புறப்பட்டது எவ்வளவு பெரிய தப்பு என்பதும், அவனுக்கு அடிக்கடி நினைவிற்கு வந்து வலித்தது. என்ன செய்வது; நாட்டிலும் நிம்மதியாய் இருக்க முடியாத சூழல். தனக்கு கூலிப்படைகளால், அவலமாக ஏதாவது நேர்ந்தால் தனது அன்பு மனைவியும் மூன்று பிள்ளைகளும் தவித்துப் போய்விடுவார்களே என்று எண்ணிய அவன் மனம், வெளிநாட்டிற்கு வெளிக்கிட்டதில் அவர்களுக்காவது ஆறுதலைக் கொடுக்க முடிந்ததே என தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டது. விரைவில் உழைத்து அவர்களையும் கூப்பிட்டு விடவேண்டும் என்று அவன் மனது இடைக்கிடை திட்டத்தையும் தீட்டிக்கொண்டது. ஆனால் தனக்கு நடக்கப்போகும் கொடூரம் பற்றி அப்போது அவனுக்குத் தெரியவேயில்லை.

# மூடப்பட்ட கொள்கலன்களில் மூச்சுத் திணறிமாண்ட 17 தமிழர்கள்




உக்கிரேனில் அவன் தங்கியிருந்த வீட்டிலே தங்கியிருந்தோரில் அநேகமானோர் இளவயதினராகையால் மகேஷ் மீது அவர்கள் ஒருவிதமான பாசத்தினைக் காட்டினர். சிறீலங்காப் படையினரின் கொடூரத்திற்கு தனது காலினை இழந்தவன் என்பதால் பையன்கள் அவன் மீது ஒரு பச்சாதாபத்தினையும் கொண்டிருந்தனர். அத்துடன் மட்டக்களப்பு, பூசா சிறை அனுபவங்களையும் அவ்வப்போது அவனிடம் கேட்டுத்தெரிந்து கொள்வதிலும் பையன்களுக்கு மிகுந்த ஆர்வம். மகேஷிற்கு இருந்த குடும்ப கவலையினிடையே பையன்களின் அன்பு ஒருவித ஆறுதலைக் கொடுத்ததென்னவோ உண்மைதான். இலட்சங்களை வேண்டிய முகவரும், அவனது உப முகவர்களும் அவ்வப்போது வந்து எட்டிப்பார்ப்பதுடன் நின்றுவிடுவார்கள். எப்போதுதான் பிரயாணம் என்பது பற்றி யாருக்கும் தெரியவில்லை.

முகவரிடம் அதுபற்றி கேட்டுக் கேட்டே அலுத்துவிட்டது. ஒரு நாள் திடீரென வந்த முகவர் தரைப்பாதையூடாக அனைவரையும் தான் ஜேர்மனிக்கு அனுப்பி வைக்க உசிதமான திட்டம் வகுத்துவிட்டதாகத் தெரிவித்தான். அதனைக்கேட்ட அனைவருக்கும் எமக்கு விடிவுகாலம் வந்துவிட்டதென்ற மகிழ்ச்சி. அப்பிரயாணம் எப்படி அமையும் என்பதைப்பற்றி அவன் அப்போது வாயைத் திறக்கவில்லை. அவனது திட்டம் இவர்கள் அனைவரையும் சரக்கு வாகனமொன்றில் ஏற்றி அனுப்புவதாகத்தான் இருந்தது. ஆனால் அதனை அப்போது அவன் அதைத் தெரியப்படுத்தவில்லை. தெரியப்படுத்தினால் நிச்சயம் தனது திட்டத்திற்கு எதிர்ப்புக் கிடைக்கும் என்பதும் தெரியும்.

சரக்கு வாகனத்தின் ஆட்களைக் கடத்துவது இலேசான விடயமல்ல. இவ்வாறான ஆட்கடத்தல் இரு வகைகளில் நடைபெறும். முதலாவது வகை, முகவர்களே சரக்குவாகனங்களை ஏற்பாடு செய்து அதன் சாரதிகளுக்குப் பெருந்தொகையான பணத்தினைக்கொடுத்து ஆட்களைக் கடத்துவது. இரண்டாவது வகை, மிகவும் நுட்பமானது. நாடுவிட்டு நாடுசெல்லும் சரக்குவாகனங்கள் இடையிடையே குறிப்பிட்ட சில இடங்களில் தரித்து நிற்பது வழமை. சாரதிகள் உணவருந்துவதற்காகவும், ஓய்வெடுப்பதற்காகவும் அவ்வேளை பயன்படும். இந்த இடங்களை குறிப்பாகத் தெரிந்துவைத்துக்கொள்ளும் முகவர்கள் சாரதிகள் ஓய்வெடுக்கும்போதோ அல்லது உணவருந்தும்போதோ அவர்களது வாகனங்களை அவர்களுக்குத் தெரியாமலே உடைத்துத் திறந்து அதற்குள்ளே ஆட்களை ஏற்றிவிடுவார்கள். இந்த ஆட்கடத்தல் பற்றி ஒன்றுமே தெரியாத சாரதி மீண்டும் தனது பயணத்தைத் தொடங்குவான். தனது சேருமிடத்தை அடைந்து அங்கு வாகனத்தின் சரக்குக் கொள்கலனை திறக்கும்போது தான் அவனுக்கு நடந்த விடயம் தெரியவரும். ஆனால் கடத்தப்பட்டவர்களுக்கோ அது வெற்றிகரமாக அமைந்துவிடும். ஏனெனில் வாகனக்கதவுகள் திறக்கப்படும் இடங்கள் பெரும்பாலும் அவர்கள் நாடிவந்த நாடுகளாகத்தான் இருக்கும். ஆனால் இத்தகைய பிரயாணத்தில் மிகவும் அபாயமுண்டு. அவசரத்தில் கொள்கலனில் என்ன சரக்கு இருக்கின்றதென்பதைப் பார்க்காமலேயே முகவர்கள் ஆட்களை ஏற்றிவிடுவார்கள். பயணிகளும் அதுபற்றி அறிவதில் உடனடியாக ஆர்வம் காட்டமாட்டார்கள். எப்படியாவது போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்ற ஆவல் அவர்களது கண்களை அப்போது மறைத்துவிடும். உதாரணமாக இரசாயனப் பொருட்களை ஏற்றி வந்த ஒரு சரக்குக் கொள்கலனுள் ஆட்கள் ஏற்றப்பட்டால் நேரம் செல்லச்செல்ல உள்ளே இருப்பவர்களுக்கு மரணவேதனை ஆரம்பித்துவிடும். மூடப்பட்ட கொள்கலன்களில் சுவாசிப்பதற்கு சுத்தமான காற்று இல்லாமல் மூச்சுத் திணறலும் ஆரம்பித்துவிடும். இதைவிட வாகனத்தைச் செலுத்தும் சாரதிக்கு உள்ளே மனித உயிர்கள் இருப்பது தெரியாததால் அவனது வாகனத்தின் வேகக் கட்டுப்பாட்டில் கவனமும் இருக்காது. இவ்வேளைகளில் அவசரமாக (பிரேக்போட்டு) அவன் வாகனத்தை நிறுத்தினால், உள்ளே இருப்பவர்கள் கொள்கலன் சுவரோடு பலமாகப்போய் மோதுண்டு விழவேண்டிய சந்தர்ப்பங்களும் நேரிடும். இத்தகைய சந்தர்ப்பங்களில் மண்டை உடைந்த நிலையில் குற்றுயிராக மீட்கப்பட்ட தமிழர்களும் உண்டு.

மகேஷினை அனுப்பிய முகவர் முதலாவது முறையிலேயே பயணிகளை அனுப்பத் திட்டமிட்டான். பயணத்தூரம் மிக நீண்டதாக இருந்ததால் இரு கொள்கலன் வாகனங்களின் சாரதிகளுக்கு பணத்தினைக் கொடுத்து பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டான். குறிப்பிட்ட தினம் வந்ததும் பிரயாணம் ஆரம்பமானது. மூடப்பட்ட கொள்கலன்களில் பிரயாணம் செய்வதென்னவோ பயணிகளுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் வேறு மார்க்கமில்லாததால் புறப்படச் சம்மதித்தனர். மகேஷ் ஏற்றப்பட்ட கொள்கலனில் மொத்தமாக 17 பேர் இருந்தனர். மற்றைய கொள்கலனில் மிகுதிப் பேர் ஏற்றப்பட்டனர். உக்கிரேனில் இருந்து ருமேனியாவை நோக்கி வாகனங்களின் பயணம் ஆரம்பமானது. ஜூலை மாதம் ஆனதால் கடுமையான வெப்பம் அப்போது நிலவியது. இந்த வெப்பம்தான் தமது உயிர்களைக் குடிக்கப் போகின்றது என்பது பற்றி எதுவும் அறியாததாக அந்த அப்பாவிகள் அந்த இருண்ட கொள்கலன் சுவர்களை வெறித்துப் பார்த்தவாறு அமர்ந்திருந்தனர்.

வாகனம் அடுத்த நாடான ருமேனியாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

**உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு**

(துயரப் பயணம் தொடரும்)

- வேம்பு

# தமிழர் நடந்த பாதை


## 3

ஆரிய மொழிகளை மேலை ஆரியம்; நடு ஆரியம்; கீழை ஆரியம் என மூன்றாகப் பாவாணர் பிரிப்பார். செலத்தியம் (Cealtic), இத்தாலியம் (இலத்தீனம்) இயூத்தானியம் (செருமானியம்) தொக்காரியம், எல்லெனியம் (கிரேக்கம்) என்பன முதல்வகை.

பாலத்தியம் (Baltic)சிலாவோனியம், அல்பானியம், அர்மீனியம், இத்தைத்தம் (Hittic) என்பன அடுத்த வகை.

ஈரானியம் (பாரசீகம்) இந்திய ஆரியம் என்பன கடைசி வகை.

செருமன் (German) டச்சு (Dutch) ஆங்கிலம் (English) ஆகிய மூன்று ஆரிய மொழிகளும் இயூத்தானியம் என்னும் மேலையாரியக் கிளையில் அடங்கும். இம்மூன்றோடு நெருக்கமான உறவுடையதே, இந்திய ஆரியர் மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முன் இந்தியா வந்தபோது பேசிவந்த சமற்கிருதத்தின் முந்து முளையாகவுள்ள ஆரி



யம்! செருமனில் வாழ்ந்த ஆரிய வகுப்பினர் பலருள் சுடல் (Jutes) சாக்சானியர் (Saxons) ஆங்கிலர் (Angles) என்னும் மூவகுப்பினர் கி.மு. 449 இல் செருமனியிலிருந்து குடிபெயர்ந்து பிரித்தானியாவிற்குள் நுழைந்தனர். அவர்களே இன்றைய ஆங்கிலம் பேசும் பிரித்தானியர்.

ஆங்கிலத்தில் புழங்கும் சொற்கள் பல, செருமானிய மொழியிலும் டச்சு மொழியிலும் சமற்கிருத மொழியிலும் கலந்துள்ளன. இதற்குக் காரணம் இவையாவும் ஒரு குடும்ப மொழிகளாக இருப்பதே.

பின்வரும் சொற்கள் யாவும் ஆங்கிலம், செருமன், டச்சு, சமற்கிருதம் ஆகிய நான்கனுக்கும் பொதுவென் பார் பாவாணர்.

| ஆங்கிலம் | சமற்கிருதம் | ஆங்கிலம் | சமற்கிருதம் |
|---|---|---|---|
| Brother | பிரதா | Nose | நாசி |
| Common | சாமானியம் | Person | புருஷன் |
| Creat | சிருஷ்டி | prime | பிரதமம் |
| Daughtor | தௌஹித்ரி | preacher | புரோகிதர் |
| Eight | அஷ்டம் | Science | சாஸ்திரம் |
| idea | ஐதிகம் | Shaving | க்ஷவரம் |
| ignorance | அஞ்ஞானம் | Special | விசேஷம் |
| ignitlous,ignis | அக்னி | sevan | சப்தம் |
| Madiator | மத்யஸ்தர் | Serve | சேவி |
| Name | நாமம் | two | த்வா |
| Three | த்ரி | That | தத் |

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளைப்போல் மேலும் பலப்பல எடுத்துக்காட்டுகளை ஆங்கில வேர்ச்சொல் அகராதிகளில் காணலாம்: சமற்கிருதத்தின் மூல மொழியாகிய இன்றைய கீழையாரியம் கொண்டுள்ள சொற்கள், பல மேலை ஆரிய மொழிகளோடு உறவுடையன வாய் இருப்பதை ஆங்கில வேர்ச்சொல் அகராதி மேதை, கீற்றின் (Skert) ஆய்வினின்று சில காணலாம்.

End, (E) E.E. ende. (A.S. Ende D.V.Einde), Icel.endi, S.W. ande. Dan. ende, Goth. andeis, G. ende. Skt. anta, end. limit.

heart M.E herte, A.S heorte. Du.hart, Icel, hjarta, swed. hjerta, Dan. hlerta, Goth. hairto. G. herz Irish.Cridhe, Russ. Serdtse. L, cor (crude form of cordit) skt. hrid, hridaya.

Nose M.E. nose A.S. nosu + Dv.neus, Icel, nos. Dan. noese, swed. nasa, G. nasc. Russ, nos Lithuan. nosis L. nasas, skt, nasa.

Raw M.E raw. A.S hreaw. hraew. Du. raauw, icel, hrar, dan. raa. G. roh, Allied to L. crodus. raw, Skt. krura, sore, cruel, hard.

மைய ஆசியாவே ஆரியர்களின் தாயகம் என்றும், அங்கு ஆரியர்கட்கு ஏற்பட்ட உணவு நெருக்கடி போன்றவற்றால் அவர்கள் மேற்கும் கிழக்குமாக வாழ்வுதேடிப் பிரிந்தார்கள் என்றும், அவர்களில் ஒரு கூட்டமே இந்திய ஆரியப் பார்ப்பனர்கள் என்றும் பண்டித நேரு குறிப்பிடும் வரலாற்றுச் செய்தி உண்மையாகவே தெரிகிறது.

'There must have been enormous numbers of these aryan peoples in central asia, and not finding there enough food for all. they spreadout to other countries they went on large numbers to perslia, and even to greece, futher west. they also came to india in crowds over the mountains near kashmir'

* * *

மைய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் கி.மு 1500-ம் ஆண்டளவில் இந்தியாவிற்குள் புகுந்தனர் என்பது வரலாற்றறிஞர்கள் பலரும் கூறும்செய்தி. ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது திராவிடர்கள் இந்தியா முழுவதும் பரவியிருந்தார்கள் என்பதும் பலரால் சொல்லப்படும் உண்மை. இதற்குமேல் திராவிடர்களைப் பற்றி வரலாற்றறிஞர்கள் கூறும் பிறிதொரு செய்தியையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டியுள்ளது. திராவிடர்களும் ஒரு காலத்தில் அதாவது, ஆரியர்கள் வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பு வெளியிலிருந்து இந்தியாவிற்கு குடியேறியவர்கள் என்பதே அது. பெரும்பாலான அறிஞர்கள் கருத்தாக இது உள்ளது.



**பேரா.கு.அரசேந்திரன்**

தமிழ், தமிழர் வரலாற்றில் பெருமதிப்பிற்குரியவராகப் போற்றப்படும் டாக்டர் கால்டுவெல் அவர்களே தமிழர்கள் வந்தேறியவர்கள் என்னும் கருத்தினராவர். 'திராவிட இனத்தவர் வரலாற்றுக் காலத் தொடக்கத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர் என்றாலும், அவர்கள் ஒரு காலத்தில் உலக மக்களினத்தின் பிறப்பிடம் என்று கருதப்படும் மத்திய ஆசியாவில் வாழ்ந்திருந்தவரே என்றும், அங்கு தம்மோடு வாழ்ந்திருந்த ஆரியர், உக்ரேனியர், துரானியர் ஆகியோரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு பிறப்பிடத்தை விட்டுப்பிரிந்து தென்திசை நோக்கி நடந்து இடை வழியில் பலூசிஸ்தானத்தில் தம் இனத்தவர் சிலரை வாழவிடுத்து, சிந்து நதியைக்கடந்து இந்தியா வந்து சேர்ந்தனர் என்றும் நம்மைக் கருதச் செய்கிறது' இது டாக்டர் கால்டுவெல்லின் கூற்று.

மொழியாய்வுப் பேரறிஞராகிய டாக்டர் கால்டுவெல், மைய ஆசியப்பகுதியில் வழங்கும் 'சுசியம்' என்ற மொழியோடு திராவிட மொழிக்கு உறவிருக்கிறது என்று கண்டறிந்தார். இதனை மனங்கொண்ட வரலாற்றுப் பேரறிஞர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் நமக்கொரு புதிய செய்தியைத் தருகின்றார். சுசியமொழிபேசும் அம்மக்கள் தங்களைத் 'த்ரிம்லைகள்' என்று கூறிக்கொண்டார்கள் என்றும் பின் அச்சொல்லே த்ரிம்லை—த்ரமிளம் தமிழ் எனத்திரிந்தது என்கின்றார். இது ஓர் வியப்புச் செய்தியாகும்.

திராவிடர் நாகரிகம் என்று சிந்து சமவெளி நாகரிகத்தை அறிஞர்கள் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் பாபிலோனிய எகிப்திய சுமேரிய நாகரிகத்திற்கும் நெருக்கமான உறவு இருந்திருக்கிறது. கி.மு. 3000 ஆண்டளவினதாகக் கொள்ளப்படும் சிந்து சமவெளிநாகரிகம் கி.மு. 5000 ஆண்டளவினதாகக் கருதப்படும் எகிப்திய சுமேரிய நாகரிகத்திலிருந்து பிறந்தது என்பது வரலாற்றறிஞர்கள் கருத்தாக உள்ளது.

(வளரும்)



# நோயற்ற வாழ்வே...

## சில சந்தேகங்களும் விளக்கங்களும்

● முதல் பிரசவம் அறுவை முறையில் நடந்தால் அடுத்த பிரசவமும் அறுவைமுறையில்தான் நடக்குமா?

➲ அடுத்த பிரசவம் இயற்கையான முறையிலா? அறுவைச் சிகிச்சை மூலமாகவா என்பதனை பல விடயங்கள் நிர்ணயிக்கின்றன. முதல் குழந்தை அறுவைச் சிகிச்சை மூலமாக பிறப்பதற்கு என்ன காரணமோ? அதே காரணம் அடுத்த பிரசவத்திலும் இருந்தால் அதற்கு அறுவைச் சிகிச்சைதான் தேவைப்படும். மற்றையபடி அறுவைச் சிகிச்சை தேவைப்படாது. கற்ப காலமும் பிரசவ வேதனை நேரமும் ஆரோக்கியமாக அமையவும் பட்சத்தில் இயற்கைப் பிரசவம் நேரிடலாம். ஆனால் பிரசவத்தின் போது எதிர்பாராத சிக்கல்கள் தோன்றினால் அறுவையினைத் தவிர்க்கமுடியாது.

● கருவில் வளரும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை நிர்ணயிப்பது தந்தையின் விந்து அணு என்பது உண்மையா?

➲ குழந்தையின் பாலினை நிர்ணயிப்பதன் முழுப்பொறுப்பும் தந்தையைச் சாரும் என்பது உண்மைதான். தந்தையின் விந்தில் X அல்லது Y என்ற இரண்டு வகையான குரோமோசோம்கள் காணப்படும். பெண்ணின் கருமுட்டை XX என்ற குரோமோசோம்களை மட்டுமே கொண்டிருக்கும். ஆணுடைய பெண் X குரோமோசோம் பெண்ணின் X குரோமோசோமுடன் இணைந்தால் உருவாகும் குழந்தை பெண்ணாக இருக்கும். ஆணினுடைய Y குரோமோசோம் பெண்ணின் X குரோமோசோமுடன் சேர்ந்தால் ஆண் குழந்தை உருவாகும். பிறக்கும் குழந்தை எந்தப் பாலாக இருந்தாலும் அதற்கு முழுக் காரணம் தந்தை மட்டுமே.



● கணினியில் தினமும் ஆறு மணிநேரத்திற்கு மேல் வேலை செய்தால் கணினியில் இருந்து புறப்படும் கதிர்வீச்சு உடல் நலனுக்கு ஆபத்து விளைவிக்குமா?

➲ கணினியின் வீடியோ டிஸ்பிளே பகுதியில் இருந்து வெளிப்படும் மின்காந்தக் கதிர்வீச்சு ஆரோக்கியத்திற்கு ஆபத்தா என்பது பற்றி எதிரும் புதிருமான கருத்துக்கள் நிலவி வருகின்றன. கருவுற்ற பெண்களுக்கு இக் கதிர்வீச்சு ஆபத்தானதென்றுகூட தெரிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் வெளியான ஆய்வுகள் இவ்வாறான கதிர்வீச்சானது உடல் நலத்திற்கு ஆபத்து விளைவிக்கும் என்பதற்கு போதிய ஆதாரமில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறது. ஆயினும் இதுவும் இறுதியான முடிவல்ல. கணினியின் திரையில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி அமரமுடியுமோ அவ்வளவு தூரத்திற்கு தள்ளி அமருவது ஓரளவு பாதுகாப்பானது தான்.


● மார்பகங்களில் தோன்றும் சதைப்பற்றான கட்டிகள் எல்லாம் புற்று நோயின் அறிகுறியா?

➲ 66 சதவீதமான முலைப்புற்றுநோய்க் கட்டிகளில் வலி இருப்பதில்லை. அத்துடன் மார்பகத்தின் மேற்பகுதியில்தான் இக் கட்டிகள் அதிகமாகத் தோன்றுகின்றன. நிணநீர் சுரப்பு முடிச்சுக்கள் கட்டியாகி ஒட்டிக்கொண்டிருப்பதால் அது புற்றுநோயாக இருக்குமோ என்ற ஐயம் பலருக்கு ஏற்பட்டுவிடுகின்றது. இவ்வாறான கட்டிகளை அடிக்கடி தொட்டுப்பார்த்து அமுக்குவதைத் தவிர்க்கவேண்டும். நல்ல மருத்துவரை அணுகி தோன்றும் கட்டியின் வகையறிந்து அதற்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.


**அம்பாள் வாகன சேவை**

**AMBAL TRANSPORT**

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு



ஜெயம்:
26, Rue Perdonnet, 75010
Paris.
Mo: La Chapelle
Tel: 06 03 84 02 29 / 06 10 38 44 92 / 06 84 57 21 77


காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது

# பார் உலகு பரந்து கிடக்கிறது

**'துயரம் நமது இறகுகளைப் பலப்படுத்துகிறது.**
**கோபம் நமக்கு வலிமை சேர்க்கிறது'**

காற்றின் மீது நான் ஓர் கவிதை எழுதவேண்டும். வான்மீதும், வெளிமீதும் என்பாடல் இசைக்கப்படவேண்டும்.

நான் நீராய் இருந்தேன். நெருப்பாய் ஆனேன் என்ற சேதி ஊரெங்கும் அறையப்படவேண்டும்.

என் மண் மீதும், நான் திரிந்த மலைமீதும், ஏறிநின்ற சிகரம் மீதும் என் ஓர்மம் என்னவென்று உரைக்கப்படவேண்டும்.

**நான் ஆனேன் கடினமான இரும்பாக...**
**நான் ஆனேன் வலியதான மரமாக...**
**நான் ஆனேன் சிதறமுடியா வைரமாக...**
**நான் ஆனேன் உடைக்க முடியாப் பாறையாக.**

எனக்கு வலிது சேர்த்தது என் உணர்வு.
எனக்கு வலிமை சேர்த்தது என் உரிமை.
உரமுடன் நான் ஊன்றி நின்றது என் உயிரில்.
உறுதியாகி நான் நிலைத்து நின்றது என் உடலில்.

ஒரு காலம் இருந்தது. அப்போது நான் கூனிக்குறுகினேன். கும்பிட்டு நான் நின்றேன்.

நான் என்னை நம்பவில்லை. வாழ்வேன் என்று எந்த வலிமையான சொல்லும் என் செவிக்கு எட்டவில்லை. வீழ்வேன்; வீழ்ந்தழிந்துபோவேன். அப்படித்தான் நான் நினைத்தேன்.

என் கால்களின் கீழ் இடறுப்பட கற்கள் நிறையக் கிடந்தன. என் வழி முட்களால் நிரப்பப்பட்டது. நான் முன்னேறுவதற்கு எந்தப் பாதையும் எனக்குப் போடப்படவில்லை. இருக்கும் பாதையும் அடைக்கப்பட்டிருந்தது. அப்படித்தான் நான் அப்போ நினைத்தேன்.

என்னைச் சுற்றிச் சூழ சுவர் எழுப்பப்பட்டன. காற்றுப் புக முடியாதபடி கடினமான தடுப்பு அமைக்கப்பட்டது. எங்கு திரும்பினாலும் இருள். இருள்வெளி அன்றி வேறொன்றும் நான் கண்டதில்லை.

தோற்றுத்தான் போவேனா என்று துயரடைந்தேன். திரும்பும் பக்கமெல்லாம் என்னைக் காயப்படுத்த களைகளிடையே நிகழ்ந்தன. அழியத்தான் போறேனா? இனி ஆவதற்கு வழியில்லையா? என்று ஆதங்கப்பட்டேன்.

வாழ எழ வகையறியாது தவித்தேன். வெறுப்பு உமிழும் பார்வை, வீசியெறிந்த சொல்நெருப்பு இவை என்னைச் சுட்டன. பொசுக்கின.

நான் தனிமையில் கிடந்து நொந்தேன். நாதியற்றுத் தவித்தேன். அல்லல் உற்றுத் திரிந்தேன். அவதிப்பட்டுக் களைத்தேன்.

காலைப்பொழுது எனக்குக் கனத்த இருள் ஆயிற்று. மாலைப்பொழுது வந்தாலோ அது மங்கல் பொழுதாயிற்று.

வேளைவராதோ என்று வேதனையில் விம்மினேன். விடிகாலம் பிறக்காதோ என்று ஏங்கித் தவித்தேன்.

நான் பட்ட துயர்களோ பதினாறுகோடிபெறும். நான் கெட்டழிந்துபோன விதங்களோ கணக்கில் இருக்கவியலா. முட்டிமோதி, முகம் பொத்தி விம்மி, வெம்பி, வெடித்துச்சிதறி அழுத வகைகளோ எட்டுத்திக்கும் தெரியும்.

**என் இரவுக்கு நிலவில்லை.**
**என் மலருக்கு மணமில்லை.**
**என் உணர்வுக்கு உயிரில்லை.**
**என் உறவுக்கு உயிர்ப்பில்லை.**
**என் வாழ்வுக்கு வலிமையில்லை.**
தூரத்திலும் எனக்கோர் ஒளியில்லை.

சொல்லுக்குள் அடங்காச் சோகத்தைச் சற்றே கேள். நில் என்று நெருஞ்சி முட்கள் கையை நிறுத்தி வழிபோன கதைகேள்.

பனையின் உயரம் பார்த்து பிரமித்தேன். அடடா, இது வானத்தை தன்கையால் அள்ளி எடுத்துவிடுமே என்று வியந்தேன். இதற்கும் மேலாக நானும் உயர இயலாதோ என்று தவித்தேன்.

சொல்வதைக்கேள். சற்றே அதுபோலத்தான் இதுவும். நானோர் சிட்டுக்குருவியைப் பார்த்தேன். அது வானவெளியைப் பறந்து திரிந்தது. பசித்திருந்தபோது பழம் உண்டது. பின்னும் கட்டுக்காவல் இன்றி, விட்டுவிடுதலையாகி, சிட்டுக்குருவி தன் வாழ்வைச் சுகித்தது. நான் அதனைப் பார்த்து மிகப் பிரியப்பட்டேன். அட, நானும் அப்படி ஆவேனோ என்று ஏங்கித் தவித்தேன்.

சிட்டுக்குருவிக்கும் வாழ்வில் சிக்கல்கள் இருக்குமே.

**பழுத்த மரங்கள்**
**பழகிட ஒரு துணை**
**பதுங்கவோர் மறைப்பு**
**பாதத்திற்கோர் கூடு**
**பருந்துகளில்லாத வானம்.**

இந்த வாழ்விற்காகவும் சிட்டுக்குருவி ஏங்குமே!

ஏங்காத வாழ்வு எவருக்கு இருக்கப்போகின்றது- தூங்காத இரவும், துடித்தெழ வைக்கும் உணர்வும்- நீங்காது மனிதரிடம்-நிச்சயம் இருக்கும். எனினும் இதனை மிஞ்சியதுதானே வாழ்வு. எனவே வாழ்தலில் உயிர்ப்பு எழ வேண்டினேன்.

சும்மா நான் சோற்றுக்காய் வாழ்வதில் அர்த்தம் போயிற்று. பனையும், சிட்டுக்குருவியும் எனக்குப் பாடம் தந்தன. இனிக்குனியமுடியாது. வீழ்ந்தழிந்துபோக இயலாது. வாழ்வை வெல்வது, அதன் சிகரத்தை அடைவது-அதுவே என் இலக்காய் இருந்தது.

ஒரு கதையினை இந்த இடத்தில் ஞாபகம் கொள்கின்றேன்.

தற்கொலை செய்வதற்கு ஒருவன் பல வழிகளில் முயன்றான். ஒருவழியும் தென்படவில்லை. இறுதியாகப் பலமாடிகள் கொண்ட உயரமான கட்டத்தில் ஏறி அதன் உச்சிக்குச் செல்கிறான். குதிப்பதற்கு ஆயத்தமாக உச்சியிலிருந்து கீழே பார்க்கிறான்-அவன் பார்வையில் கண்ட காட்சிகள்...

வாழ்வதற்காக உலகம் என்ன அழகாக இயங்குகின்றது. வாகனங்கள் ஓடுகின்றன. வாழ்வின் வெற்றியை நோக்கி மனிதர்கள் திரிகின்றனர். வாழ்வின் முன்னேற்றத்தைநோக்கி உலகம் அசைகின்றது. வாழ்வின் இருப்பை உணர்ந்த பறவைகள், மிருகங்கள், பார்ப்பன யாவும்-வாழ்விற்காகப் போரிடுகின்றன. வாழ்தலிற்காகப் போரிடுகின்றன. வீழவும், அழியவும் எந்த உயிரும் விரும்பவில்லை. வாழவும், எழவுமே அனைத்தும் வலிதுடன் போரிடுகின்றன.

குதிப்பதற்கு-தற்கொலை செய்து கொள்வதற்கு முயன்ற அவன் இதனைக் கண்டான். குதிக்கவில்லை, தற்கொலை செய்துகொள்ளவில்லை. கீழிறங்கினான். இந்த உலகில் ஒருவனாய் கலந்தான்.

**எதையும் எதிர்கொள்**
**முகம் திருப்பாதே**
**மனம் சலிக்காதே.**
**எதையும் எதிர்கொள்**
**எதிர்ப்பில் முகம்கொள்**

காலம் துயர்களைத் தருகின்றது. காற்று புயலென வீசுகின்றது. மலையோ மாட்டேன் என எதிர்த்து நிற்கின்றது. கடலோ உயிர்களைக் காவுகொள்கின்றது. ஆறோ பெருக்கெடுத்து அழிக்கின்றது. இயற்கையோ நம்மை இந்தவிதமாய் வஞ்சிக்கின்றது; வதைக்கின்றது.

எனினும் எதற்கும் மனிதர் கலங்கார். எதிர்த்து நின்று வெல்வார்.

**எறிகின்ற கடல் என்று**
**மனிதர்கள் அஞ்சார்**
**எது வந்தபோதெனின் என்ன**
**அதை வென்று செல்வார்.**

செல்பவரே மனிதர்-எதையும் எதிர்த்து நின்று வெல்பவரே மனிதர்.

இப்போது சொல்கிறோம்

என் கால்களின் கீழ் கற்கள் இருந்தனவா? என் வழி முட்களால் நிரப்பப்பட்டனவா? என்னைச் சுற்றிச் சூழ சுவர் எழுப்பப்பட்டதா? தோற்றுத்தான் போவேனா என்று துயரடைந்தேனா? அழியத்தான் போகிறேன் என்று அவலப்பட்டேனா?

என் இரவுக்கு நிலவில்லையா? என் மலருக்கு மணமில்லையா? காலைப்பொழுது கனத்த இருளா? மாலைப்பொழுது மங்கல் பொழுதா? தனிமையுற்று நான் நொந்தேனா? நாதியற்று நான் தவித்தேனா?

அத்தனையும் நாங்களாக ஆக்கிக்கொண்டவை.

புறச்சூழல் மாத்திரம் காரணமல்ல; அகச் சூழலும் அதற்குக் காரணம். நமது மனமே பல பிரச்சினைகளுக்குக் காலாகின்றது, காரணமாகின்றது.

நம்மை நாமே வெல்லப்பழகுவோம்.

மீண்டும் முதலிலிருந்து.....

துயரம் நமது இறகுகளைப் பலப்படுத்துகின்றது. கோபம் நமக்கு வலிமை சேர்க்கின்றது.

காற்றின்மீது நான் ஒரு கவிதை எழுதவேண்டும். வான் மீதும், வெளிமீதும் என்பாடல் இசைக்கப்படவேண்டும்.

நான் நீராய் இருந்தேன்; நெருப்பாய் ஆனேன் என்ற சேதி ஊரெங்கும் அறையப்படவேண்டும். என் மண் மீதும், நான் திரிந்த மலை மீதும் ஏறிநின்ற சிகரம் மீதும் என் ஓர்மம் என்னவென்று உரைக்கப்படவேண்டும்.

**நான் ஆனேன்**
**கடினமான இரும்பாக!**
**நான் ஆனேன்**
**வலியதான மரமாக!**
**நான் ஆனேன்**
**சிதறமுடியா வைரமாக!**
**நான் ஆனேன்**
**உடைக்க முடியாப் பாறையாக!!**

வாழ எழுவோம். அதுவே வல்லமை மிகுந்தது.

## உலக நிகழ்வுகள்

# நோர்வே தமிழ்ச்சங்கத்தின் விளையாட்டுப் போட்டி

நோர்வே தமிழ்ச் சங்கத்தால் வருடாவருடம் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டும் யூலை மாதம் சனி, ஞாயிறு தினங்களில் பெரு சிறப்பாக நடைபெற்றன. சுற்றுப் போட்டிகளில் கீழ் உள்ள கழகங்கள் தமிழீழ வெற்றிக்கான சுற்றுக்கிண்ணத்தை கைப்பற்றின.

கரப்பந்தாட்டம் Over Game ஓயாத அலைகள் விளையாட்டுக் கழகம்.

கரப்பந்தாட்டம் Setup- தமிழ் விளையாட்டுக் கழகம்.

உதைபந்தாட்டம்

9 வயதிற்குட்பட்டோர் - ஸ்ரோவ்னர் தமிழ் விளையாட்டுக்கழகம்

12 வயதிற்குட்பட்டோர் - தொய்யன் தமிழர் விளையாட்டுக்கழகம்

15 வயதிற்குட்பட்டோர் ஸ்ரொவ்னர் தமிழ் விளையாட்டுக்கழகம்


22 வயதிற்குட்பட்டோர் - பங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்


பொது - ஸ்ரொவ்னர் தமிழ் விளையாட்டுக்கழகம்

மெய்வல்லுநர் போட்டிகள் 24.07.99 Oslo வில் உள்ள Stovner மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. பிரதமவிருந்தினர் திரு. அருசலோ சினல் அவர்கள் தமிழ்ச் சங்கக் கொடியை ஏற்றிவைக்க தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. சதானந்தன் ஆனந்தகரன் அவர்கள் நோர்வே நாட்டுத் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து அகவணக்கம் நிகழ்த்தப்பட்டது. பின்னர் அனைத்து விளையாட்டுக்கழகங்களும் சேர்ந்து தமிழீழ வெற்றிக்கான தீபத்தை ஏந்தி மைதானத்தைச் சுற்றி ஓடிவந்து இறுதியில் ஸ்ரொவ்னர் தமிழர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வத்துரை இதயருபன் அவர்களால் வெற்றித்தீபம் ஏற்றிவைக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

200 போட்டியாளர்கள் போட்டிகளில் பங்கு பற்றினார்கள். போட்டிகளில் வெற்றி பெற்ற வீர -வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம், நோர்வேயின் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளரால், ஆரம்பித்துவைக்கப்பட்டது. நிர்வாக உறுப்பினர்களும், மத்தியஸ்தர்களும் ஊப்பு வெள்ளை சீருடையணிந்து காணப்பட்டனர். போட்டிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமாகி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன.





தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் உணவகங்களும் கோரிக்கை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. பல நூற்றுக்கணக்கான மக்கள் இந்த நிகழ்ச்சியை கண்டுகளித்ததுடன், தமிழீழத்தில் நின்றது போன்ற ஒரு மன நிறைவுடன் வீடு சென்றதைக் காண முடிந்தது. விழா தலைவர் உரை, பிரதமவிருந்தினர் உரையைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவத்துடன் நிறைவு பெற்றது.

# சுவிஸ் சிறீ கிருஷ்ணர் ஆலய தேர்த்திருவிழா

சுவிஸ், சூரிச் நகரில் அமைந்திருக்கும் சிறீ கிருஷ்ணர் ஆலய தேர்த்திருவிழா கடந்த 1ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. மாலை நான்கு மணியளவில் சூரிச் பெல்வீல் ஆற்றங்கரையோரமாக ஆரம்பித்த தேர்ப்பவனி ஆறுமணியளவில் ஆற்றங்கரையின் இன்னொரு பகுதியை சென்றடைந்ததும் முடிவுற்றது. நூற்றுக்கணக்கான கிருஷ்ணா பக்தர்கள் இத் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் சுவிஸ் நாட்டினை சேர்ந்த ஏராளமான கிருஷ்ண பக்தர்களும் கிருஷ்ணா பக்திப் பாடல்களை இசைத்துச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# 'தீ... மழை..' பரீட்சை தொடருமா?

நீண்ட நாட்களாக பல விளம்பரங்களின் பின் சுவிஸ் நாட்டில் திரையிடப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 17.06.99 பாரிசில் திரையிடப்பட்ட 'தீ மழை' திரைப்படத்தைப் பார்வையிடச் சென்றவர்கள் பலத்த ஏமாற்றத்துடனேயே திரும்பி வந்தனர். புலம்பெயர் நாடுகளில் ஏற்கனவே பல திரைப்படங்கள் வெளிவந்திருந்தாலும், திருநீழ்கரன்வை பொன்னையன் அவர்களின் மூன்றாவது படைப்பு இது.

'தீ-மழை' எனத் தலைப்பிடப்பட்டிருந்த இப் படத்தில் கதை அல்லது திரைக்கதை என்று சொல்வதற்கு எதுவுமே இல்லை. இந்தக் கதையின் கரு என்ன? இது சொன்ன செய்தி என்ன என்பது கேள்விக்குறியே.

அடுத்தது வசனம். வசன அமைப்புக்கள் பேச்சுத் தமிழிலும், எழுத்துத் தமிழிலும் இடையிடையே நாடகப் பாணியிலும் அமைந்திருந்தது. பின்னணிக் குரலுக்கும் வாய் அசைவுக்குமிடையே பல இடங்களில் வித்தியாசம் தெரிந்தது. வசனங்களில் கருத்துக்களைத் தெளிவாக விளங்கும்படியும் அளவைச் சுருக்கியும் நடிப்பில் மெருகேற்றி இருக்கலாம்.

படம் தொடங்கியதிலிருந்து இறுதிவரையில் ஒளி அமைப்பில் கொஞ்சமேனும் கவனம் செலுத்தப்படவில்லை. உட்புற, வெளிப்புறக் காட்சிகள், அருகாமைக்காட்சி (குளோஸ்ஷொட்) தொலைவுக்காட்சி (லோங்ஷொட்) என எல்லாக் கோணங்களிலுமே ஒளி அமைப்பின் அவசியம் பேணப்படாமலேயே இருந்தது.

ஒலி அமைப்பு நன்றாய் இருந்தது. 21/2 மணிநேரப் படத்தில் பாடல்கள் இல்லாமை குறையே என்றாலும், ஒருவேளை அப்படி இல்லாமல் இருந்ததும் நன்றோ?

ஒப்பனை (மேக்கப்) கவனிக்கப்படவில்லை. பெரிய அளவிலேயே தவறுகள் விடப்பட்டிருந்தது. 8,10 வயதில் வரும் மகன் 18 வயது தாண்டியும் அவனின் தாயாரில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. இது சிறு உதாரணமே.

இத் திரைப்பட இயக்கத்தில் நிறைய நிறைய குறைபாடுகளே. பல இடங்களில் கவனயீனமாக விடப்பட்ட தவறுகள். அதீத நம்பிக்கையே என்று எண்ணத் தோன்றுகின்றது.

புலம்பெயர்ந்து பிரான்ஸ் வருவதற்கு வந்த ஒருவர் தற்செயலாக சுவிஸ் நாட்டில் தங்கிவிட, தொழில் வாய்ப்புக்கள் சரியாக அமையாததால் சந்தர்ப்ப வசமாக எழுத்தாளராக தீ என்னும் பெயரில் பத்திரிகை ஒன்றைத் தொடங்குவதும்(நாட்டில் அவர் எழுத்தாளராம்), அதில் தன் சொந்தக் கதையையே தீ மழை என்று தொடராக எழுதுவதும், பயணமுகவரின் தொடர்ந்த பிரச்சினைகளும், தனது கலை பண்பாடுகளை தனது மகன் சரியாகப் பின்பற்றவில்லை என்று எழுதுவதையே பாதியிலேயே நிறுத்துவதுமாக கதையோட்டம் தப்பி; எங்கெங்கோ அலைந்து, கடைசியில் மகன் தன்னைப் பாதுகாக்க ஒருவனைக் கொலை செய்துவிட, குற்றத்தைத் தான் ஏற்றுக் கொண்டு மகனைத் தொடர்ந்து எழுதச்சொல்லுவதுமாய் முடிகிறது.

•வேளையும் வீடுமாக மற்றவர்களால் 'சேர்' என மரியாதையாக அழைக்கப்படும் கதாநாயகன் பத்திரிகைத் தொழிலுக்கு வருவதற்கு முன் ஒரு எரிபொருள் நிலையத்தில் தொழில் செய்வதும், பயண முகவரின் சூழ்ச்சியினால் வேலையில் இருந்து நீக்கப்படுவதுமாக ஒரு காட்சி. 'வேலை சரி'யென்று நிறுத்தப்பட்டிருந்த போது ம்..ம்.. என உறுமியபடி கோபாவேசமாக மேலங்கிகளைக் கழற்றி எறிந்துவிட்டு வெளியில் வரும்போது சோர்ந்து விடுவதுடன், அத்தனை வேகத்திற்கு வேறு வேலை தேடியிருக்கலாம். தெனிவற்ற பாத்திரப்படைப்பு.

• ஊரில் இருந்து புறப்பட்டதில் இருந்து சுமார் 8,10 வருடங்களிற்கு நடைபெறும் கதையில் (ஒப்பனை) எந்த மாற்றமுமில்லாத கதாநாயகி..

•தமிழை, தமிழ்க் கலை பண்பாட்டை வெறுக்கும் இவர்களின் மகன்.

•சாரதியாக மாத்திரம் அமர்த்தப்பட்டவர் போல் இடையிடையே வந்துபோகும் மகள்.

•பணத்திற்காக எதையும் செய்யக்கூடிய பயண முகவர், அவரின் தம்பி (வில்லன்)

•பத்திரிகைக் காரியாலயத்தில் கதாநாயகனை 'சேர் சேர்' எனச் சுற்றிவரும் அலுவலகர்.

இவர்களுடன் இடையிடையே வந்துபோகும் இன்னும் சிலர்...

கதாநாயகன் குடும்பமாக ஒரு சுற்றுலா போகின்றார். படகில் பயணிக்கும் குடும்பத்தில் எவர் முகத்திலும் சுற்றுலாவிற்கான சந்தோஷம் இல்லை. திரும்பிவந்த படகு தானாகவே கரையில் கட்டப்பட்டுவிடுகிறது (மஜிக்). இறங்கிய பின் தூரத்தில் தனது மகள் தனது கல்லூரி நண்பர்களுடன் கைகொடுத்து பேசியதைக்கண்டு கோபப்பட்டு, அவளை அவ்விடத்திலேயே விட்டு விட்டு மனைவியையும், மகனையும்! அழைத்துக் கொண்டு வீடு திரும்புகின்றார். தாயோ சகோதரனோ ஏன் அப்பெண்ணை விட்டு வருகின்றோம் என்று சும்மாகூட ஒரு கேள்வி கேட்கவில்லை. இதில் அவள் செய்த பெரிய (?) குற்றம் ஆண் நண்பர்களுக்குக் கை கொடுத்தது. ஒரு பெண்ணை பண்பாட்டு ரீதியான விமர்சனத்திற்குள்ளாக்குவதற்கான 'வலுப்போதாத' உத்தி.

வீட்டில் நடைபெறும் சமயச் சடங்குகளைக்கூட வெறுப்பவன், தமிழ் படிக்க விரும்பாதவனாகவே காட்டப்படும் பெண், கடைசிவரை அதே மினா ஓட்டத்துடன் இழுத்துச் செல்லப்படுவது வெறும் 2 1/2 மணி நேரத்தை நிரப்புவதற்காகவா?

படத்தின் இடையில் சுமார் 15,20 நிமிடத்திற்குத் தொடர்ந்து டொச் மொழியில் வரும் உரையாடலுக்கு எந்த விளக்கமும் தரப்படவில்லை. வெளிநாட்டவர் பண்பாடுகளில் சிறந்ததாக எவ்வளவோ விடயங்கள் இருக்கையில், தாய் தன் இள வயது மகளுக்கு கருத்தடை மாத்திரை கொடுத்து அனுப்புவதை மாத்திரம் ஒரு பெரிய செய்தியாக்கிச் சேர்க்கப்பட்டிருந்தது.

பயண முகவரின் தம்பியான வில்லன் இப்பெண்ணைத் துரத்தித் துரத்திக் காதலிப்பதாகச் சொல்வதும், இவளை அடைய முயல்வதுமாக இறுதியில் வீட்டினுள்ளேயே புகுந்துவிட, இவள் கத்தியால் குத்திவிடுகின்றாள். உள்ளே சத்தம் கேட்கிறது. வாக்குவாதம் நடைபெறுகிறது. ஆனாலும் வெளியில் இருந்து வந்த தாயும் தந்தையும் எந்தப் பதட்டமும் இன்றி வாசலிலேயே நிதானமாக நிற்கின்றனர். கொலை செய்து முடிந்தபின் ஆவேசமாக தன் மகளை கத்தியோடு பார்த்தபின்தான் தந்தைக்கு தன் மகளின்மீது நம்பிக்கை வருகிறதாம்! அவள் கற்புடன்தான் இருக்கின்றாள் என்று?!

தன்னைக் காத்துக்கொள்ள கொலை செய்தால் சட்டத்தில் தண்டனை மிகக் குறைவு. அப்போதாவது சட்டத்தை அணுகுவதுபோல் படத்தை முடித்திருக்கலாம். அதைவிட்டு மகளின் கையில் இருந்த கத்தியைப் பிடுங்கிய கதாநாயகன் மகனிடம் பேனாவைக் கொடுத்து, 'நான் விட்டதை இனிமேல் நீ தொடர்ந்து எழுது' (மகனுக்குத் தமிழ் தெரியாதுஎன்றுவிட்டு), சுவரில் மாட்டப்பட்டிருந்த புலிகள் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த தேசியத் தலைவரின் படத்தின் முன் கைகளைக் கத்தியுடன் உயர்த்தி சரணடைகின்றார். இது என்ன விளையாட்டு? தான் மாத்திரமல்ல பார்வையாளர்கள் அனைவருமே முட்டாள்கள் எனும் ரீதியில் வெளிவந்துள்ள இப் பரீட்சை இனியும் தொடருமா?

படத்தில் தீ பத்திரிகையில் திருபர்கலையமுத்து ஒரு கூட்டம் நடத்தப்படுகின்றது. சினிமா பற்றிய விமர்சனம் எழுதுவோருக்கு அதில் சில விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருந்தது. விமர்சனம் படைப்புக்களை வளர்த்துவிட வேண்டுமேயொழிய அழித்துவிடக்கூடாது என்பது போல்!!

எமது விமர்சனமும் அதே நோக்கிலேயே!

— ஓவியா

# பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்

பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 20.08.99 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி பூஜையைத் தொடர்ந்து ஸ்ரீ வரலக்ஷ்மி விரத விஷேட பூஜை நடைபெறவுள்ளது. இந்த உத்தமமான விரதத்தினை சுமங்கலிப் பெண்கள் யாபேரும் அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் வீட்டில் அஷ்ட லக்ஷ்மிகளுடைய கடாட்சமும் நல்ல சௌபாக்கியங்களும் உண்டாகும். ஆடி அல்லது ஆவணிமாதம் வரும் பூர்வபக்க பௌர்ணமிக்கு முன்வரக்கூடிய வெள்ளிக்கிழமையன்று இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். சுமங்கலிகள் இந்த விரதத்தை அனுஷ்டிப்பதால் சகல சம்பத்தும் பெற்று சௌபாக்கியங்களுடனான புத்திர, பௌத்திர அபிவிருத்தி குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியசித்தி பெற்று மகிழ்வர். எனவே இந்த விசேட வரலக்ஷ்மி விரத பூஜையில் பங்குபற்றி விரத நூலினைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஆலயத்துடன் (தொலைபேசி 01 40 38 30 75) தொடர்புகொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.


# மீண்டும் டெண்டுல்கர் தலைவர்



நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளின் 'Super Six' போட்டிகளில் தோல்வியை தழுவிய இந்திய அணியின் தலைவராக இருந்த மூகமட் அசாருதீன் நீக்கப்பட்டு, அணியின் புதிய தலைவராக மீண்டும் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார். 1989-ல் தமிழகத்தின் சிரீக்காந் தலைமையில் பாகிஸ்தான் சென்ற இந்திய அணியில் குட்டிச் சிறுவனாக 16 வயதில் இடம்பிடித்த டெண்டுல்கர் பல இமாலய சாதனைகளைப் புரிந்து உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரனாக இன்று உயர்ந்திருக்கிறார். வயதில் குறைவாக இருந்தும் துடுப்பாட்டத்தில் தூள்கிளப்பும் டெண்டுல்கர் 1996ம் ஆண்டு இந்திய அணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது இந்திய அணியின் வெற்றிகள் மந்தமாகக் காணப்பட்டதுடன் டெண்டுல்கரின் துடுப்பாட்டத்திலும் சிறு தொய்வு தோன்றியது. இவைகளைக் கருத்தில்கொண்டு அனுபவமான முதிர்ந்த வீரன் அசாருதீனே அணித் தலைமைக்கு தகுந்தவர் என்று அவரையே மீண்டும் இந்திய அணித் தலைவராக்கினர். இப்போது புதிய அணித் தலைவர் ஒருவரை தேர்வுசெய்யவேண்டிய நிலைக்கு ஆளான இந்திய அணி தேர்வுக்குழு பலரை நாடிபிடித்துப் பார்த்ததிலிருந்து டெண்டுல்கரை மீண்டும் தலைவராக்குவது சிறந்தது என முடிவு செய்தது. 26 வயதை நிரம்பிய டெண்டுல்கர் 68 டெஸ்ட் போட்டிகளில் பங்கெடுத்து 19 சதங்களுடன் 5177 ஓட்டங்களையும் 218 ஒருநாள் ஆட்டங்களில் ஆடி உலக சாதனையாக 22 சதங்களுடன் 8054 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

முதலில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு வருங்காலத்தில் இந்திய அணியின் வெற்றிகளின் நாயகனாக டெண்டுல்கர் திகழுவாரா? அன்றி புதிய தலைமையால் சுமைகளைக் கூட்டி தனது துடுப்பாட்டத் திறமையை மழுங்கடித்து சிறந்த அணியாக்கித் திண்டாடுவாரா? என்று பலரும் ஆதங்கப்படுவதை வரவிருக்கும் கொழும்பில் நடைபெறும் முத்தரப்புப் போட்டிகள், சிங்கப்பூரில் நடைபெறும் முத்தரப்புப் போட்டிகள், ஐரோப்பியில் நடைபெறும் நான்கு நாட்டுப் போட்டிகள்தான் நல்ல முடிவைக் காட்டக்கூடியன. புதிய தலைமையில் கீழ் உள்ள வீரர்களின் பெயர்ப்பட்டியலை 06.08.99 இந்தியத் தேர்வுக் குழு அறிவிக்கவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# முதல் இரு இடங்களும் ஃபறாறி வசம்



இவ் வருடத்தின் 10-வது முக்கிய கார் ஓட்டப் பந்தயம் (Formula-1) 01.08.1999 அன்று ஜேர்மனி ஹொக்கைம் நகரில் நடைபெற்றது. ஃபறாறியின் பல வெற்றிகளுக்கு ஓட்டுனராக இருந்த சூமாக்கர் தனது சொந்த தேசத்தில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டாலும் ஃபறாறியின் வெற்றி இரட்டிப்பாகவே பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போல ஃபறாறியின் தற்போதைய முன்னணி ஓட்டுனர் சர்வைனுக்கும், மக்லேறன் ஓட்டுனர் ஹக்கினன் அவர்களுக்குமே பெரும் போட்டி நிலவியது. ஆனாலும் அப்போட்டி முடிவு வரை தொடரவில்லை. இடையில் ஹக்கினனின் மக்லேறன் தடம் புரண்டதால் அவரால் தொடர்ந்து ஓடமுடியவில்லை. இந்நிலையில் ஃபறாறியின் மற்றொரு ஓட்டுனர் சாலோவுக்கும் சர்வைனுக்கும் இறுதிவரை முதலாம் இரண்டாம் இடங்களுக்கான போட்டி இருந்தது. இவ்வாறு ஃபறாறிகளுக்கிடையிலான ஒரு போட்டியை பார்த்துக்கொண்டிருந்த ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் சர்வைன் முதலாம் இடத்தையும் சாலோ இரண்டாம் இடத்தையும் தட்டிச்சென்று ஃபறாறிக்கு இரட்டைச் சந்தோஷத்தை கொடுத்தனர். இதற்கிடையில் யோர்டானை ஓட்டிய ஃபிறன்ஷன் மூன்றாம் இடத்தை எடுத்துக் கொண்டார். இவ்வெற்றி மூலம் சர்வைன் இவ்வருடத்திற்கான சம்பியன் சுற்றுப்போட்டியில் முதல் நிலைக்கு உயர்ந்திருக்கிறார். அத்துடன் ஃபறாறியின் செல்வாக்கும் பெருமளவு மேலெழுந்திருக்கிறது. தொடர்ந்து 11வது ஆட்டமாக 15.08.99 ஹங்கேரியில் நடைபெறவுள்ளது. இதில் மீண்டும் சூமாக்கர் கலந்துகொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை நடைபெற்ற 10 ஆட்டங்களிலிருந்து பெறப்பட்ட முடிவுகளின்படி ஓட்டுனர், கார்களின் புள்ளிநிலைகள் வருமாறு:

| | ஓட்டுனர் | புள்ளி |
|---|---|---|
| 1) | சர்வைன் | 52 |
| 2) | ஹக்கினன் | 44 |
| 3) | ஃபிறன்ஷன் | 33 |
| 4) | சூமாக்கர் | 32 |
| 5) | குல்தார் | 30 |

| | கார் | புள்ளி |
|---|---|---|
| 1) | ஃபறாறி | 90 |
| 2) | மக்லேறன் | 74 |
| 3) | யோர்டன் | 38 |
| 4) | வில்லியம்ஸ் | 22 |
| 5) | பெனற்றன் | 16 |

# ஐரோப்பிய நீச்சல் சம்பியன் போட்டிகள்

துருக்கி இஸ்தான்பூல் நகரில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய நீச்சல் சம்பியன் (EM) போட்டிகளில் பெண்களுக்கான 50 மீற்றர் போட்டியில் ஓர் புதிய உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியின் சந்திரா வோல்கர் 28.71 செக்கன்களில் இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார். 0.07 செக்கன்களால் தனது முன்னைய சாதனையை முறியடித்துள்ளார் சந்திரா. 01.08.99 வரை கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி முதல் 10 இடங்களும் அவர்கள் பெற்ற பதக்கங்களும் பின்வருமாறு:

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|
| 1) | ஜேர்மனி | 12 | 14 | 11 |
| 2) | ரஷ்யா | 11 | 09 | 05 |
| 3) | நெதர்லாந்து | 9 | 2 | 2 |
| 4) | உக்ரேன் | 5 | 3 | 3 |
| 5) | சுவிடன் | 3 | 5 | 3 |
| 6) | பிரித்தானியா | 3 | 4 | 6 |
| 7) | பிரான்ஸ் | 3 | 3 | 6 |
| 8) | ஹங்கேரி | 3 | 1 | 1 |
| 9) | இத்தாலி | 2 | 4 | 7 |
| 10) | ருமேனியா | 2 | 4 | 3 |

# மெக்சிக்கோ - பிரேசில் இறுதியாட்டம்



மெக்சிக்கோவில் நடைபெற்றுவரும் Confederation Cup உதைபந்தாட்டப் போட்டியில் 8 நாடுகள் இரு குழுக்களாகக் கலந்துகொள்கின்றன. முதலில் நடைபெற்ற குழுத் தெரிவில் ஒவ்வோர் குழுவிலிருந்தும் இரண்டு நாடுகள் தெரிவாகி அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியில் மெக்சிக்கோவும் அமெரிக்காவும் ஆடியபோது போட்டி நேர முடிவு வரை எவரும் கோல் போடாததால் மேலதிக நேரம் கொடுக்கப்பட மெக்சிக்கோ வீரன் பிளங்கோ ஒரு கோலைப் போட்டு மெக்சிக்கோவின் இறுதியாட்டத்தை உறுதிசெய்தார். மற்றொரு அரையிறுதியாட்டத்தில் பிரேசில் சவுதி அரேபியாவை 8:2 என்று தோற்கடித்து இறுதியாட்டத்திற்கு தெரிவானது.

இப்போட்டிகளில் பங்குபற்றும் 8 நாடுகளில் ஒன்றான மூன்று தடவை உலகச் சம்பியன் ஜேர்மனி பிரேசிலிடம் 4:0எனவும் அமெரிக்காவிடம் 2:0 எனவும் தோல்வியைச் சந்தித்தால் தனது மேற்கொண்டு ஆடும் சந்தர்ப்பத்தை இழந்தது.


# Lernen sie Deutsch

Deutsch Für Tamilen-இலக்கணம் -10 DM

Deutsch-Tamil -Englisch Wörterbuch ஜேர்மன்-தமிழ்-ஆங்கில அகராதி

**A-M - 15 Dm**

**N-Z - 15 Dm**

P.THANGARAJAH

Neckar Str 1/2, 68766 Hockenheim

Tel + Fax: 06205 17412

Bank Nr.660 8327, Bez Sparkasse Hockenheim, BLZ 670 512 03

**விஜுஷா கபே ஆதரவில் கருமாரி மூவிஸ் வழங்கும்**

பாடல்கள்

கிரேசிமோகன்

பழனிபாரதி

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்

வசந்

நடிகர்கள்

சூரியா

விஜயகுமார்

நாசர்

ராஜீசுந்தரம்

வடிவேல்

கோவை சரளா




சனி 07/08/99
6.15 - 9.15

ஞாயிறு 08/08/99
6.15 - 9.15

திங்கள் 09/08/99
8.00

இடம் : ESPACE CINEMA
AUBERVILLIERS QUATRE CHEMINS
M° : Quatre Chemins

தொடர்புகளுக்கு
01 48 38 54 65
06 16 39 20 57

# ஐ.நா.வை நோக்கிய அமைதிப் பேரணி

## உலகத் தமிழர்களே அணிதிரள்வோம்

### 09.08.99 திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஐ.நா.வை நோக்கி

★ தமிழீழ மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான இன அழிப்பை உடன் நிறுத்த வழிகோலும் வகையில் ஆக்கிரமிக்கப் பட்ட தமிழீழப் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றக்கோரியும்.....

★ தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டத்தையும் தன்னாட்சி உரித்தையும் அங்கீகரித்து நிலையான தீர்வு ஏற்படுவதற்கு சர்வதேச அரசுகள் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கக்கோரியும்....

★ தமிழின அழிப்பிற்காக உலக நாடுகளிடம் அபிவிருத்திக்கென சிறீலங்கா கோரும் உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குவதை நிறுத்தக்கோரியும்....

★ சிறீலங்காவின் போர்ச் சூழலே தமிழீழ மக்களைப் புலம்பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதியாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கவும்.

**சுவிஸ் ஜெனிவாவில் ஐ.நாவை நோக்கிய அமைதிப் பேரணியில் இணைந்துகொள்வோம் வாருங்கள் !**

ஜெனிவா அமைதிப்பேரணியில் ஜேர்மனி, பிரான்ஸ் (பாரிஸ், லியோன் நகரங்களிலிருந்து), நெதர்லாந்து தமிழர்களும் இணைந்துகொள்வதற்காக போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எனவே ஜெனிவா பேரணியில் இணைந்துகொள்ள விருப்பமுடையவர்கள் எதிர்வரும் 30.07.99 இற்கு முன்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனி, நெதர்லாந்து பணியகங்களுடனும், பிரான்ஸ் (பாரிஸ், லியோன்) வாழ் தமிழீழ மக்கள் – பிரான்ஸ் தமிழர் கூட்டமைப்புடனும் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:
1. ஜேர்மனி – 02166551074
2. பிரான்ஸ் – 0143581142 அல்லது 0140383074
3. நெதர்லாந்து – 070 34 61 963 அல்லது 065 27 18 604

*21ம் நூற்றாண்டில் தமிழீழத்தை நோக்கி உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் ஐ.நா.வை நோக்கிய அமைதிப் பேரணி*
*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்–சுவிஸ் பணியகம்*



# திருமலையில் கண்ணிவெடி 4 சிப்பாய்கள் பலி

(02.08.99)

திருமலை மாவட்டத்தின் சலப்பையாறு பகுதியில் சிறீ லங்கா இராணுவ அணியொன் றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் நான்கு சிப் பாய்கள் பலியாகி மேலும் இவர் காயமடைந்துள்ளனர். நேற்று முன் தினம் காலை எட்டு மணியள வில் நடைபெற்றுள்ளது. வீதி ரோந்துசென்ற இராணுவ அணி யொன்றின் மீதே புலிகள் இத் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலை ஒத்துக் கொண்டுள்ள சிறீலங்கா இரா ணுவத் தரப்பு இராணுவத்தின ரும் திருப்பித் தாக்கியதால் புலி களில் பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். ஆயி னும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி இதுவரை தெரியவரவில்லை.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் மக்களின்.......

டாக நீலன் திருச்செல்வம் இருந்த பக்கம் தெரிந்ததெப்படி என்ற சந் தேகத்திற்கு இன்னும் விடைகிடைக்க வில்லை. இது லலித் அத்துலத் முதலி கொலை பாணியிலான தாக் குதல் எனக்கூட கருத நியாய முண்டு. நீலன் மீது தாக்குதலை அரசகூட நடாத்தியிருக்கலாம். இன் னும் ஓரிருமாதங்களில் அமெரிக்க ஹவாட் பல்கலைக்கழகத்திற்கு பணி புரிவதற்காக நீலன் செல்ல இருந்த நேரத்தில் அவர் கொலை யுண்டமை என்றும் சந்தேகத்தினை வலுப்படுத்துகிறது. எது எப்படியோ நீலனின் அரசியல் பாதையைத் தெரிந்துகொண்டு தாக்குதல் நடாத் தப்பட்டிருக்குமானால் அதற்கெதி ரான காரணங்களை காண்பது மிகக் கடினமானது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னிக்கான.......

இந்த நிலையில் மீண்டும் பாதை திறப்புப் பற்றி சிக்கல்கள் எழுந்துள் ளன. பயணிகளுக்கான போக்குவ ரத்திற்கும் அத்தியாவசியப் பொருட் களின் வழங்கலுக்கும் இப்பாதை திறப்பின் அவசியம் பற்றி கருத் துக்கள் நிலவுகின்றன. ஆனால் கடந்த காலங்களில் இராணுவத் தினர் செயற்பட்டது போலத்தான் இப்பாதை திறப்பிலும் இலாபத் தைப் பெற்றுக்கொள்வார்கள் என் பது விடுதலைப்புலிகளுக்கு நன்றா கத் தெரியும். இராணுவம் வன்னிக் கான பாதைத்திறப்பு தற்பொழுது இரு விடயங்களைக் கணக்குப் போட்டுள்ளது. முதலாவது இப் பாதையினூடாக விடுதலைப்புலிக ளின் இதயப்பகுதியை அண்மித்து விடலாம் எனவும் திறக்கப்பட்ட வீதி யூடாக தனது கனரக வாகனங் களை இலேசாக நகர்த்தி அதன் பின்னர் அப்பால் இராணுவ நட வடிக்கையை மேற்கொள்வது என் பவை அவை ஆனால் விடுதலைப் புலிகள் இராணுவத்தின் இந்நோக்கங் களை விளங்கிக்கொள்ளாத நிலை யில் இல்லை என்பதும் இராணுவத் தின் இவ்வாறான எண்ணங்களுக்கு பதிலடி தருமுகமாகவே அவர்களது நடவடிக்கை இருக்குமென்பதில் ஐயமில்லை.

(38ம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கையில்.......

சிறீலங்காவில் இந்தியப்படையி னரின் நடவடிக்கைகளையும் கார்கிலில் இந்தியப் படையின ரின் நடவடிக்கைகளையும் பற்றித் தெரிவித்தபோதே கல்யத் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்திய அமைதிகாக்கும் படை 90ம் ஆண்டு மார்ச் மாதம் விலக்கப் பட்டதன் பின்னர் அந்த நிகழ்வு ஞாபகத்தில் இருந்து அழிந்து போனாலும் சில உண்மைகள் சந்தேகத்திற்கு இடமில்லாதவை. 1200 இந்தியத் துருப்புக்கள் இலங் கையில் உயிரிழந்தனர், 3000 பேர் காயமடைந்தனர் எனவும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள் ளார்.

# வன்னி உணவுத்தடைக்கு கண்டனம் தெரிவிக்க த.அ. கூட்டமைப்பு கோருகிறது

(02.08.99)

வன்னியில் வாழும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக் களை பட்டினிச்சாவிற்கு தள்ளும் நோக்குடன் உணவு, மற்றும் மருந்து தடையுடன், மக்களின் போக்குவரத்து பாதையினையும் சிங்கள அரசும் படைகளும் மூடி வைத்துள்ள செய்கையினை உல கின் கவனத்திற்கு தெரிவித்து சிறீ லங்கா அரசின் இந் நடவ டிக்கை உலக சட்டங்களுக்கு எதி ரானது எனவும் போர்க் குற்றங் களில் அடங்குவதாகவும் காட் டுவதற்காக அனைத்து மக்களை யும் அனைத்து பிரான்ஸிலுள்ள தமிழ் அமைப்புக்களின் கூட்ட மைப்பு கோருகின்றது.

வன்னி நிலைமை தொடர் பாக அறிக்கை ஒன்றினை வெளி யிட்ட இவ் அமைப்பு, புலம் பெயர்ந்து வாழும் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் இதுகுறித்து ஐநா. செயலாளர் நாயகம், ஐநா. மனித உரிமை ஆணையாளர், ஐநா அகதிகள் ஆணையாளர் ஆகியோருக்கு முறையிட்டு மனு ஒன்றினை கையொப்பமிட்டு அனுப்புமாறு வேண்டியுள்ளது. இதற்கான முறையீட்டு மனுவி னையும் அவ்வமைப்பு தயாரித் துள்ளது. மேலதிக விபரங்க ளுக்கு 01.40.38.30.74.

(38ம் பக்கத் தொடர்ச்சி)

## உணவை.......

பிரார்த்தனைகள் நடைபெற்றன. இப்பிரார்த்தனையுடன் கூட்ட மும் இடம் பெற்றது. அதே வேளை கூட்டம் நடைபெற்ற இத் தேவாலயத்தைச் சுற்றி சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டிருந் தன. சுவரொட்டிகளில் 'புதைக் கப்பட்ட மனித மிருகங்கள் விடு தலைபெற வேண்டும்', 'நீதியின் தேவனே வரவேண்டும்', 'நிம்மதி வாழ்வில் தரவேண்டும்', 'வேண் டும் நீதியும் நியாயமும் வேண் டும்' போன்ற வாசகங்கள் எழு தப்பட்டிருந்தன.

இதேவேளை வன்னி மக்க ளுக்காக யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மாணவர் பேரவை யினால் இன்று மாலை சர்வம தப் பிரார்த்தனை ஒன்று நடா-த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வன்னிக்கான பாதை திறக்கப்பட வேண்டும். மக்கள் பசி, பட்டினி அபாயத்திலிருந்து காப்பாற்றப்படவேண்டும்எனக் கோரி இந்தச் சர்வமதப் பிரார்த் தனை ஏற்பாடு செய்யப்பட்டுள் ளதாக மாணவர் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்துள்ள னர்.

(38ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்நாட்டிற்கு.......

இத்தலைய சதி வேலைகளுக் கான குழுவொன்று தமிழ்நாட் டிற்குள் நுழைந்ததை தென் செய்தி பத்திரிகை ஏற்கனவே சுட்டிக்காட்டியது தெரிந்ததே.

## கிரகணத்தை வெறும் கண்களினால் பார்க்க வேண்டாம்

இந்த நூற்றாண்டின் இறுதி சூரிய கிரகணம் எதிர்வரும் 11ம் திகதி மதி யம் ஏற்படவுள்ளது. 12.11 (பிரான்ஸ் நேரப்படி)-ற்கு ஆரம்பிக்கும் கிரக ணம் 12.13 வரை நீடிக்கும். இச் சூரிய கிரகணத்தை வெறும் கண்களால் பார்க்கவேண்டாம் என மருத்துவ அதி காரிகள் எச்சரித்துள்ளனர். குறிப்பாக சிறு குழந்தைகள் இச் சூரிய கிரக ணத்தை விசேட கண்ணாடிகள் ஊடாக பார்ப்பதிலும் சற்று அவதானம் எடுக்க வேண்டும்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

உதயம்: 03.02.1934



அஸ்தமனம்: 04.07.1999

### அமரர் திரு.கதிரித்தம்பி பொன்னுத்துரை

(மீசாலை, வாகையடி)

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தில்'

உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள் ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உறவினர்கள்.

கடந்த 10.07.99-ல் நோர்வேயில் விண்டலூட் நகரில் நடைபெற்ற இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு எம் மைத் தேற்றியவர்களுக்கும் தொலைபேசி மூலமும், கடித மூலமும் எம்மை ஆற்றியவர்களுக்கும் எமது நன் றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: மக்கள் மருமக்கள் - நோர்வே
- A. Subramaniam (மைத்துனர்)
67 Rue Claude Bernard,
95870 Bezons,
France.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 01.08.1965



ஆண்டவன் திருவடியில்: 06.08.1995

### தங்கவேல் கிருஸ்ணகுமார் (குமார்)

(பருத்தித்துறை)

நாளை வருவாய் என எதிர்பார்த்து
நான்காண்டைக் கடந்துவிட்டோம்
எம் மனதை வருத்திச் சென்றவனே
என்று வருவாய் என ஏங்குகிறோம்.
துயரக் கடலில் தத்தளிக்கும்

அன்புக் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: குடும்பத்தினர்
தொலைபேசி: பாரிஸ்: 01 55 30 08 35
ஜேர்மனி: 0049 17 24 51 37 80
0049 98 31 20 76


SAJI COM

தொலைபேசி அழைப்பில் அதிக இலாபத்தை அடையுங்கள்





உலகை உங்கள் கைகளில் தருவது

சாயி கொம்

தொடர்புகளுக்கு:
Tel: (33) 06 68 47 26 03
(33) 06 83 85 13 62

Pub.

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64


Réseau
WWA
உலகம் உங்கள் கைகளில்


King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் 45 நிமிடம் (N° Local) – 27 நிமிடம் (N° vert)
92, Rue de Bellville, 75020 Paris
(M° :Pyrénées)
Tel: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
KING Telecom
33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51
அனைத்துத் தொடர்புகளுக்கும் 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

# உணவை போர் ஆயுதமாக பயன்படுத்த கூடாது சிறீலங்காவிற்கு யாழில் வணபிதாக்கள் கண்டனம்

(02.08.99)

உணவைப் போர் ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது. இது சர்வதேச விதி. ஆனால் எமது இனத்தை அழிக்க பொருட்களை மட்டுமல்ல, போக்குவரத்துப் பாதைகளையும் தடைசெய்து ஒரு இன அழிப்பையே ஏற்படுத்துகிறது சிறீலங்கா அரசு. வன்னியில் உள்ள குழந்தைகளைப் பலவீனமாக்குவதே சிறீலங்கா அரசின் இந் நடவடிக்கையின் நோக்கமாகும். இவ்வாறு பலவீனமான எதிர்காலத்தை ஏற்படுத்தி தமிழர்களை அழிப்பதற்கு நாங்கள் இடமளிக்க கூடாது. சிறுபான்மை சமூகத்தை இவ்வாறு பாழடிக்க நாம் அனுமதியோம், என வன்னி மக்களுக்கான இறையருள் வேண்டி இன்று யாழ். மரியன்னை ஆலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையின் பின் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். வணபிதா செல்வராஜா உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் வன்னியில் இன்று அடிப்படைப் பொருளாதார மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. வன்னி தற்போது முற்றாக மூடப்பட்டுள்ள ஒரு பிரதேசம்.

கடந்த ஜூன் 26ம் திகதி முதல் வன்னிப் பாதை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மக்கள் அங்கு அடிமைகளாக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக குழந்தைகளுக்கு பால்மா, மருந்து வகைகள் இல்லை. பனடோல் கூட இல்லை. அஸ்மா நோயாளிகளுக்கு மருந்து இல்லை. இந் நிலையில் பொருட்களின் விலை யேற்றம் பன்மடங்காக அதிகரித்துள்ளது. சீனி 100 ரூபாவிற்கு மேல் விற்கப்படுகிறது. மண்ணெண்ணெய் 250 ரூபா முதல் 300 ரூபா வரை விற்கப்படுகிறது. போக்குவரத்துத் தடை படிப்படியாக மனிதப்பேரழிவை வன்னியில் ஏற்படுத்தி வருகின்றது எனவும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய வணபிதா ஜெயசீலன் அவர்கள், யாழ்ப்பாணத்தில் எமக்கு சுதந்திரம் இல்லை. அடக்கப்பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தான் கிறிஸ்தவம் குரல் கொடுக்கும். இந்த வகையில் வன்னி மக்களுக்கு நாம் உதவவேண்டும் எனத் தெரிவித்தார். இவ்வைபவம் நேற்று காலை 10 மணி முதல் 12 மணி வரை இடம் பெற்றது. முதலில் 11.30ற்கு கத்தோலிக்கத் திருச்சபை பிரார்த்தனையை நடாத்தியது. அதனைத் தொடர்ந்து 12 மணிவரை ஏனைய கிறிஸ்தவ மதத்தினர் பிரார்த்தனையை நடாத்தினார்கள். வன்னி மக்களுக்காக இறைவனை வேண்டுதல் எனும் அடிப்படையில் இப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொழும்பில் பத்து தற்கொலை குண்டுதாரிகள் - சிறீலங்கா அரசு

கொழும்பு நகரில் தாக்குதல்களை நடாத்துவதற்கென பத்து தற்கொலை குண்டுதாரிகள் உலாவுவதாக சிறீலங்கா அரசு தனது புலனாய்வுத்துறையை ஆதாரம்காட்டி செய்திவெளியிட்டுள்ளது. கொழும்பில் நடாத்தப்பட்ட நீலன் திருச்செல்வம் மீதான தாக்குதலை அடுத்தே இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது. இக் குண்டுதாரிகளை கண்டுபிடிப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக சிறீலங்காவின் உளவுத்துறை அதிகாரிகள் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளியன்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுரத்தை ரத்வத்தை தலைமையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மாநாடொன்றும் நடாத்தப்பட்டுள்ளது. கொழும்புப் பகுதிக்கான நடவடிக்கைகளின் தளபதி மேஜர் ஜெனரெல் கசில் சந்திரபால நகரில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளார்.

## தமிழ்நாட்டிற்கு சதி முயற்சி மாணிக்கதாஸன் குழு மீது சந்தேகம்

இந்தியாவில் நாசவேலைகளைப் புரிவதற்காக மாணிக்கதாஸன் தலைமையிலான குழு உட்புகுந்துள்ளதாக இண்டியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளர் அறிவித்துள்ளார். கொழும்பில் இருந்து சிங்கப்பூர் சென்ற லைனியாவில் இராணுவத்துடன் இருந்து செயற்பட்ட புளொட் தலைவர் மாணிக்கதாஸன் அங்கிருந்து இந்தியாவிற்குள் உள்நுழைந்துள்ளார்.

பாக்கிஸ்தான் உளவு நிறுவனங்களுடனும் சிறீலங்கா இராணுவத்துடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள மாணிக்கதாஸன் முன்பு புதுடெல்லியிலும் பிற இந்தியத் தலைநகர்களிலும் குண்டுகளை வெடிக்க வைக்க முயன்றார் ஆயினும் இந்திய உளவுத்துறை இத் திட்டத்தை முறியடித்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணிக்கதாசனின் 17 உறுப்பினர்கள் கொண்ட மெய்ப்பாதுகாவலர் குழுவொன்று ஜூன் 15ம் திகதி தமிழ்நாட்டிற்குள் ஊடுருவியதாகவும் மதுரையில் இக்குழுவினர் சந்தித்துக் கொண்டதாகவும் தெரிவித்த செய்தியாளர் சுவிஸில் ஒருபடுகொலை நடவடிக்கையை புரிந்தார் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## யாழ். யுவதி செக். குடியரசில் மர்ம மரணம்

(02.08.99)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லெபோன் ஜூசிந்தா என்ற இளம் பெண் உக்ரெயினில் இருந்து செக் குடியரசிற்கு வரும்வழியில் மர்மமான முறையில் கடந்த சனியன்று (31.07.99) மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவரது மரணம் குறித்து பயண முகவர்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டதாகவும் இவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதி ஒன்றில் இவர் மரணமாகியதாக ஒரு முகவரும், காட்டுப்பாதையூடாக நடக்கும்போது மயங்கிவிழுந்து மரணமடைந்ததாக இன்னொரு முகவரும் முரணாக தெரிவிப்பதால் இவரது மரணம் குறித்து உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இப்பெண் பிரான்சில் திருமணம் செய்யும் நோக்குடன் வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் அமைதிப்படை இருந்தபோது இந்தியாவில் ஆதரவு இருக்கவில்லை ஆனால் கார்கில் நிலைமை அப்படியல்ல—கல்கத்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து இலங்கைக்கு சென்ற அமைதிப்படை அங்கு விடுதலைப் புலிகளுடன் மோதிய போது இந்தியப்படைக்கு எதிராகவும் இந்திய அரசின் தீர்மானங்களுக்கு எதிராகவும் குரல்கள் இந்தியாவில் ஒலித்தன. இந்நிகழ்வு இலங்கையில் இருந்த இந்தியப் படையினரை மனரீதியில் பாரதூரமாக பாதித்தது ஆனால் இன்று அதே இந்தியப்படையினர் கார்கிலில் போராடும்போது முழு நாடுமே இந்தியப்படையின் பின்னால் நிக்கிறது. கடல்கடந்து உயிரிழந்த படையினரை நினைவு படுத்தும் விதத்தில் எந்தவொரு அரசாங்கமும் ஒரு சிறு ஞாபகார்த்த கல்லைத்தானும் நடவில்லை.

இவ்வாறு இந்திய அமைதிப் படைக்கு தலைமைதாங்கிய ஓய்வுபெற்ற தளபதி லெப்ஜெனரெல் ஏ.எஸ்.கல்கத் இந்திய சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றின் போது தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM Hbf), 44137 Dortmund-Tel: 0231-162377-Fax:49-231-147836

★ ஜேர்மனியில் தரத்திற்கும் தாராள தேர்விற்கும் உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்கும் ஒரே ஒரு ஸ்தாபனம் O.T.S.–1 பவுண் விலை 134 S.D வரி கூலி உட்பட 172 DM இல் இருந்து.

★ பழைய பொன் நகைகளைக்கொடுத்து உடனடியாகவே புதிய பொன் நகைகளை புன்நகையுடன் மாற்றிப் பெறுவதற்கு O.T.S. பட்டுக்கூறை, பட்டுப்புடவை, பட்டுவேட்டி, பஞ்சாபி, சுடிதார், காகிறாச்சோலி, ரெடிமெட் ஆடைகள், பரதநாட்டிய உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் வாத்தியக் கருவிகள் தெரிவிற்கு O.T.S



Pub தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!! உரிமையாளர்: ச.ஜெகதீஸ்